# புதிய நோக்கில் திருவாசகம்



மணிவாசகர் பதிப்பகம்

தமிழண்ணல்

# புதிய நோக்கில் திருவாசகம்

தமிழண்ணல்

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல்பதிப்பு : டிசம்பர், 2004
திருவள்ளுவர் ஆண்டு : 2035
உரிமை : ஆசிரியர்க்கு
**விலை : ரூ. 40.00**
மணிவாசகர் வெளியீட்டு எண் : 1146

நினைவில் வாழும்
நிறுவனர்
**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச்செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :
**மணிவாசகர் நூலகம்**
12-B, மேல சன்னதி, சிதம்பரம்- 608001. ✆:230069
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108. ✆:25361039
5, சிங்காரவேலுதெரு, தி. நகர், சென்னை-600017. ✆:24357832
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001. ✆:2622853
15, ராஜ வீதி, கோயமுத்தூர்-641001. ✆:2397155
28, நந்தி கோயில் தெரு, திருச்சி-620002. ✆:2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021,
தொலைபேசி : 25954528

# காணிக்கை!



கனியையும் வெல்ல வல்ல
கவின் மிகு சிரிப்பு, நல்ல
பனிமலர் போலும் உள்ளம்
பதிப்புச் செம்மலாக வந்தீர்!
இனிவரும் காலம் எல்லாம்
கனிவரும் காலம் என்பீர்
கனிவரும் காலத் தெம்மைக்
கலங்கவைத் தெங்கு சென்றீர்?

புதியஎன் நோக்கில் வார்த்த
புலமைசால் திருவாசகத்தைப்
பதிப்பிக்கத் தருக என்றீர்!
தருமுனம் பறந்து சென்றீர்,
புதிப்பித்துத் தந்துளேன்உம்
புகழ்மிகு திருவடிக்கண்
மதுமலர்ப் படையல் செய்தேன்
மனமுவந்து ஏற்க வேண்டும்!

— தமிழண்ணல்

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | ......... | 5 |
| 2. | நூன்முகம் | ......... | 7 |
| 3. | திருவாசகத்தின் உட்பொருள் | ......... | 11 |
| 4. | ஞான நாடகம் | ......... | 37 |
| 5. | பொய்யடிமை இல்லாத புலவர் | ......... | 139 |

# முன்னுரை

## முனைவர் **சுப. அண்ணாமலை**

உரைநூற் காலம் ஒன்று இருந்தது. தத்துவ விளக்க நூற்காலம் ஒன்றும் இருந்தது. இன்று நடப்பது திறனாய்வு நூற்காலம். நூலின் திறனை அகநோக்கிலும் புற நோக்கிலும் ஆய்ந்து அறிவிக்கும் காலம். காலத்தின் இவ்வியல்பிற்கு ஏற்பத் திருவாசகத்திற்குப் புதிய திறனாய்வு ஒன்றைப் படைத்துள்ளார் தமிழண்ணல்.

புதுவயல் சிவநெறிச் செம்மல் திரு. யெ. மு. சொக்கலிங்கனார், தம் அருமை மைந்தரின் நினைவாக நிறுவியுள்ள அறக் கட்டளையின் வழி, 1986ஆம் ஆண்டில் **தமிழண்ணல்** நிகழ்த்திய இரண்டு சொற்பொழிவுகள் நூல் வடிவு பெற்றுள்ளன. சைவத் திருமுறைகள் பற்றியே சொற்பொழிவு அமைதல் வேண்டும் என்ற சொக்கலிங்கனார் விருப்பப்படி, இச் சொற்பொழிவுகளுக்குத் திருவாசகம் பொருளாகியது.

'புதிய நோக்கில் திருவாசகம்', 'பொய்யடிமை இல்லாத புலவர்' என்னும் தலைப்புக்களில் பொழிவுகள் நிகழ்ந்துள்ளன. 'புதிய நோக்கில் தமிழ் இலக்கியம்' என்னும் தலைப்பில், தமிழிலக்கிய வரலாற்றைப் புதிய சிந்தனையுடன் நூலாகத் தந்துள்ள தமிழண்ணல், அவ்வழியிலேயே திருவாசகத்தையும் கண்டு, நமக்கும் காட்டுகின்றார்.

மேனோக்கு நோக்குவார்க்குத் தேவாரம் போலப் பதிகக் கோவையாகத் தோன்றும் திருவாசகம், ஊன்றி நோக்குவார்க்கு, ஒருமை இழையிற் கோத்த பன்மைப் பாமாலையாக விளங்கு வதை - தொடர்பும் தொடர்ச்சியும் இயைபும் இணைப்பும் உடைய பதிகங்களின் கோவையாக விளங்குவதை - கவிதையுள்ளத்தோடு தமிழண்ணல் எடுத்துக்காட்டுதல் பாராட்டுதற்குரியது. இப்பாடல் களைத் தோத்திரப் பாடல்களாக மட்டுமன்றித் தொடர்ந்து செல்லும் கதை முழுமை காட்டும் காப்பியப் பார்வையுடனும் அணுகலாம் - என்று தமிழண்ணல் ஒரு புதுச் சிந்தனையை எழுப்புகின்றார். காப்பியம் என்றால் புறத்தே நிகழும் நிகழ்ச்சிகளின் ஒருமைப்

பட்ட வடிவம் மட்டுந்தானா? உள்ளத்தின் உள்ளே ஓராயிரம் நிகழ்கின்றனவே! அவற்றின் ஒருமைப்பட்ட வடிவமாகவும் இருத் தலாகாதோ? என்ற புது நாட்டத்தைத் திருவாசகக் கவிதைகளில் நாடி அறிய வேண்டிய கடமையை அறிமுகப்படுத்துகின்றார்.

திருவாசகத்தில் காணக் கூடிய அக வரலாறு மாணிக்கவாசகரின் அக வளர்ச்சி - அகப் பக்குவ வரலாறுதான். அதனைத் தமிழண்ணல், 'ஞான நாடகம்' என்ற தலைப்பில் காட்சி, பிரிவு, வேட்கை, ஞானம் என்ற நான்கு பிரிவுகளில் மிக்க நயம்பட எடுத்துக்காட்டு கின்றார். திருவாசகத்தில் எந்தப் பாடலைத் தொட்டாலும், அது நெஞ்சுருக்குவது மட்டுமல்ல; அந்நூல் முழுவதும் உள்ள முழுமை வரலாற்றுடன் தொடர்பு கொண்டிருப்பதும் ஆகும் என்று திறம்படக் காட்டுகின்றார்.

'பொய்யடிமை இல்லாத புலவர்' என்னும் இரண்டாவது கட்டுரை, மறைமலையடிகள் முன்பு உரைத்த கருத்திற்கு அரண் செய்கின்றது. ஆயின் அவரைப் போலத் தமிழண்ணல் கால ஆராய்ச்சியில் புகவில்லை. இறைவனுக்கு ஆட்பட்ட பிறகு எவ்வளவு சோதனைகள் வந்தாலும், அவ்வடிமைத்திறம் பொய் யாகாமல், சோதனைகளை எல்லாம் தாங்கி இறையன்பில் முறுகி நின்ற மாணிக்கவாசகரின் இயல்பையும் அவரைப் போன்ற அடியார்கள் பலரையும் அவர் அடிக்கடி குறிப்பிட்டு, "திரண்டு திரண்டு உன் திருவார்த்தை விரிப்பார்" - என்றும் "அவ்வடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்றும் இன்னும் பலவாறு கூறுவதால், அவர்களின் இயல்பையும் நன்கு ஆராய்கின்றார். பொய்யடிமையில்லாத புலவர் என்று சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகரையும் அவரனைய அடியார்களையுமே குறிப்பிட்டார் என்று மீண்டும் நிறுவ முயன்றுள்ளார்.

தமிழை ஆயும் உரை ஒவ்வொன்றும் அமிழ்தம். திருமுறைத் தமிழை ஆயும் உரை அமிழ்தினும் இனிது. இவ்வினிமையை நுகர நமக்கு அளித்த தமிழண்ணலையும், அதற்கு வாய்ப்பாக அறக்கட்டளை அளித்த சைவ அண்ணலையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

# நூன்முகம்

சங்க இலக்கியத்தில் ஆய்வு செய்ததனாலும், அதில் இயல்பாக ஈடுபாடு இருந்ததனாலும் யான் என்னைச் சங்க இலக்கிய மாணவன் என்று கூறிக் கொள்வதுண்டு. ஆயினும் தமிழிலக்கியத்தில் மனத்தை ஈர்க்கக் கூடிய பகுதிகள் பல உளவாதலின் அவற்றில் எனக்கு ஆர்வமுண்டு. அதனால் சங்கப் பாடல்களைப் போல, அவற்றையும் கற்க வேண்டும் என எண்ணுவதுண்டு.

அத்தகையவற்றுள் திருவாசகமும் ஒன்று. அதனைப் படிக்க வேண்டும் என்ற அவாவை இப்பொழிவு நிறைவேற்றி வைத்தது. இப்பொழிவிற்கு முன் எனக்குத் திருவாசக அறிமுகம் மட்டுமே உண்டு; இப்போது சிறிது பழக்கமும் உண்டாகியுளது.

1986ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22, 23 வெள்ளி, சனி நாள்களில் யான், யெ.மு.சொ. முத்தப்பன் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகளைச் சென்னை, தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் நிகழ்த்தினேன். அவற்றுள் 'திருவாசகம் ஒரு புதிய நோக்கு' என ஆற்றிய இரண்டாம் பொழிவு, இப்பொழுது விரிவு படுத்தப்பட்டு, முதலில் இடம் பெற்றதுடன் நூலின் தலைப்பும் ஆயிற்று. இன்னொரு பொழிவு 'பொய்யடிமை இல்லாத புலவர்' என்பது. அறிஞர் பெருமக்கள் பலர் வந்திருந்து, ஐயப்பாடுகளைக் கிளப்பினர். அவற்றால் கருத்தினை வளர்த்துக் கொண்டேன்.

இந்நூலுள் திருவாசகம் ஒரு காப்பியம் எனப் புதிய பார்வை காட்டியுள்ளேன். மேலும் தன்வரலாற்றுக் காப்பியம், ஆன்மக் காப்பியம், அன்பின் மாக்கதை, உயிரின் உய்திக் காதை என்றெல்லாம் காட்ட முயன்றுள்ளேன். திருவாசகத்திலுள்ள தன் வரலாற்று அகச்சான்றுகள் தொகுக்கப்பெற்று, வகுக்கப்பெற்று, வரலாற்றை உணர்த்தும் முகமாக வரன்முறைப் படுத்தியுள்ளேன்.

தன் அருமருந்தன்ன மகன் **யெ.மு.சொ. முத்தப்பன்** பெயரால் நிறுவிய அறக்கட்டளையில், என்னை முதல் சொற்பொழிவாற்ற வைத்த **யெ.மு. சொக்கலிங்கம்** அவர்கட்கும் அவர்தம் துணைவியார் **திருமதி சரோஜா சொக்கலிங்கம்** அவர்களுக்கும் மனம் கனிந்த நன்றியுடையேன்.

**டாக்டர் சுப. அண்ணாமலை** அவர்கள் அணிந்துரையால் இது பெருமை பெறுகிறது. சைவ இலக்கியத்தில் ஆழ்ந்த புலமையுடையாரின் அணிந்துரையைப் பெறுவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

சோமலெ அவர்கள் என் பங்காளி; உடன்பிறவா அண்ணன். இவ்வறக் கட்டளைப் பொழிவுக்கு வந்திருந்து, கேட்டு முதல்நாள் இரவு நெடுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வாழ்த்திச் சென்றார். இன்று அவர் இல்லை. மனத்தால் நினைந்து போற்றுகிறேன்.

✪ ✪ ✪

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி! *(4– 164, 165)*

சிவன் தென்னாட்டவர் கடவுள் என்ற பதிவு இது. 'வேதங்கள் தேடியும் காணாதவன்' என வருவன, வட மொழியில் உருத்திரன், இந்திரன், பிரஜாபதி எனப் போற்றும் இடங்களே மிகுதி என்பதை உணர்த்துவன. தக்கன் தன் வேள்வியில், சிவனை அழைக்க வில்லை எனும் தொன்மம், வடமொழி வேத வேள்விகளில் சிவன் அழைக்கப் பெறாதிருந்த, பழைய நிலையையே உட்பொருளாக உணர்த்துகிறது. பிற்காலத்தே, வேறு வழியின்றி, மக்களின் தெய்வ மாகிய சிவனை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது - அதுவும் வருமானம் கருதி - வடவர் ஏற்க வேண்டியதானது என்பதே உண்மை. திருஞான சம்பந்தர், வேள்வி செய்யப் பொன் கேட்டு வந்த தம் தந்தை யாரிடம் 'சிவவேள்வி செய்க' எனக் கூறுதலும் காண்கின்றோம்.

வடமொழி வேத வைதிகமும் தமிழர் சிவனிய மாலியங்களும், புத்த சமண சமயங்களை நீக்குதற் பொருட்டு அமைத்த, 'கொள்கை இல்லாக் கூட்டணி'யே, சிவனைப் பெரிதும் போற்றுமாறு, அந்தணர்களை அடிப்படுத்தியது. எனவே 'சிவன் தென்னாட்டான், தென்பாண்டி நாட்டான்' என வரும் திருவாசக அடிகள் சிறப்புடையன.

✪ ✪ ✪

மாணிக்கவாசகர் ஆதிசைவ மரபினர் எனும் ஆய்வும் உளது. சிவாச்சாரியார், பட்டாச்சாரியர், குருக்கள், பட்டர், ஆதிசைவர் என அழைக்கப்படுவார் அனைவரும் பிற பிராமணர்களினின்றும் வேறுபட்டவர்கள். இவர்கள் அப் பிராமணர்களுடன் கொள்வினை, கொடுப்பினை கூட இல்லாத தனிமரபினர்; தமிழ் மரபினர்.

திருஞானசம்பந்தர் வேத வேள்வி மரபினராக இருந்தும், தமிழ்ச் சிவ வேதியராக மாறியதாலேதான், அவருக்குத் தனி மதிப்பு தரப்பட்டது. புத்த சமண மதங்களை அவர்போல் வெறுத்துப் பாடியவர் பிறர் எவருமிலர். தமிழின்மீது ஆறாத பற்றுக்கொண்டு,

அவர் 'தமிழ் ஞான சம்பந்தன்' ஆனது, அப் புறச் சமயங்களை வெருட்டவேயாம். ஆனால் அவருக்குப்பின், இன்று வரை, அவ்வாறு தமிழையும் தமிழர் சமயங்களையும் பயன் படுத்திக் கொண்டு, அச் சமயங்களை இங்கு காலூன்ற விடாது தடுத்த இப் பிராமணர்கள், தங்களுக்கு உதவிய தமிழைத் திருக்கோயில்களுக் குள் விடாமலும் தமிழரை மூளைச் சலவை செய்து, அவர்களுடைய பக்தியையே முதலீடாக்கிப் பணம் குவித்து, தமிழ்ப் பண்பாட்டைச் சீர்குலைத்து வருவன, முற்றிலும் 'நன்றிகொல்லும்' செயலாகும்.

✪ ✪ ✪

இந் நிலையில் தூய தமிழ் அந்தணரான மாணிக்கவாசகர் பற்றித் தவறான செய்திகளுடன், பல புராணங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. எனினும் திருவாசகம் தூய தமிழ் மறை என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. அவரது போற்றித் திரு அகவலும் சிவபுராணமுமே சிவனாரை அருச்சிக்க முழுத் தகுதியுடயனவாகும்.

✪ ✪ ✪

நாம் ஒருவரது உதவியைப் பெற, அவரிடம் சென்று, நம்மை யாரென அறிமுகப்படுத்திக்கொண்டு, நம்பிக்கையை உண்டாக்கி அதனை அடைய முயல்கின்றோம். ஆனால் மாணிக்கவாசகர் வரலாற்றில், இறைவன் தானே வந்து, குருந்தமரத்தடியில், மாணிக்கவாசகரை அழைத்து, அவருக்கு அருளுரை வழங்கி ஆட்கொள்கின்றான்.

> வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
> போது, நான் வினைக்கேடன் என்பாய் போல
> இனையன் நான் என்றுன்னை அறிவித்து என்னை
> ஆட்கொண்டு எம்பிரானானாய்... *(5–22)*

எங்கோ கிடந்தாராம்; அங்கே இறைவன் புகுந்து நின்று உள்ளே வந்து, 'போது' (வா) என்று அழைத்தாராம். தம்மை 'வினைக் கேடன்' (வினையை நீக்குபவன்) என அறிமுகம் செய்து, தம்மை இன்னாரென அறிவித்து ஆட்கொண்டாராம்.

இதுவே இந்நூலில் இழையோடும் காதல் அனைய கருவுக்கு அடித்தளமாகும்.

✪ ✪ ✪

மாந்தர் காதல் அரும்புவதற்கு, முன்னைய வினைத்தொடர்பே காரணம் என்பது தொல்காப்பியம்.

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப;
மிக்கோனாயினும் கடிவரை இன்றே *(1039)*

பால், ஊழ் - என்ற தமிழ்ச் சொற்கள் இயற்கை 'நியதி'யை உணர்த்துவன. அவ்வாறான, ஓர் இயற்கை அமைவால் காதல் விளைகிறது என்றும் கூறலாம்.

மாணிக்கவாசகர், திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் சிவனாரே குருவாக வந்திருக்கக் கண்டதும், அவர் இவரைக் கொண்டதும் மானுடக் காதலை நினைவூட்டுகின்றன. இதனை ஊழ்வினைப் பயனெனக் கருதவும் இடமுண்டு. இதனால் அவர் தம்மை இழந்தார்; தம் நாமம் கெட்டார்; தலைப்பட்டார் தலைவன் தாளில்!

அதனால் ஏற்பட்டதொரு சிக்கல்; குதிரை வாங்க மன்னன் தந்தனுப்பிய பொன், கோயில் கட்டவும் அடியார் பணி செய்யவும் பயன்பட்டுவிட்டது.

இதனாலேற்பட்ட நிகழ்வுகளின் படப்பிடிப்பே, திருவாசகம். அதனால் இதனை, ஒரு காதற் காப்பியப் புனைவு எனலாம் என இந்நூல் விளக்குகிறது.

இதனுள் இவ்வாறான சில புதிய பார்வைகள், இலக்கியக் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றன. இந்நூல் யான் நிகழ்த்திய ஓர் அறக்கட்டளைப் பொழிவின் வழி, உருவாகியது. இதனைப் புதிய செம்பதிப்பாக வெளியிட விரும்பி, பதிப்புச்செம்மல் **ச. மெய்யப்பர்**, இறுதியாக என் வீட்டிற்கு வந்து சென்றபோது, கூறினார். அவர் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இப்போது அவருடைய திருமகனார் ச.மெ. மீனாட்சி சோமசுந்தரமும், மேலாளர் இராம. குருமூர்த்தியும் இதனை வெளியிடுகின்றனர். நினைதொறும் நினைதொறும் என் கண்முன் நிழலாடும் அத்திருவுருவச் செம்மல், 'சொன்னதுபோல் நிறைவேற்றி விட்டீர்களா?' என்று என் தோளைத் தட்டிக் கேட்பதுபோல் இருக்கிறது. 'நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே' என்பது மணிவாசகம். அதன் வெளிப்பாடே இந்த நூலாக, உருப்பெற்று உங்கள் கைகளில் தவழ்கிறது.

எரகம்,
மதுரை 625020

**தமிழண்ணல்**

# 1. திருவாசகத்தின் உட்பொருள்

சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்
சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப்
பணிந்து (1:92-95)

சொல்லுதற்கரியவனைச் சொல்லில் வடித்துணர்த்த முயல்வது திருவாசகம். ஆன்ம அனுபவம் என்ற மெய்ப் பாட்டை விளைவித்து, ஆழ்மனத்தில் சிவனை உணர வைக்கும் திருப்பாட்டு அது. சொல்ல முடியாததைச் சொல் வதற்கு இலக்கிய உத்திகளும் பயன்படுகின்றன. 'செயற் கரிய செய்வாரே பெரியார்' அல்லவா? அரியதென்று, அடையக் கூடிய எதனையும் நாம் விட்டுவிடுவதில்லையே? இறைவன் நாம் தேடி அடையக்கூடிய எதனிலும் சிறந்தவனெனில், அத்தகையவனை அடைவதற்காக அவனை உணர்த்த முயல் வது இயற்கைதானே?

உலக இறைமை-பக்தி நூல்களெல்லாம் சொல்லுதற் கரியவனைச் சொல்லிக் காட்டவே முயல்கின்றன; காட்டுதற் கரியவனைக் காட்டவே முற்படுகின்றன; உணர்தற்கரிய வனை உணர்த்தவே முற்படுகின்றன. அவற்றில் அவை தோல்வி கண்டாலும், அவையே வெற்றியாக விளைவதை எண்ணிப் பார்த்தால் வியப்படைவோம்.

நீரில் குளிர்ச்சியும் நெருப்பில் சூடும் காற்றில் மென்மை யுமிருப்பன கண்ணிற் படுவதில்லையல்லவா?

'இனிப்புப் பண்டம்' செய்யும் முறையை அறிவீர் களா? கற்கண்டை உடைத்துப் பொடியாக்கி, மாவில் சேர்த்து அடித்துக் குழைத்து உருட்டிச் செய்ததோர் உருண்டை அவ்வினிப்புடன் கலந்து, முற்றிலும் அதன் மயமாதல்

போல் இச்சீவன் என்ற சுவையற்ற மா, சிவன் என்ற அக்காரம் (இனிப்பு) தீற்றப்பட்ட கதையைத் திருவாசகம் பேசுகிறது.

அடியேனை, அடித்தடித்து அக்காரம் முன் தீற்றிய அற்புதம் அறியேனே (41:3)

திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரை இறைவன் பல சோதனைகட்கு ஆட்படுத்தித் தன்அருளை அருளிய திறம் இது. அவ்வாசகம் தன்னைப் பயில்வாரையும் இங்ஙனம் 'அடித்தடித்து (உருகச் செய்து)' சிவனாகிய அக்காரம் தீற்றி விடுகிறது. எனவேதான் இப்பாட்டின் பொருளை உணர்ந்து, பாடலைப் பாடியவர்கள் சிவபுரம் செல்வர்—சிவமயமாவர் என்று கூறப்படுகிறது. சிவனடிக்கீழ்ப் பலரும் ஏத்தப் பணிந்து என்றென்றும் இருப்பர் என்பதும் அங்ஙனம் சிவமயமாதலையே—சீவன் சிவமாகி நிலை பெறுதலையே செப்புகிறது.

மெய்யியலை இலக்கணமாகச் சொல்லாமல் அனுபவமாகச் சொல்வது திருவாசகம். எனது இந்நூலும் திருவாசக நெறியிலேயே எழுதப்படுவதால், இதனுள் மெய்ப்பொருள் விளக்கங்கள், சித்தாந்தச் சொற்கள், இடம்பெறாமல் தவிர்க்கப்படுகின்றன. திருவாசகப் போக்கினை ஒட்டி, மன அனுபவப் போக்கில் எழுதப்பட்டுள்ளதால், முன்பு திருவாசகம் பயிலாதாரும் அதனை முறையுறப் பயின்ற பயனைப் பெற, இந்நூல் நல்ல துணையாகும்.

### பொருள் எது?

திருவாசகத்தின் உட்பொருள் பற்றி ஒரு தொன்மக்கதை வழங்குகிறது. தில்லையில் திருவாதவூரர் தம் இறுதிக் காலத்தில் வாழ்ந்த போது, அந்தணர் ஒருவர் போந்து தாம் தென்பாண்டி நாட்டிலிருந்து வருவதாகக் கூறினார்; திருவாதவூரர் பல காலத்தும் தாம் பாடிய பாடல்களை நினைவு

கூர்ந்து சொல்லச் சொல்ல ஏட்டில் எழுதிக் கொண்டு, திடீரென மறைந்தனர். பின்பு தில்லைக் கூத்தப்பெருமான் கோயில் சன்னதியில், ஓர் ஏடு இருக்கக் கண்டனர். அதில் ''திருவாதவூரர் சொற்படி திருச்சிற்றம்பலமுடையான் எழுதியது'' எனக் கையொப்பம் இருந்தது. மக்கள் எல்லாம் திரண்டு, அவ்வேட்டினை மாணிக்கவாசகரிடம் காட்டி, மகிழ்ச்சிப் பெருக்குடன் ''இதன் பொருள் யாது?'' என வினவினர்.

மாணிக்கவாசகர் மக்களனைவரையும் அழைத்துக் கொண்டு, கூத்தப்பெருமான் திருமுன் சென்று, அவ்விறைவரைக் காட்டி ''இவர்தாம் என் பாடல்களின் பொருள்'' எனக் கூறி, அங்கேயே மறைந்தருளினார்.

இத்தகு தொன்மக் கதைகள் ஆழ்மனம் உணர்த்தும் உண்மைகளை, உள்ளடங்கிக் கிடக்கும் பொருளால் உணர்த்துவன. இங்கும் அத்தகைய உண்மையே உணர்த்தப் படுகிறது. திருவாசகம் சிவனின் புராணத்தை—பெருமையை மிக விரிவாக, மிக நுட்பமாக விவரிக்கிறது.

### தேவாரமும் திருவாசகமும்

தேவாரம், திருவாசகம் அனைய தோத்திரப் பாடல்கள் சிவ முழுமுதலையே பாடுவன. அவற்றின் பொருள் சிவமே. எனினும் அச்சிவத்தை உணர்த்தும் திறத்தில் சிறு சிறு வேறுபாடுகள் உள. தேவாரம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற அடிப்படையில், பாடப்பட்ட பதி சார்ந்த வருணனைகளுக்குச் சிறப்பிடம் தருகிறது; திருவாசகமோ ஆன்மா, உயிர் இறையுடன் கொள்ளும் உறவுக்குச் சிறப்பிடம் தருகிறது. நாளும் சிவநெறியை நாட்டில் பரப்புவதற்காக, கால் நடையாகவும் சிவிகையின் மீதும் நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் அலைந்தலைந்து, சிற்றூர் பேரூர்தொறும் சென்று சென்று, இன்னிசையோடு எடுத்து முழக்கிய பண்ணிசைப் பாடல்களின் தொகையே தேவாரம். உயிர் இறை

வனோடு கொண்ட உறவில், ஓர் இடையறவு ஏற்பட்டு, அவ்வுயிர் பிரிவுத்துயர் தாங்காமல், தான் செய்த தவறு களுக்காக நெக்குருகி, வருந்தி, அழுது, அரற்றிய ஒரு பெருங்காப்பியமே திருவாசகம். தேவாரம் தமிழையும் தமி ழிசையையும் தமிழ்ப் பண்பாட்டையும் காக்கப் பிற மொழி, புறச்சமயங்களை மடைமாற்றித் தோன்றி, இறைமை உணர்வுக்கு இட்டுச் சென்றது. திருவாசகமோ மனித உயிரையும் வாழ்வையும் செம்மையாக்கி, சிவமாக்க முயல் கிறது. தனி ஒருவரது சிவ அனுபவம், உலகவுயிர்களுக் கெல்லாம் சென்று சேர்கிறது.

ஆம், இவ்வகையில் திருவாசகம் தனிப்பாடல்களின் தொகை நூலன்று; அஃதொரு காப்பியம். காப்பியமென் றால் அதற்கொரு கதை வேண்டும்; புறக்கட்டமைப்பும் அகக் கருத்தமைப்பும் வேண்டும்; தொடக்கமும் வளர்ச்சியும் நிகழ்ச்சிப் பின்னலும் முடிவும் வேண்டும்; நாடகப் பாங்கும் வருணனைத் திறமும் கதை கூறும் போக்கும் தொன்மப் பாங்கும் உள்ளுணர் குறிப்பும் இவற்றிற்கெல்லாம் மேலாக நூல் முழுவதும் உயிரென ஊடாடிக் கிடக்கும் ஒரு 'பாவிக மும்' அமைந்திருக்க வேண்டும். இவையெல்லாம் அமைந் திருப்பதால்தான், எனது இந்நூல் திருவாசகத்தைக் காப்பி யம் என நிலை பெறுத்த முயல்கிறது; காப்பிய நோக்கில் அதனை அணுகி ஆராய வழிகாட்டுகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் நோக்குக் கோட்பாடு, இதில் பொருந்தியிருப் பதை எடுத்துக்காட்ட இவ்வேடு முனைகிறது. திருவாச கத்தை முழுமை நோக்கில் வைத்து 51 பகுதிகளையும் 656 பாடல்களையும் ஒருசேரப் படித்து மகிழ வேண்டும்— பார்த்து ஆராய வேண்டுமே தவிர தனித்தனிப் பாடல்களை மட்டும் படித்து ஒய்தல் கூடாதென இந்நூல் தெளிவுபடுத்து கிறது. அஃதாவது முழுமை நோக்கில் திருவாசகத்தை கற்க வேண்டும் என்பது குறிப்பாகும்.

திருஞானசம்பந்தர் தலங்கள்தொறும் சென்று பதிகம் பாடினார். அங்குள்ள சிவபெருமானைப் புகழ்ந்து, ஏத்தித் துதித்து வழிபடுதலும், தம் பிறவித்துயர் நீங்குமாறு வேண்டு தலும் அங்ஙனம் பிறரும் இறைவனைப் போற்றி உய்யுமாறு கூறுதலும் என இவ்வாறு அப்பதிகங்கள் அமைந்திருக்கும்.

மண்ணில்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே

திருக்கழுமல நகரில் வீற்றிருக்கும் உமையொரு பாகனின் சிறப்பை உரைத்து, அவனை வழிபடும் உலகோரும் அங் ஙனம் நல்லவண்ணம் வாழலாம் என்று உபதேசிப்பது இப் பாடலின் கருத்தாகும்.

திருஞான சம்பந்தர் தம் திரு ஆலவாய்த் திருப்பதிகத் தில், ஆலவாய் அரனையே பாடுகிறார் எனினும், அதில் பின்னணி வரலாறு ஒன்றுள்ளது. சமணர்களை வெல்லும் திறன் இச்சிறு பிள்ளைக்கு உண்டோ எனப் பாண்டியன் தேவி மங்கையர்க்கரசியார் அச்சமுற்ற போது, அதனைத் தவிர்த்ததற்குப் பாடியது இத்திருப்பதிகம்.

மானின்நேர்விழி மாதராய்! வழுதிக்கு மாபெருந் தேவி! கேள்
பானல்வாய் ஒரு பாலன் ஈங்கிவன் என்றுநீ பரிவெய்தி டேல்!
ஆனைமாமலை ஆதியாய இடங்களில் பல அல்லல்சேர்
ஈனர்கட்கு எளியேனலேன் திருவாலவாய் அரன் நிற்கவே!

இங்ஙனம் வரலாறடங்கிய பாடல்களும் அவ்வப் பதிகத்துடன் பொருள் முடிவு பெறுகின்றன. சங்கப் பத்துப் பாட்டுள் வரும் ஒவ்வொரு பாடலும் தத்தம் அளவில் பொருள் முடிவு பெறுதல் போல், இப்பதிகங்களும் அமைந்துள.

திருநீலக்குடி என்பது பொன்னியாற்றங்கரையிலுள்ள திருப்பதிகளுள் ஒன்று. அங்கு சென்று இறைவனை வழி

பட்டுப் பாடிய பதிகத்தில், இறைவனை ஏத்திப் புனைந்து பாடி வரும் போது, இடையிலொரு பாடலில் தன் வரலாற்றுக் குறிப்பு ஒன்றையும் திருநாவுக்கரசர் சுட்டிச் செல்கிறார்.

கல்லி னோடுஎனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந்தேன் அன்றே

இங்ஙனம் இப்பதிகங்கள் எல்லாம் தம்மளவில் தனித் தனி அமைப்பும் முழுமையும் உடையனவாய், ஒன்றுக் கொன்று மிகுதியான இயைபற்றனவாய், இறைவனைப் பாடிப் பரவுதலாகிய ஒரே அடிக்கருத்தினால் கோக்கப் பட்ட தமிழ் மாலைகளாய் இலங்குகின்றன. இவற்றில் காணப் படும் புறவரலாறு தவிர, இப்பாடல்களிடையே காணப் படும் அகமனத் தொடர்பு, தன்னுணர்ச்சித் தொடர்பு மிகவும் செறிவானதன்று. இறை உயிர் உறவு திருவாசகத்தில் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடலாய்ப் பதிகந் தொறும் பாடல்தொறும் சொல்தொறும் அடைமொழி மற்றும் எழுத்துத் தொறும் காணப்படுகிறது.

திருவம்மானையில் மாணிக்கவாசகர் இறைவன் தானே வந்து தம்மை ஆட்கொண்டதைப் பாடி அம்மானை ஆடுகிறார்.

கேட்டாயோ தோழிகிறிசெய்த வாறுஒருவன்
தீட்டார் மதில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித்
தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார்கள் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான் கொண்டு ஆண்டவா பாடுதுங் காண்
அம்மானாய் (8:6)

(கிறி-தந்திரம், ஆள்தான் கொண்டு)

எட்டாவதாகிய இதிற்போலவே, இருபதாவது பதிகமாகிய திருப்பள்ளி எழுச்சியிலும் ஐந்தாவதாகிய திருச்சதகத்திலும் இன்னும் பல்வேறு இடங்களிலும் இத்திறம் பலவாறு திரும்பத் திரும்பப் பேசப்படுகிறது.

செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதும் காட்டி வந்து ஆண்டாய் (20:8)

காட்டாதன எல்லாம் காட்டிப் பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்தாட் கொண்டான் (5:28)

இங்ஙனம் இந்நூல் முழுதும் இறைவன் தானே வந்து, தன்னையே மனித உருவில் காட்டி, குருவாகி மெய்ப் பொருளைக் கூறி ஆட்கொண்டமையை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பாடியுள்ள திறம் உடலில் உயிர் விரவி நிற்பது போன்றதாகும். மேற்கண்ட கருத்தினையே, வேறொரு கோணத்தில் அடிகள் காட்டுமிடமும் இவண் கருதத்தக்க தாகும். பெரியவர்களிடம் ஏதும் வேண்டுமெனில், நாம்தான் அவர்களைத் தேடிப் போக வேண்டும்; தக்க செவ்வி பார்த்து, உட்சென்று, நம்மை யார் என்று அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும்; மேலும் அவர் தரும் வேலையைச் செய்யும் தகுதியும் திறமையும் உண்டென்று உறுதிப்படுத்த வேண்டும். ஆனால் இங்கு, துன்புற்று வினையிலே அமிழ்ந்து கிடந்த உயிரிடம் இறைவன் வருகின்றான்; தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கின்றான்; தன் திறமையை உறுதி செய்து, தானே காப்பாற்றுவதாய் அழைத்து ஆட்கொள் கின்றான்.

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
'போது' நான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்நான் என்றுஉன்னை அறிவித்து என்னை
ஆட்கொண்டுஎம் பிரான் ஆனாய்க்கு... (5:26)

4.2.

இறைவன் தானே வந்து அருளியமைதான் இவ்விறை அன்புக் காப்பியத்தின் தொடக்க நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி யொன்றே, இப்பனுவலுள் எங்கெங்கு, எவ்வெவ்வாறு எடுத்தோதப்பட்டுள்ளதென்று கற்பவர்கள், ஏனைய தேவாரத் திற்கும் மற்றுள்ள திருமுறைகட்கும் இது வேறுபடும் பாங் கினை நன்குணர்வர். சிலப்பதிகாரத்தில் காணப்படும் முப்பது கதைகளும் தம்முள் தொடர்புடையனவாதல் போலவே திருவாசகப் பதிகங்களும் காணப்படுகின்றன எனில் மிகை யாகாது.

**தொல்காப்பிய 'நோக்கும்' திருவாசகமும்**

தொல்காப்பியர் பல இலக்கியக் கோட்பாடுகளைத் தந்துள்ளார். எனினும் அவற்றுள் தலையாயது 'நோக்கு' என்ப தாகும். இதனை ஒரே ஒரு சூத்திரத்துள் அழுத்தம் பெறக் கூறியுள்ளார்.

> மாத்திரை முதலா அடிநிலை காறும்
> நோக்குதற் காரணம் நோக்குஎனப் படுமே (1361)

ஒரு பாடல் அல்லது நூலின் உறுப்புக்களையும் முழுமையையும் நோக்கியது இந்நூற்பா, அதன் வடிவமும் பொருளும் ஆகிய இரண்டையும் பற்றியது. நோக்குதல் என்பது உற்று நோக்குதல்; ஒரு பயன் கருதிப் பார்த்தல்; மறித்து நோக்கி ஆராய்தல், ஒப்பிட்டு நோக்குதல் என்று தமிழில் மிக ஆழமான விரிந்த பொருளுடையதாகும். அதற்கேற்பவே இக்கோட்பாடும் அமைந்துள்ளது.[1]

இதற்கு இளம்பூரணர் கீழ்வருமாறு விளக்கம் தரு கிறார்: ''அஃதாவது யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிது நோக்காது

1. *தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்: மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-1 (2004) என்னும் நூலில் இக்கோட்பாடு பற்றிய முழு விளக்கங்களைக் காணலாம்.*

அது தன்னையே நோக்கி நிற்கும் நிலை. அடிநிலைகாறும் என்றதனால் ஓரடிக் கண்ணும் பலவடிக் கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒரு நோக்காக ஓடுதலும் பல நோக்காக ஓடு தலும் இடையிட்டு நோக்குதலும் என மூன்று வகைப்படும்.''

இளம்பூரணர், ஒரு பாடல் அல்லது நூல் செயலொருமை உடையதாய் (Unity of action), கட்டுக்கோப்பு ஒருமையுடன் திகழ வேண்டும் என்பதையே இவ்வாறு விளக்குகிறார். ஒரு பண்ணை இசைக்கும் பொழுது, பிறிதொரு பண்ணின் சாயல்கூடபிசிறுபட இடைவிரவுதல் கூடாது; மேலும் அது தனக்குரிய களை முழுதும் கட்டி நிற்க வேண்டும். ஒரு பாடற்கருத்தும் அல்லது நூற்பொருளும் தொடக்கம் முதல் முடிவு வரை சொல்ல வந்ததையே நோக்கி நிற்க வேண்டும்.

இதற்குப் பேராசிரியர் தரும் விளக்கங்கள் மேலும் சிந்திக்கத்தக்கன: செய்யுள்கள் வழக்கியல்பினவாய் நோக்கி உணரப்படுவதொன்று இன்றி, வெள்ளைமையாய் எழுதப் படுதல் கூடாது. நோக்கு என்னும் உறுப்பைப் பெற்றால்தான் செய்யுளாகும். ''மாத்திரையும் எழுத்தும் அசைநிலையும் சீரும் முதலாக அடி நிரம்புந்துணையும் நோக்குடையவாகச் செய்தல் வன்மையால் பெறப்படுவது நோக்காகும். இது கேட்டார் மறித்து நோக்கிப் பயன்கொள்ளும் கருவியைப் பற்றியதாகும். ஒரு பாட்டின் ஓசை முதலியன எல்லாம் கேட்போரை மீட்டும் தன்னை நோக்கி நோக்கப் பயன்கொள நிற்க வேண்டும்.''

பேராசிரியரின் விளக்கத்தின்படி ஒரு செய்யுளின் ஒவ் வோர் உறுப்பும் பயனுடையதாக இருக்க வேண்டும்; அதன் பொருளுணர்ச்சிக்கு உதவுவதாக இருக்க வேண்டும். அவர் 'முல்லை வைந்நுனை' என்ற அகநானூற்று நான்காம் பாடலை எடுத்துக் காட்டி, அப்பாடலின் மையக் கருத்திற்கு, அதன் உறுப்புக்களான கருத்தலகுகள், அடைமொழிகள், தொடர் கள், உவமைகள், கற்பனைகள் யாவும் எவ்வாறு உதவு கின்றன என நுட்பமாகப் பொருத்திக் காட்டியுள்ளார்.

இந்நோக்கோடு நாம் திருவாசகத்தை அணுகும் பொழுது, அதன் முழுமைத் தன்மை நமக்குப் புலனாகிறது. ஏனைய பத்திமைப் பனுவல்களினின்றும் இது வேறுபடு கின்றமையை இந்நோக்கு உணர்த்துகிறது. நூலும், பதிகங் களும், அதனுள் இடம்பெறும் பாடல்களும், பாடற்கருத் தும் சொல்லாட்சியும் அடைமொழியும் அணியும் புராணச் செய்தியாம் தொன்மமும்கூட, எங்ஙனம் பயனுடையன வாக முழுமை நோக்கியும் மறித்து நோக்கி மகிழுமாறும் படைக்கப்பட்டுள்ளன என்பதை இந்நூலுள் காணலாம் (மறித்து நோக்குதல் – திருப்பித் திருப்பி, கேள்வி கேட்டு விடை காணுமாறு படித்தல்).

**கட்டுக்கோப்பும் தலைப்புக்களும்**

நூலின் அமைப்பு, பதிக வரிசை, தலைப்புக்கள், மெய்ப்பொருள் விளக்கத் தலைப்புக்கள் ஆகியவற்றுக்கு யார் காரணம் என்பது விளங்கவில்லை. தில்லையில் திரு வாதவூரர் மீண்டும் நினைவு கூர்ந்து கூற எழுதப்பட்டதென் பது உண்மையானால், இதன் அமைப்பு பொறுப்பு நூலா சிரியரையே சாரும். இப்போதுள்ள நிலையில் 51 பதிகங் கள்—தலைப்புக்கள் உள; மொத்தம் 656 பாடல்கள் கிடைக்கப் பெறுகின்றன. ''சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்'' *(1:19-20)* என்பதால், முதல் பாடலின் தலைப்பு அப் பாடலிலேயே குறிக்கப்படுதல் காணலாம். 'புரம்பல எரித்த புராண போற்றி' *(4:221)* எனவும், 'போற்றி போற்றி புராண காரண' *(4:224)* எனவும் வரும் தொடர்களை எண்ணும் போது, திருவாசகத் திற்கே அடிகள் இட்ட பெயர் சிவபுராணம் (சிவனது பெரு மையை விரிப்பது) என்பதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. சிவனைப் 'புராண' *(33:10)* என்றழைக்கும் பிறிதோரிடமும்

குறிப்பிடத்தக்கதாக உளது. நூலமைப்பில் ஒருதிட்டமிட்ட பாங்கு தென்படுகிறது.

கீர்த்தித் திரு அகவல் இறைவனுடைய கீர்த்தியைப் பேசு கிறது. 'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்' என்று தொடங்கி, அதை விவரித்து மேற்செல்வது திருவண்டப் பகுதி எனப்படுகிறது. பலவாறு இறைவனை அருச்சிப்ப தால் போற்றித் திரு அகவல் பொருட் பொருத்தம் உடைய தாகிறது. திருச்சதகம் நூறு பாடல்கள் கொண்டு, அந்தாதித் தொடையுடன் அமைந்துள்ளது. 'நீத்தல் விண்ணப்பம்' 'விட்டிடுதி கண்டாய்'' (என்னை நீ விட்டு விடுவாயா?) என்று கெஞ்சும் முகத்தானமைந்தமையான், நீத்தல் வேண் டாம் எனக் கேட்கும் விண்ணப்பம் ஆகிறது.

பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்கும் அன்பின்
வெற்றடியேனை விடுதி கண்டாய்; விடிலோ கெடுவேன்;
மற்றடியேன் தன்னைத் தாங்குநர் இல்லை; என்வாழ் முதலே!
உற்றடியேன் மிகத்தேறி நின்றேன் எனக்குள்ளவனே (6:23)

(நீத்தல் - நீக்காதொழிக, நீக்காது விடுக (காப்பாற் றுக) அதனால் தலைப்பு ஏற்புடையதாகிறது எனலாம்).

திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற் சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச் சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூசல்,ஆகிய பத்தும் ஆடலுடன் கூடிய பாடல் களாகும். இறைவனின் அன்பைப் பெற்ற ஆன்மாவின் ஆனந்தக் களிப்பையே இப்பாடல்கள் பெரிதும் பேசுகின்றன.

அன்னைப் பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப் பள்ளி எழுச்சி என்பன சொல்லாட்சிகளாலும் கருத்தாலும் பெயரிடப்பட்டுள்ளன.

பொன்னம்பலக் கூத்தப் பெருமானை நோக்கிப் பாடியது கோயில் மூத்த திருப்பதிகம். வரிசைப்படி அடுத்த பதிகம் திருப்பெருந்துறை உறை சிவனை முன்னிறுத்திப் பாடப் பட்டுள்ளது. ஆனால் தில்லையில் அருளிய கோயில் திருப் பதிகம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் பொருத்தம் ஆராயத்தக்கது.

'செத்திலேன் அந்தோ' என அழும் செத்திலாப் பத்து, அடைக்கலமே எனக் கூவும் அடைக்கலப் பத்து, ஆசைப் பட்டேன் எனப் பேசும் ஆசைப்பத்து, அடியரில் கூட்டிய அதிசயம் பாடும் அதிசயப்பத்து, பொல்லாமணியைப் புணர்ந் திருக்க விழையும் புணர்ச்சிப்பத்து, வாழ்கிலேன் கண்டாய் என அழும் வாழாப்பத்து, 'அதெந்துவே' எனத் தனக்கு அருளுமாறு வேண்டும் அருட்பத்து ஆகிய யாவும் இறை வனைப் பிரிந்த அவலத்தைக் கூறிக் கரைவனவாயுள்ளன. இவையும் சொல்லாட்சியாலும் கருத்தாலும் பெயரிடப் பட்டுள்ளன.

திருக்கழுக்குன்றத்தில் காட்சி தந்ததாகக் கூறும் திருக் கழுக்குன்றப் பதிகம், தில்லையிலும் கண்டதாகக் கூறும் கண்டபத்து இரண்டும் இறைவனை எங்கும் கண்டு மகிழ் வதாகப் புகலும் மன அமைதியைப் புலப்படுத்துகின்றன.

இறைவனோடு ஊடிக் கூடி மகிழ வேண்டுகின்ற பிரார்த்தனைப் பத்தும், இறைவன் தம்மை குழைத்தமை கூறி வருந்தும் குழைத்த பத்தும் பிரிவு அவலத்தின் உச்ச நிலையை உணர்த்துவன.

மேலே காட்டியவை போல் சொல்லாட்சியாலும் கருத் தாலும் பெயரிடப்பட்ட பதிகங்கள் மேலும் பலவுள. அன் பிலாரைக் கண்டால் அஞ்சும் அச்சப்பத்து, இறைவனைப் ப்பாண்டியனாகப் பரவும் திருப்பாண்டிப் பதிகம், சிக்கெனப்

பிடித்து மகிழும் பிடித்தபத்து, குலாத்தில்லை ஆண்டானைப் பாடும் குலாப்பத்து இறைவன் தம்மை ஆட்கொண்ட அற் புதத்தைப் பேசும் அற்புதப்பத்து தம்தலை மீது திருவடி வைத்த தீக்கையைக் கூறும் சென்னிப்பத்து, தம்மை ஆட் கொண்ட மகிழ்ச்சியின் உச்சத்தை வெளிப்படுத்தும் அச் சோப்பதிகம் ஆகியவை இவ்வகையைச் சாரும்.

'திருவெண்பா' என யாப்பால் பெயர் பெற்ற ஒன்றும், 'பண்டாய நான்மறை' என முதல் தொடரால் பெயர் பெற்ற ஒன்றும் இறுதிப் பகுதியில் உ.ள. யாத்திரைப் பத்து, உலகை விட்டுப் போவது பற்றிப் பேசும் உச்சக் கட்டமாகவும் திருப்படை எழுச்சி வானநாடு ஆளச்செல்லும் முரசாகவும் காணப்படுகின்றன.

ஆனந்த மாலை என்பது ஒரே அழுகையாக இருப்பது சிந்தித்தற்குரியது.

உயிருண்ணிப் பத்து, திருவேசறவு, திருப்புலம்பல், திருவார்த்தை, எண்ணப் பதிகம், திருப்படையாட்சி என்பன ஆய்வுக்குரியன. உள்ளார்ந்த கருத்தோட்டம் காரணமாக இவை பெயரிடப்பட்டிருக்கலாம். திருவார்த்தையில் ஈசன் புகழ் பேசப்படுகிறது. 'பண்டாய நான்மறையில்' பேச்சிறந்த மாசில்மணியின் மணிவார்த்தை பேசிப் பிறப்பறுத்ததாக' வாதவூரர் கூறுகிறார். அதற்கேற்ப அவ்விறைவன் திறமும் புகழும் நவிலும் பாடல்கள் திருவார்த்தை எனப்பட்டன போலும்.

அருட்பத்தில் 'ஏசறா நினைந்திட்டு' என்றும் (10), பிரார்த்தனைப் பத்தில் 'ஏசற்று இங்கு இருத்தல் அழகோ' (7) என்றும் வரும் சொல்லாட்சிகள் காண்கிறோம். திரு வேசறவு என்ற பாடலில் அச்சொல்லாட்சி வந்திலதேனும் அது திருவாசக ஆட்சியுடைமை அறியத்தக்கது. இது

போன்றதே உயிருண்ணிப் பத்து என்பதுமாகும். அப்பதிகத்தில் உயிருண்ணுதல் பற்றிய கருத்து எதுவும் காணப்பட்டிலது. ஆனால் திருப்பாண்டிப் பதிகத்தில் 'ஆருயிர் உண்ட திறல் ஒற்றைச் சேவகன்' *(10)* என்றும், சென்னிப்பத்தில் 'எம் உயிரும் கொண்டுஎம் பணிகொள்வான்' *(3)* என்றும் எண்ணப் பதிகத்தில் 'எனை உருக்கி உயிருண்கின்ற எம்மானே' *(3)* என்றும் வருவனவற்றால் இத்தொடரின் ஆட்சியுள்ளதை அறியலாம். செத்திலாப்பத்தில் மட்டுமன்றித் தம் உயிர் உலவாமை பற்றி மாணிக்கவாசகர் குறிப்பிடும் இடங்கள் பலவுள. *(5,14,18,38)* போற்றித் திரு அகவலில் 'குழைத்த சொன்மாலை கொண்டருள் போற்றி' *(220)* எனப் போற்றியவர்தான் குழைத்த பத்தையும் பாடியுள்ளார்.

இவ்வாற்றால் மிகச்சிலவே மேலும் ஆராயுமாறு ஐயத்திற்கிடமாக உள்ளன எனலாம். பெரும்பாலும் தொடராலும் கருத்தாலும் பெயர் பெறுவனவும் கருத்தால் மட்டும் பெயர் பெறுவனவுமெனக் காரணம் தெரிந்தவற்றைப் பகுக்கலாம். யாப்பாலும், முதற்சொல் அல்லது தொடராலும், ஆடல் பாடல்களாலும் (அவற்றிலுள்ள முடிக்கும் சொற்கள் தலைப்பை ஒட்டியன), சதகம் என எண்ணிக்கையாலும் பெயர் பெறுவன சிலவுள. எங்ஙனமாயினும் இத்தலைப்புகளே ஓர் அழகிய வண்ணப் பின்னல் போல் அமைந்து, நிகழ்ச்சித் தொடர்பு காட்டி, கதை வளர்ச்சி போல் நமக்கு உணர்த்துவதொன்றுளது. அதனை மறத்தல் கூடாது.

### நிகழ்ச்சித் தொடர்பு

இப்பத்திமைக் காப்பியத்தின் மையக்கருத்து—அடிக் கருத்து உயிர் இறைவனை அடைதலாகும். ''நாம் ஒழிந்து சிவமானவா பாடித் தெள்ளேணம் கொட்டுதல்'' என்றும் ''சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி'' என்றும் கூறப்படு

வன போல, சீவன் சிவனையடைந்து சிவமான தத்துவமே அடிக்கருத்தாகும். உயிர் இறைவனால் ஆட்கொள்ளப்படுகிறது; ஆனால் தன் அறியாமையால் அவ்வருளை அடையாமல், விலகிப் பிரிந்து இருளில் மூழ்கி விடுகிறது. பின்பு அவ்வருளை அவாவி நின்று அழுது அரற்றி அரனை அடைகிறது. இதுவே மாணிக்கவாசகரின் வரலாறாகவும் உளது; உலகில் தோன்றிய ஒவ்வோரான்மாவின் அனுபவமாகவும் திகழ்கிறது. எனவே ஒவ்வோர் உயிரின் உய்திக்கும் அதில் இடமிருக்கிறது. 'நமச்சிவாய வாஅழ்க' என்பது தொடங்கி, 'அம்மை எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே' என்பது முடிய 51 பதிகங்களிலும் கூறப்படும் கருத்துக் களில் ஒருவித நிகழ்ச்சித் தொடர்பு இருக்கிறது. தலைப்புக் களை வைத்தே இதை ஓரளவு உய்த்துணரலாம்.

### புணர்ச்சியும் மகிழ்ச்சியும்

இறைவன் தானே வந்து, மாணிக்கவாசகரை வலிய அழைத்து, கடைக்கண்ணால் அருளி, திருவைந்தெழுத்தை ஓதிச் சென்னியில் பாதமலர்களை வைத்துத் திருவடித் தீக்கை செய்ததால் அவர் ஞானநிலை வரப்பெற்றார். அம்மகிழ்ச்சியில் தம் வியப்பை வெளிப்படுத்தி இறையருளைப் போற்றுவனவே அச்சோப் பத்து, சென்னிப்பத்து, அற்புதப் பத்து என்பனவாகும். பிடித்த பத்து, கோயில் திருப்பதிகம் போல்வனவும் இச்சூழ்நிலையையும் மனநிலையையும் வெளிப்படுத்துகின்றன.

ஆட்கொள்ளப்பட்ட ஆன்மா, களிப்பில் துள்ளிக் குதித்தாடி மகிழ்கிறது. அஃது இறைவனுக்காகத் தெள்ளேணம் கொட்டுகிறது; திருத்தோணோக்கம் ஆடுகிறது; திருவுந்தி பாடுகிறது; திருப்பூவல்லி கொய்கிறது; திருக்கோத்தும்பியை இசைக்குமாறு அனுப்புகிறது!

அவ்விறைவன் செய்த அருட்செயலால் தான் உய்தி பெற்றதற்கு நன்றி கூறுமுகத்தான், அவன் புகழைப் பாடிப் பாடி மகிழும் மனப்போக்கையே திருவெம்பாவையிலும் காண்கிறோம்.

**பிரிவும் ஏக்கமும்**

இங்ஙனம் கொண்ட மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் வெளிப்படுத்தும் பதிகங்கள் பலவாகும். இவை தவிர, நாள் ஆக ஆக, பிரிந்த இறைவனைக் கூடும் வேட்கையைப் புலப்படுத்துவனவும், கூடுதல் வாய்க்காதோ என ஐயுற்று அரற்றி அழுவனவும், உலகப் பாச பந்தத் துயரங்களினின்றும் தம்மை விடுவித்தருளுமாறு வேண்டிக் கரைந்துருகுவனவும் 'என்னைக் கைவிட்டிடாதே' எனக் கெஞ்சுவனவுமான பதிகங்களும் பலவாகும். இங்ஙனம் இறைவனைப் பிரிந்து காலம் ஆக ஆகப் பிரிவுத்துயர் பெருகிச் சோதனைகள் பல ஏற்பட்டு, உலக அல்லல்களுள் உழல நேரிட்ட போது அவ்வுயிர் செத்திலாப்பத்து, வாழாப்பத்து, குழைத்த பத்து, பிரார்த்தனைப் பத்து போன்றவற்றைப் பாடி ஓலமிட்டு அலமருகின்றது.

**ஊடலும் வேண்டலும்**

அவ்வுயிர் ஏன் நீத்தல் விண்ணப்பம் பாடுகிறது? 'என்னைக் கைவிட்டு விடாதே' என்று காரண காரியத்தோடு கெஞ்சுவதை அதில் கேட்கலாம்.

**உடனுறை வாழ்வு**

திருச்சதகமும் முதலிலுள்ள நான்கு நெடும் பாடல்களும் பிற சில பதிகங்களும் மாணிக்கவாசகரின் இன்ப துன்ப அனுபவங்களின் ஒட்டுமொத்தமான பிழிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**நிறைவு**

யாத்திரைப் பத்து, திருப்படை எழுச்சி என்பன உயிர் வானுலகம் ஆளச் செல்லும் இறுதிநிலை பற்றியன.

இங்ஙனம் கொண்டு கூட்டி ஒருவர் நோக்குங்கால், இவற்றிடையே ஒரு முதலும் ஒரு முடிவும் நிகழ்ச்சித் தொடர்பும் ஊடாடி நின்று, திருவாசகத்திலுள்ள, 656 பாடல்களும் தம்முள் இயைபுபட்டு ஒரு முழுமைத்தன்மை அடைவனவாய்த் திகழ்தலை உணர முடிகிறது.

**காப்பியப்பனுவல்**

திருவாசகம் காப்பியப்பனுவல் என்னும்படியான தனிச் சிறப்புடையதெனக் கண்டோம். காப்பியங்கள் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, கதை கூறும் போக்கில் வளர்ந்து, நிகழ்ச்சிப் பின்னல்களையுடையனவாய்ப் படைக்கப்படு கின்றன. ஆயின், இக்காப்பியத்திற்கும் ஒரு வரலாறே அடிப் படையாகும். திருவாதவூரரின் வரலாறுதான் அது.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அறிஞர் ஜி.யு. போப்பையர் அதன் முன்னுரையில், திருவாசகம் திருவாதவூரரின் தன் வரலாறு (Auto-Biography) என்றும் அவ ருடைய உண்மையுருவை அறிதற்கு அவருடைய பாடல் களையே தான் சான்றாக ஏற்க வேண்டும்'' என்றும் நன்கு கூறியுள்ளார். பேராசிரியர் கோ. வன்மீகநாதன் தமது 'மாணிக்கவாசகர்' நூலின் முன்னுரையில் ''திருவாசகத்தைப் பிரிந்து அவருக்குத் தனித்தொரு வாழ்க்கை இருந்ததில்லை யென்று துணிவுடன் கூறலாம். திருவாசகம்தான் மாணிக்க வாசகர்; மாணிக்கவ்ாசகர்தாம் திருவாசகம், அதுவே அவ ருடைய வாழ்க்கை வரலாறு'' என்று கூறியுள்ளார்.[1] நீ. கந்த

1. கோ. வன்மீகநாதன், மாணிக்கவாசகர் சாகித்திய அகாதெமி, புதுதில்லி, *1983*.

சாமிப் பிள்ளை தம் திருவாசகப் பதிப்பு ஆய்வுரையில், ''இத்தெய்வக் கவிதை திருவாதவூரடிகள் தம் வரலாற்றைத் தாமே எழுதிய ஞான வரலாறாகத் திகழ்கின்றது. பல வகையான தளைகளால் கட்டுப்பட்டு அறியாமையாகிய திணிந்த காரிருளுள் முழுகிப் போக்கிடங்காணாது திகைத்து நின்ற ஓர் ஆன்மா, திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையில் செழுமலர்க் குருந்தம் மேவிய பேரருள் ஒளிப்பிழம்பின் வழி வந்த ஒரு தெய்வ நிகழ்ச்சியே, இந்த ஞான வரலாற்றின் தோற்றுவாயாகும். இந்நிகழ்ச்சியை, அடிகள் தாம் உணர்ந்தவாறே குறிப்பிடும் உண்மை, இக்காலத் தன் வரலாற்று நூல்களின் முறைப்படியே அமைந்துள்ளது,'' என்று குறிப்பிடக் காண்கிறோம்.[1]

**வரலாற்று அடிப்படைகள்**

ஒன்றை அனைவரும் தெளிவாக மனத்திலிறுத்திக் கொள்ளுதல் சாலும். மாணிக்கவாசகர் வரலாறு கூறும் நூல்கள் அனைத்தும் அவர் காலத்திற்கு மிகவும் பிற்பட்டனவே. அவற்றுட் பல தலபுராணங்கள்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம், கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கடவுள் மாமுனிவர் பாடிய திருவாதவூரடிகள் புராணம், கி.பி. 19ஆம் நூற்றாண்டினரான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய திருப்பெருந்துறைப் புராணம் மற்றும் பிற்பட்ட திருவுத்தர கோசமங்கைப் புராணம், கடம்பவனப் புராணம் ஆகியன திருவாதவூரரின் வரலாற்றை விரித்துரைக்கின்றன. இவை அனைத்தும் மாணிக்கவாசகருக்கு மிகவும் பிற்பட்ட

1. *திருவாசகம் (பதிப்பு) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1964.*

காலத்தில் தோன்றின. செவிவழிக் கதைகளையும் திருவாசகத்தில் காணப்படும் அகச்சான்றுகளையும் தத்தமக்கு முற்பட்ட புராணங்களையும் வைத்து இவை புனையப் பட்டவையாகத் தோன்றுகின்றன. முன்னதை வைத்துச் சிறிது மாற்றியும் சேர்த்தும் எழுதுவதே புராண வளர்ச்சி வரலாறாகும். வடமொழியில் இது மிகுதி. சேக்கிழாரால் விரிவாகப் பாடப்படாததாலும் வேறு புறச்சான்றுகளின்மையாலும், இப்புராணக் கதைகளையே உண்மை என ஏற்றுப் பலரும் வழங்கி வருகின்றனர். இக்கதைகளிடையே பல வேறுபாடுகளிருப்பதை பேராசிரியர் க. வெள்ளை வாரணனார் தம் பன்னிரு திருமுறை வரலாற்றில் விரிவாக எழுதி விளக்கியுள்ளார். இப்போதைக்குத் திருவாசக அகச்சான்றுகள் தவிரப் பிற யாவும் செவிவழி அறிந்தனவும் புனைந்து படைத்தனவுமேயாம் என்பது மனங்கொள்ளத் தக்கது.[1]

இப்பெரியவரின் இயற்பெயர்தானும் அறியப்பட்டிலது. 'வாதவூரர்' என்பது புராணங்களால் அறியப்பட்டதேயாம். திருவாசகம் மூலமோ, வேறு புறச்சான்றுகள் வழியோ இப்பெருமானின், இயற்பெயர், சிறப்புப் பெயர்களை அறிந்திலோம். நீ கந்தசாமிப் பிள்ளை, தம் திருவாசகப் பதிப்பு ஆய்வுரை ஒன்றில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.[2] ''இவருடைய உலகநெறி வாழ்க்கையைத் திட்டமாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளுதற்கேற்ற பழைய வரலாற்றுச் செய்திகள்: நூல் வழியாகவோ வரலாற்று முறையில் இடம் பெறக் கூடிய வேறு ஆதரவுகள் வழியாகவோ இதுகாறும் நமக்குக் கிடைத்தில; நாமும் இதுவரையில் இவற்றைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டோமில்லை. இவருடைய இயற்பெயர்தானும் எது என்பது அறிந்திலோம்; இவரைப் பற்றி இப்போது நாம் தெரிந்திருப்பதெல்லாம் புராணங்கள், மான்

1. திருவாசகம் (பதிப்பு) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1964.
2. மேலது ப. 21

மியங்கள் என்று வருப் பழங்கதைகளில் வந்த செய்திகளே.'' இவ்வாறு அவர் கூறுவதே அடிப்படை உண்மையாகும். திருவாசக நூல்வழி அறியும் சில் சான்றுகள் ஓரளவு முற் கூறிய புராணங்களின் கதைகளோடு ஒத்துள்ள போதிலும், அவை புனையப்பட்டுள்ள விரிவான நிகழ்ச்சிகளில் பிற்காலக் கற்பனைகளும் கலந்துள்ளன என்பதை மறுக்க இயலாது.

மாணிக்கவாசகர் தலங்கள் தோறும் சென்று பாடியவ ரல்லர். அவர் பாடல்களில் வரும் தலக்குறிப்புக்கள் பெரி தும் இறைவனைச் சுட்டும் பொதுக் குறியீடுகளேயாம். திருப் பெருந்துறையிலும் தில்லையிலுமே மிகப்பெரும்பான்மை யான பாடல்கள் பாடப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியடிப்படையில் இப்பாடல்கள் பாடப்பட்டனவாகக் கூறும் புராணங்களிடையேயும் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. கூர்ந்து நோக்குவார்க்கு, இப்பாடல்கள் பல பல்வேறு காலங்களில், பல்வேறு மனநிலைகளில் பாடப் பட்டனவாகத் தோற்றினும், அவற்றை முற்காட்டியவாறு ஓரளவே பகுத்தெண்ண முடிகிறது. மேலும் இப்பாடல் களுக்குத் தரப்பட்டுள்ள மெய்யுணர்வு விளக்கத் தலைப்புக் களும் அவ்வப்பகுதிக்கு முற்றிலும் பொருந்துவன என்று கூறமுடியாது. இவற்றை ஓதுங்கால் ஏற்படும் மெய்யுணர்வு நிலைகளை நினைவு கூருமாறு, யாரோ ஒருவர் பொதுப் பட ஆங்காங்கு, தம் அனுபவ நிலைக்கேற்பக் குறித்துச் சென் றுள்ளார் என்றே தோற்றுகிறது. பாடலுக்கும் இத்தத்துவத் தலைப்புக்களுக்கும் பெரும்பாலும் பொருத்தம் இருப்ப தாகப் புலப்படவில்லை.

### அகச்சான்று அடிப்படையில் வரலாற்றுப் பகுப்புக்கள்

திருவாசக அகச்சான்றுகளை மட்டுமே கொண்டு, அதில் வரும் வாழ்க்கை வரலாற்றைக் கீழ்வருமாறு பகுத்துணரலாம்.

காட்சி : இறைவன் குருந்தமர நிழலில் வந்து—திருப் பெருந்துறையில் காட்சியளித்தது.

'கிறி' செய்தமை - கடைக்கண் நோக்கு - ஒரு வார்த்தை யுட்படுத்தல் - சென்னியில் திருவடி மன்னிப்பொலிதல் - செயல் மாண்ட தன்மை - ஞான உதயம், பெரும் மாற்றம் ஏற்படுதல். குருவின் தோற்றப் பொலிவு — மாணிக்க வாசகரிடம் ஏற்பட்ட மனமாற்றங்கள் - வந்து புகுந்து, காட்டிய பாங்குகள்.

நாய்க்குத் தவிசிட்டது போன்ற தன்மை - முன் பக்குவமில்லாத போதும் ஆட்கொண்டமை - கல்லைப் பிசைந்து கனியாக்கியமை. இருக்க எனவும் பின்பு வருக எனவும் பணித்தமை - அருள் பெற்றமை கருதி ஆடிப் பாடுதல்.

பிரிவு : பிரிந்தமை - பழ அடியார் முன்னரே சென் றமை - தன்னை உலகில் உழலவிட்டமை

பொய்ம்மையுடன் போராட்டம் - உலக இன்பத் தளை, சோதனைகள்

பரிமேல் வருதல் - நரியைப் பரியாக்கல் - மன்னற்குப் பொன் நல்கல் - பிற

பிட்டுக்கு மண் சுமத்தல் - கோவால் மொத்துண்டல் பாண்டியற்கும் அருளல் - சிவனையே பாண்டிய னாக மதித்தல் - தென்னன் எனப்போற்றல் - மண்ணவர்க் கும் மேலாக இறைவனைப் போற்றும் பெருமிதம்.

வேட்கை: இறைவனை அடைய அவாவுதல் - ஏக்கம், உயிர்விடவும் துணிதல் — அழுது புலம்புதல் - முன் அனுபவமும் இடைப்பட்ட பிரிவும் பற்றி எண்ணுதல் — விட்டிடாதே என வேண் டுதல் — கூட்டிக்கொள் என்று பிரார்த்தித்தல் - ஊடுதல் - ஊரெலாம் சிரிக்கச் செய்த செயல் களை நினைவுகூர்தல் — நின்னை ஊரெலாம் சிரிப்பிப்பன் எனக்கூறிப் பிணங்குதல்

ஞானம் : ஞானநிலை கைவரப் பெறுதல் - மன அமைதி - இறைவனை எங்கும் காணுதல் - யாத்திரைக்கு ஆயத்தமாதல் - திருப்படை எழுச்சி பாடுதல்

ஆம். மாணிக்கவாசகர் வாழ்க்கையை இவ்வாறு காட்சி, பிரிவு, வேட்கை, ஞானம் என்றும் அதன் பல்வேறு உட்பிரிவுகளாகவும் அகச்சான்றுப் பாடல் அடிகளைக் கொண்டு பிரிக்கலாம்.

இவை அனைத்தும் தொடர்ந்து வரும் கட்டுரையில், பாடல்களின் அடிப்படையில் ஒவ்வொன்றாக விளக்கப்பட இருக்கின்றன. இவற்றின் மூலம் மாணிக்கவாசகரின் வரலாற்றைக் கேட்டுச் சித்திரம் போல் வரையலாம். எனினும், அவை கதைவடிவான செய்தி விளக்கமடங்கிய வரலாறாவதிற்கில்லை. மாணிக்கவாசகர் தம் அனுபவத்தை, உலக அனுபவமாக்கியே கூற விழைகின்றார். தம் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள், சோதனைகள், விளைவுகள், தீர்வுகள் யாவும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏற்படும். அத்தகைய நிகழ்வுகளைச் சுட்டும் குறியீடுகளே தவிர, அவை தனித்த ஒரு மனிதரின் வரலாறு என்று அழுத்தம் பெற நினைக்கப்பட வேண்டுவதில்லை. அஃதாவது, மாணிக்கவாசகர் வரலாறு அந்நூலுட் கூறப்பட்டுள்ள அளவிலும் தன்மையிலும் அறியப்பட்டால் போதுமானது. மேலும் தெரிவது நல்லதே எனினும் தெரியாதிருப்பதும் நல்லதென்றே அன்றும் கருதியுள்ளனர் போலும். ஏனெனில், இவ்வுலகில் தோன்றும் ஒவ்வோருயிருக்கும்

காட்சி நிலை — ஞானம் கைவரப் பெறும் நிலை

பிரிவு நிலை — தடுமாற்ற நிலை, பெற்றதை இழக்கும் நிலை, சோதனை நிலை

வேட்கை நிலை — மீண்டும் பெற அவாவி நிற்கும் நிலை, பக்குவப்படும் நிலை

ஞான நிலை — அறிவு முதிர்ந்து, அனுபவம் மிக்கு அமைதியுறும் நிலை

என்பன, பல திருப்பங்களாக வாழ்வில் வந்துபோதலால், அந்த அளவிற்கு இஃது உதவுகிறது. அதனால்தான் இதனை ஆன்ம வரலாறு என்றும் கூறுகிறோம். உயிரின் மாக்கதை என்றும் விளம்பலாம். மாணிக்கவாசகர் தம்மை மறந்து, தாம் இறைமையை அடையத் துடிக்கும் ஓரான்மா என்ற நிலையிலேயே பாடிச் செல்லுதலால், இஃது உலகிற் பிறந்த ஒவ்வோரான்மாவும் பாடிப் பரவி உய்தியடைய உதவ வல்லதாயிருக்கிறது. இதனை, இந்நூலுள் தோய்ந்த கல்வி வாய்ந்த கோ. வன்மீகநாதர் மிகத் தெளிவாக விளக்கு கின்றார்: ''திருவாசகத்தின் தனிச்சிறப்பு யாதெனின் ஒவ்வொரு மனிதனும் தன்னை மாணிக்கவாசகர் இடத்தில் அமைத்துக் கொண்டு, மாணிக்கவாசகராகவே தன்னைப் பாவித்துக் கொண்டு, அவருடைய சொற்களைத் தனதாக்கிக் கொண்டு, தன் நெஞ்சத்தின் அடித்தளத்திலிருந்து ஓலக்குரல் எழுப்பி இறைவனை இறைஞ்சி நம்பிக்கை மிளிரும் கண்களால் அவனை ஏறெடுத்துப் பார்த்து அவன் முகத்தில் அருள், அன்பு, அமைதி நிலவுவதைக் கண்டு களிகூர்ந்து கடைத்தேறலாம்.''[1]

### அகத்திணை மரபுகளும் ஆன்மிகக் காதலும்

'பொல்லா மணியைப் புணர்ந்து இருப்பது என்று கொலோ' என்று ஏங்குவது திருவாசகம். பல பாடல்கள் நாயக நாயகி பாவத்தில் பாடப்பட்டுள்ளன. ஆன்மா தன்னைக் காதலியாக எண்ணிக் கொண்டு, இறைவனாகிய நாயகனை நாடுங்கால் ஏற்படும் அனுபவங்களையும் அம்மானுடக் காதல் போல் வைத்து எண்ண இடமுளது. அவ்வகையில் அகத்திணை கூறும் ஐந்து உரிப்பொருள்களும் இந்நூலுள் இடம் பெறுதலைக் காணலாம். புணர்தல், பிரிதல், இருத்

1. கோ. வன்மீகநாதன், மாணிக்கவாசகர், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1983 (முன்னுரை)

4.3.

தல், இரங்கல், ஊடல் என இவ்வாறுதான் மாணிக்கவாசகர் வரலாற்றிலும் நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.

திருப்பெருந்துறையில் நிகழ்ந்த காட்சி; பிறகு ஏற்பட்ட பிரிவு இறைவன் 'இவ்வுலகில் இருக்க' எனவும், 'கோலமார் தரு பொதுவினில் வருக' எனவும் பணித்தமை; காலம் செல்லச் செல்ல ஆற்றியிருத்தலும் ஆற்றாது இரங்குதலும் பிணங்கி ஊடுதலும் ஆகியன நிகழ்ந்தமை யாவும் நூலுள் காணப்படுகின்றன. எனவே இதனை ஒரு மானுடக் காதல் நாடகமாகவும் அதே சமயம் மெய்யியல் உணர்வுடைமையால் ஞான நாடகமாகவும் கருதி, ஆழ்ந்து கற்பார்க்கு இஃது நல்ல இலக்கிய விருந்தாகும்.

மேலும் இதனுள் வரும் இலக்கியவுத்திகள் அனைத்தும் மெய்ப்பொருள் உண்மையை விளக்குவனவாயிருத்தலால், இவற்றை ஒரு சேரக் கொண்டு பயிலுதல் இலக்கியத் திறனாய்வுக் கல்வி என்பது மெய்ப்பொருள் உணர்ச்சிக்கு முரண்பட்டதன்று என்ற உண்மையை உணர வைக்கின்றது.

**பகுத்தறிவு வழியில் பத்திமை இயக்கம்**

பகுத்தறிவின்படியும் இன்றைய அறிவியலின்படியும் ஒருண்மை அடிப்படையாகக் கூறப்படுகிறது.

எப்போதும் உயர்வடைய விரும்புபவன் உள்ளம் உயர்வை நோக்கியே இருக்க வேண்டும். மாந்தனின் அறிவும் உணர்வும் சார்ந்ததன் தன்மையுடையனவாகின்றன. அங்ஙனமாயின்,

குறையுணர்வுடைய மனிதன்
நிறையுணர்வுடையதை நேசிக்க வேண்டும்
சிற்றறிவுடைய மனிதன்
முற்றறிவுடைய ஒன்றை விழைதல் வேண்டும்
சிற்றின்ப நாட்டமுடைய மனிதன்
பேரின்பமாகிய ஒன்றையே நாடவேண்டும்
நிலையற்ற வாழ்வுடைய மனிதன்
நிலைபேறுடைய ஒன்றினைத் தேடிச்செல்ல வேண்டும்

குறை தன்னிலும் குறையுடையதை நாடுதல் பயனுடைய தாகாது. அத்தகைய நிறையுணர்வு, முற்றறிவு, பேரின்பம், நிலைபேறு போன்றவற்றை உடைய ஒரு முழுமையை நாடுதலே சமயமாகும். பழைமை - பழமை என ஆகும். ஐகாரம் குறுகி ஒலிப்பதால் அமைவது அது. சமையம் - சமயம் ஆனதும் இது போன்றதே. சமைதல் - பக்குவப் படுதல். சமையல்கூட, உண்பதற்கேற்பப் பக்குவப்படுத் தலே. பெண் 'சமைந்தாள்' என்றால், திருமணத்திற்கும் மகப்பேற்றுக்கும் பக்குவப்பட்டாள் என்பதேயாம். அவை போல், உயிரை இவ்வுலக நல் வாழ்வுக்கு ஏற்பப் பக்குவப் படுத்துவதே சமயம். மேலுலக வாழ்வைக் காட்டி ஒழிவது வடமொழிக் கோட்பாடு; இவ்வுலகில் வாழ வைப்பது தமிழர் கோட்பாடு. தம் வருமானம் கருதிச் சிலர் மேலுல கையே நம்ப வைத்ததால் ஏற்பட்டது, சமயத்திலும் கலப் படமானது; தமிழன் அடையாளம் பறிபோனது. மேலும் சமயம் என்பது மனத்தைத் தூய்மைப்படுத்தும் கருவி; வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் சாதனம்; உலகநெறி த்தழைக்க வந்த பெருநெறி. அதை உணராதார், மேல் உலகை அடைய வழிகாட்டுவதே சமயமென்றனர். கொடுத்த பதவியைக் காப்பாற்றுகிறவனுக்கு, மேற்பதவி கிட்டும் என்ற அளவில் அஃது உண்மையே. அவ்விதம் கிடைத்துள்ள பதவியைக் காக்க வழிகாட்டுவதே சமயமெனில், அச்சமயவுண்மையைத் திருவாசகம் நன்கு எடுத்துரைக்கிறது.

ஆன்மா இருளைவிட்டு ஒளியைத் தேடும் வரலாறு அது. ஆன்ம ஈடேற்றமே, உயிரின் உய்தியே அதன் குறிக் கோள். படிப்படியாக மலத்தைக் கழுவி, அழுக்கை அகற்றி உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் அது கூறும் செய்தி: ''அழுதால் அவனைப் பெறலாமே'' என்பது.

நெக்குருக வைத்து உயிரினைப் பக்குவப்படுத்தும் ஞான நாடகத்தை நடித்துக் காட்டுகிறது திருவாசகம்.

# 2. ஞான நாடகம்

எல்லோருடைய வாழ்க்கையும் ஒரு மாதிரியாக நடப்ப தில்லை. சிலருடைய வாழ்க்கையில் எதிர்பாராத நிகழ்ச்சி கள் நடந்து விடுகின்றன; அற்புதங்கள் ஏற்பட்டு விடுகின் றன. உலகையே ஈர்க்கும்படியான செயல்கள் நிகழ்ந்து விடு கின்றன.

மாணிக்கவாசகருடைய வாழ்க்கையில் அத்தகைய தொரு நிகழ்ச்சி நடந்துவிட்டது. திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் ஞானகுருவாக வந்த அந்தணரை அவர் சந்திக்க நேர்ந்ததுதான் அந்நிகழ்ச்சி. அதன் விளைவாக, சங்கிலித் தொடர் போல, எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன.

அச்சந்திப்பால் தம்மையே இழந்து
ஞானம் பெற்றமை

ஞானகுருவாக வந்தவர் அடியவர்
கூட்டத்துடன் மறைந்தமை

மாணிக்கவாசகரை உலகில் இருக்குமாறும் இறுதியில்
தில்லைப் பொதுவிற்கு வருமாறும் பணித்துச் சென்றமை

குதிரை வாங்கப் போன பொன்னைத்
திருப்பணிகட்குச் செலவிட்டு, வந்த
காரியத்தை மறந்தமை

மன்னனால் தண்டிக்கப் பட்டமை
அதனால் உலகோர் பழிப்புக்கும் சிரிப்
புக்கும் ஆளானமை

மீண்டும் நரிபரியாக்கிய இறைவனால்
காப்பாற்றப்பட்டமை

மீண்டும் மன்னனால் தண்டிக்கப்பட்ட போது,
இறைவன் பிட்டுக்கு மண் சுமந்தமை—
பாண்டியனால் அடிபட்டமை
தில்லை சென்று இறையடி நீழல் எய்தியமை

இவ்வாறே நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் சுவையான — விறுவிறுப்பான நாடகத்தில் வரும் நிகழ்ச்சிகள் போல் நடந்து விட்டன. இவற்றை மாணிக்கவாசகர் வெளிப்படுத்தும் பாங்கு மிகச் சுருக்கமானது; நாகரிகமானது; உலகோர் அனைவருக்கும் பயன்படுமாறமைந்தது.

தன் வரலாறு (auto-biography) எதற்காக எழுதப்படுகிறது? அல்லது எவ்வாறு எழுதப்பட வேண்டும்? தன் வரலாற்றை, உலகோர் படிக்க வேண்டும் என்றால் உலகோருக்குப் பயன்படுமாறு எழுத வேண்டுமன்றோ? செவ்வியல் இலக்கியங்கள் தன் அனுபவத்தை (Self-experience) உலக அனுபவமாக்கிக் கூறும் என்பர். அஃதாவது உலகோர் அனைவருக்கும் ஏற்படும் அனுபவங்களோடு (Universal experience) ஒத்ததாகக் கூறப்பட வேண்டும். உண்மையில் இலக்கியம் என்பதே அவ்வாறுதான் அமைதல் வேண்டும்.

இதுகாறும் மாணிக்கவாசகரின் இத் தன் அனுபவத்தை, மெய்யியலுடன் சார்த்திப் பலர் எழுதியுள்ளனர். 'மாணிக்கவாசகர்' என்ற நூல் அறிஞர் கோ. வன்மீகநாதரால் எழுதப்பட்டு சாகித்திய அக்காதெமியால் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்பட்டுள்ளது. டாக்டர் திருமதி இராதா தியாகராசன் அவர்கள் 'திருவாசகத்தில் அருளியல்' என எழுதிய ஆய்வேடு ஆங்கில்த்திலும் தமிழிலும் வெளிவந்துள்ளது. இவற்றில் மெய்ப்பொருள் உணர்வை விளக்குமுகத்தான் இத்தன் வரலாற்றுக் குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. இங்கு இத் தன் வரலாறு மட்டுமே, இலக்கியச் சுவை நுகர்வோடு தொகுத்துத் தரப்படுகிறது. மேலோட்டமாக மாணிக்க

வாசகர் வரலாறாகவும் உள்ளடங்க ஆன்மாவின் கதையாக வும் இருப்பது மட்டும் ஆங்காங்குக் கோடிட்டுக் காட்டப் படுகிறது. இவற்றை முறையே படிப்பார்க்குத் திருவாசகம் ஒரு காப்பியத்திற்கான பண்புகள் நிரம்பப் பெற்றதே என்ற நினைப்பும் நோக்குக் கோட்பாடு அமைந்ததே என்ற சிந்தனையும் ஏற்படுமாறு, தொகுத்தும் பகுத்தும் விரித்தும் அகச்சான்றுகள் விளக்கப்பட்டுள்ளன.

நகவேதகும் எம்பிரான் என்னை நீ
செய்த நாடகமே (5:10)

சிவபெருமான் மாணிக்கவாசகரை ஆட்கொண்ட தன்மையே இங்கு நாடகமெனப்படுகிறது. விண்ணோர் களும் காணாத இறைவன், கண்காண வந்து ஆட்கொண்டது நம்ப முடியாத அதிசயமல்லவா? இதனால்தான் அதிசயப் படுத்தும் அற்புதப் பத்தும் அவரால் பாடப்பட்டன.

ஊனை நாடகம் ஆடுவித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத் துடைய விச்சையே (5:99)

உலக இச்சை நையுமாறு இறைவன் ஆட்டுவித்த இஞ் ஞான நாடகம் நான்கு படிநிலைகளில் ஏறி முத்திநிலை கண்டது. அம்முன்னைய நான்கு நிலைகளுமே குறிப்பிடப் படுகின்றன. ஐந்தாவது நிலை உணர வைக்கப்படுகிறது.

இந்நாடகத்தை இறைவன் மிகத் திறமையோடு, வித்தை செய்து காட்டுவதுபோலச் செய்து முடித்ததால், இஃது ''எம்பெருமான் செய்திட்ட விச்சை'' *(5:28)* என்றும் கூறப்படுகிறது; இதனை அவர் 'கிறி' என்ற சொல்லாலும் குறிப்பிடுகிறார். கிறி என்ற வழக்குச் சொல் தந்திரம் என்று பொருள்படும். உலகோர் நகை செய்யுமாறு, தென்னன்

பெருந்துறையான், தம்மை ஆட்கொண்டதைக் ''கேட்டாயோ தோழி கிறி செய்தவாறு'' என்று குறிப்பிடுகிறார்.

இறைவன் திட்டமிட்டுத் தம்மை இலக்காக்கி வந்து ஆண்டதனால் 'குறிசெய்து கொண்டு என்னை ஆண்ட பிரான்' என்றும், தம் பழவினையைத் தீர்த்தற்கு அவன் செய்த தந்திரத்தை வியந்து ''பழவினையைக் கிறி செய்தவா பாடிப் பூவல்லி கொய்யாமோ'' என்றும் *(13:8)* பாடுமிடங்கள் இவண் ஒப்பு நோக்கத்தக்கன. புதுமையான முறையில் தம்மை ஆட்கொண்டதை 'வண்ணம்' என்ற சொல்லாலும் 'நயம்' என்ற சொல்லாலும் அவர் குறிப்பிடுதல் காணலாம்.

பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணி கொண்ட வண்ணமும் பாடிப்பாடி (9:11)

அன்பர் தம்மோடு, ஆட்செயும் வண்ணங்கள் (9:16)

ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடி (9:18)

திருப்பொற்சுண்ணம் இடிக்கும் பெண்கள் கூற்றாக இவை வெளிப்படுகின்றன. இறைவன் தம்மாட்டு 'படிறு' (வஞ்சகம்) செய்துவிட்டதாகவும் அவர் பகருமிடங்கள் உள.

'திருப்பெருந்துறை உறையும்
பனவன் எனைச்செய்யும் படிறு அறியேன்
பரஞ்சுடரே (34:3)

சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை உறையும்
படருஞ்சடை மகுடத்து எங்கள் பரன்தான் செய்த படிறே
(34:6)

தம்மை ஏசுமாறும் உலகோர் நகையாடுமாறும் நேர்ந்து விட்டதால், தமக்கே நன்மைதரச் செய்த 'விச்சையை', 'கிறி'யை, படிறு எனவும் கூறி வியப்படைகிறார் மணி

வாசகர். அதனால் அதைச் செய்தருளியவனை 'எத்தனாகி வந்து' (42:4) என்று கூறவும் அவர் தயங்கவில்லை. எத்தன் - ஏமாற்றுகிறவன். நன்மை தருதற்பொருட்டுத் தம்மை ஏமாற்றியவனை இதுபோல் சுட்டுமிடங்கள் சில உள. வித்தகன் எனப் போற்றுபவனையே, உட்குறிப்புத் தோன்ற எத்தன் எனவும் பாடுகிறார். இதனை 'இந்திர ஞாலம்' என்றும் குறிப்பிடுகிறார். உலக வழக்கில் 'இந்திரசாலம்' என்பர். கண்கட்டி வித்தை போல் நடத்திக் காட்டப்படும் ஒன்றே இந்திரசாலம் எனப்படும்.

> அந்தணனாகி ஆண்டு கொண்டருளி
> இந்திர ஞாலம், காட்டிய இயல்பும் (2:34, 35)

இத்தகைய சதுரப்பாடு, திறமை மிக்கவனை— தனக்குப் பெரும் பிச்சுத் தரும் பெருமானை - 'சதுரப்பெருமான்' (திறப்பாடுமிக்க ஞானத் தலைவன்) என்றும் போற்றுகிறார் (24:3).

திருச்சதகத்தில், இறைவனுக்காகச் சரியை, கிரியை முதலியன செய்யாத தம்மை நொந்து கொள்கிறார். அகங் குழையாமை, பூமாலை புனைந்து ஏத்தாமை முதலியன கூறிச் ''சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே'' என்று முடிக்கிறார். 'சதுராலே சார்வான்' என்பதற்குப் பொருள் என்ன? 'திறமையான பணிக்கு ஆதரவளிப்பவனே' என்பது கா. சுப்பிரமணிய பிள்ளையின் உரை. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் 'சதுராலே சார்வான் சாமாறே விரைகின்றேன்' என்று கொண்டு கூட்டி, ''என் ஆற்றலாலே நின்னை அடைவதற்கு முந்துகின்றேன்; அங்ஙனம் விரைகின்றது பயனின்றிச் சாதற்பொருட்டேயாம்'' என்று பொருள் கூறுகிறார். திருச்சதகப் பாடல்கள் பல இறைவனை விளித்தே முடிகின்றன. கா.சு. பிள்ளை குறிப்பது போல்,

இதனை இறைவனை நோக்கிய விளியாகக் கொள்வதே முறையாகும். 'சதுர்' என்பது சதுரப்பாடு, திறமை, சாமர்த்தியம். முன்பு காட்டிய சான்றுகளின்படி இறைவன் தந்திரமாகத் திறமையைக் காட்டி மணிவாசகரை ஆட்கொண்டதால் 'சதுராலே சார்வானே' என்பது, 'உயிர்களைத் திறமையோடு அணுகி அருள்பவனே'' என்றுதான் பொருள்படும். இங்ஙனம் 'சதுர்' என்ற சொல், இச்சூழலுக்கேற்ப எவ்வாறு தனிப்பொருளுடையதாகிறது என்று காண்பதுதான், மறித்து நோக்கிப் பயன்கொள்ளும் நோக்காகும்.

நாடகம், விச்சை, கிறி, சதுர், வண்ணம், நயம், படிறு, இந்திரசாலம் என்பன தரும் அகராதிப் பொருள்கள் வேறு. திருவாசகத்தில் இவை ஓர் உருக்காட்சியைத் தோற்றுவிக்கும் வண்ணம் தனிச்சிறப்புப் பொருளுடையனவாகின்றன. எவ்வாறெனில், இச்சொற்கள் ஆளப்பட்டுள்ள இடங்களில் இறைவன் வந்து ஆட்கொண்ட அருட்செயலே பேசப்பட்டிருத்தலால், அதனோடு தொடர்புடைய பொருளே இந்நூலுள் இச்சொற்களுக்கு அமைந்து விடுகிறது.

உலகின்கண் ஒரு தாய் இவ்வாறு தன் குழந்தைக்குக் கசப்பு மருந்தையும் தந்திரம் செய்து ஊட்டி விடுகிறாள். ஓர் ஆசிரியன் தன் திறமையால் படியாத குழந்தையையும் படிக்க வைத்து, அறிவொளி ஊட்டி விடுகிறான். மருத்துவன் ஒருவன், ஏமாற்றுகிற முறையில் கூட, நோயாளிக்கு மருந்தைச் செலுத்தி விடுகிறான். இறைவனிடம் இத்திறமையும் அன்பும் பரிவும் காணப்படுதலைத்தான் இச்சொற்கள் புலப்படுத்துகின்றன. மாணிக்கவாசகருக்கு மட்டுமன்றி, உலகிலுள்ள உயிர்கள் அனைத்துக்குமே இறைவன் இங்ஙனம் அருள் செய்ய முந்துகின்றான். அவன் சதுராலே தான் உயிர்கள் உய்விக்கப் படுகின்றன.

**காட்சி நிலை**

திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலில் வந்து இறைவன் குருவடிவில், அந்தணனாக அடியவர் சூழ இருந் தான். ஆண்டுப் போந்த மணிவாசகரைக் கூவி அழைத்து ஆட்கொண்டான். பொன்னிற மேனியனாக, வெண்ணீ றணிந்து காட்சி தந்தான். அவன் வாய் வேதத்தை ஓதிக் கொண் டிருந்தது. வெள்ளைக் கலிங்கம் உடுத்தியவன்; மேலே பள்ளிக் குப்பாயம் பூண்டவன்; நீண்ட கரத்தினன்; நெறிதரு குஞ்சியினை உடையவன்; (நெளிந்த தலை முடியினன்); அறுகம்புல் மாலையணிந்து, சந்தனச் சாந்து பூசியவன்.

இவ்வாறு காட்சி தந்தவன் மானிடனே என்று குறிப் பிடும் மணிவாசகர், இறைவனே அங்ஙனம் மானுட வடிவில் போந்ததாகக் கூறுகிறார்.

அன்னைப் பத்து, காதலில் தன்னை இழந்த பெண் ணொருத்தி, அங்ஙனம் தன்னைக் கவர்ந்து கொண்ட வனைப் பற்றி அன்னையிடம் கூறி, முறையிடுவதாக உளது. அதனால் மணிவாசகரின் உளங்கவர்ந்த குருவின் தோற் றத்தை நன்கு அறிய முடிகிறது.

வேத மொழியர் வெண் நீற்றர் செம்மேனியர் 17:1

தோல் பொடிப்பூசிற்றோர் வேடம் இருந்தவாறு 17:4

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன்னாடரால் அன்னே என்னும் 17:5

தாள்தொடு தடக்கையினை உடையவர் என்பதால், அவ ருடைய ஆளுமைமிக்க தோற்றம் புலனாகிறது. பார்த்தால் பாண்டி நாட்டுக்காரர் போல் இருந்தாராம். அதனால் தான் அவரைத் தென்னன் என்றே பலவிடத்தும் அழைப்பாராயி னர். செம்மேனியில் பூசிய வெண்ணீறு கண்ணைப் பறித்

திருக்கிறது. சுமார் நூறு இடங்களிலேனும் இச்செழுந்தழல் மேனி புகழப்படுகிறது.

செம்மேனியான் வெண்ணீற்றான் 8:9

செய்யானை வெண்ணீறணிந்தானை 8:13

சுண்ணப் பொன் நீற்றற்கே 10:4

தோற்றமும் பொலிவும் வேடமும் கண்ணுள் புகுந்து கருத்துள் பதிந்து விட்டன. அக்காட்சி திருவாசகம் முழுவதும் இறைக் காட்சியாகவே வெளிப்படுகிறது.

நித்தமணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்திருப்பரால் அன்னே என்னும் 17:3

மாப்பிள்ளை எப்படி? 'ரொம்ப (நிரம்ப) அழகு' என்பது உலகியல். மணிவாசகரும் 'நிரம்ப அழகியர்' என்று சொல்லி மகிழ்கிறார்.

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்
பள்ளிக் குப்பாயத்தர் அன்னே என்னும் 17:7

தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர் 17:8

தாபத வேடத்தர் 17:9

வெள்ளை வெளேரென்ற உடையுடுத்து, தலைமுன் நெற்றி முழுதும் துலங்குமாறு வெண்ணீறு பூசி, உடம்பில் ஆசிரியனுக்கேற்ற குப்பாயம் - சட்டை அணிந்து, தாளியறுகு மாலை சூடிச் சந்தனம் பூசித் தவவேடமிட்டு வந்தவர் ஓர் அந்தணர் என்பதும் கூறப்படுகிறது. 'அந்தணனாய் அறைகூவி வீடருளும்' *(8:1)* 'கொண்ட புரிநூலான்' *(8:9)*, 'மறைபயில் அந்தணனாய்' *(10-14)*, 'உரு நாம் அறிய ஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்' *(11-1)* என வருவன காண்க.

இங்ஙனம் சிவபெருமானே குருவாக வந்து, உபதேசம் செய்து, தீக்கை அளித்து மறைந்தனர். மானுடனாக வந்தார் எனப் புகலும் மணிவாசகர், தாம் கண்ட காட்சியில் மானுட வடிவத்தையும் கடவுள் தோற்றத்தையும் கலந்தே பாடுகிறார். துண்டப் பிறையான், மறையான், கொண்ட புரிநூலான், செம்மேனியான், வெண்ணீற்றான் என்று *(8:9)* ஒரே பாடலில் வரும் போது, தெய்விகத் தோற்றத்திற்குரிய பிறை சூடுதலும் கலந்து வருதல் காணலாம்.

ஆடுஅரப் பூண்உடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவாறு அன்னே என்னும் 17:4

ஆடுஅர(வு) - ஆடுகிற பாம்பு அணிகலன். புலித் தோல் உடை. பொடி பூசிய தோற்றம். இவ்வாறு சிவபெருமானாகக் காணுதல் கருதத்தக்கது. 'உரு நாம் அறிய ஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்' *(11:1)* என்று, அருவான இறைவனே அந்தண உருவில் வந்து ஆண்டு கொண்டமை கூறப்படுகிறது. 'அருவாய்' மறைபயில் அந்தணனாய் ஆண்டு கொண்ட திருவான தேவற்கே' *(10:14)* என்பதும் காண்க. அருவாகவும் உருவாகவும் கண்ட காட்சியைத் தெள்ளிதிற் புலப்படுத்துமிடங்கள் மிகப்பலவாகும். இங்ஙனம் ஒரே கருத்து நூல் முழுதும் — உடம்பில் உயிர் போல, உணர்வு போலப் பரவி நிற்கும் காட்சியைத் திருவாசகத்தில் அழுத்தமாகக் காணலாம். 'அருவாய் உருவமும் ஆய பிரான்' *(11:2)* என்னும் போது அருவமான இறைவன் உருத்திருமேனி கொண்டு வந்தமை தெளிவாகக் கூறப்படுகிறது. திருத்தெள்ளேணத்தில் சீரார் பெருந்துறையான் சிந்தனையை வந்துருக்கிய காட்சி சித்திரம் போல் தீட்டிக் காட்டப்படுகிறது.

அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும் வந்தாண்ட திறம்

உரையாட உள்ளொளியாட ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ 11-6

இடையில் பாம்பைக் கட்டியுள்ள சிவபெருமான், தவ வேடங் கொண்டு வந்தவரை மங்கைதன் பங்கொடும் வந்த தாகக் குறிப்பது அருள் செய்ய வந்தமையைக் குறிப்பது. எனவே சிவனே குருவாக வந்தாரென்பதே பாடல்கள் தொறும் ஊடாடி நிற்கும் கருத்தாகும். அக்காட்சி உள்ளத்தை உருக்கி யதை உரையாட உள்ளொளியாட ஒண்மலர்க் கண்களில் நீர்த்திரையாடக், காட்டுகிற காட்சி, மெய்ப்பாட்டின் விளக்கமாய்க் கண்ணுள் தோன்றும் வண்ணப்படமாய் விரி கிறது.

**வான் பழித்து மானுடனாய் இம்மண் புகுந்த வள்ளல்**

இறைவன் தான் இருக்குமிடத்தே இருப்பதால் பய னில்லை. அவன் உயிர்களைத் தேடி வந்து, அருள்பாலிக்க வேண்டும். வைணவ சமயம் அவதாரமெடுத்து, இறங்கி வந்து, உலகில் நடக்கும் மனிதனாக இறைவனைக் காட்டு கிறது. உலகச் சமயங்கள் பல அவ்வச் சமயங்களைத் தோற்று வித்துப் பரப்பியவர்களையே குருவாகவும் கண்கண்ட இறை யாகவும் கொண்டு போற்றுகின்றன. சிவஞான போதம் எட் டாம் சூத்திரம் குருவாக வந்தும் இறைவன் உயிர்களை நெறிப்படுத்துவான் என மொழிகிறது.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்துஎனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

ஓர் அரசகுமாரன் ஐம்புலன்களாகிய வேடர் கூட்டத் தில் வளர்ந்து, அதனால் வேடர் இயல்புடையவனாகி வாழ லுற்றான். அங்ஙனம் வேட்டையாடி, அதிலேயே தோய்ந்து

வளர்ந்து, அயர்ந்து போனான். அந்நிலையில், இறைவன் குருவாகவும் எழுந்தருளி, அவன் செய்த தவத்தால் அவன் யார் என்பதை உணர்த்தினான். உணரவே, அக்குமாரன் உடனே வேடர்களை விட்டு விலகினான். தான் அரனைச் சார்ந்தவன், அரனே தனக்குறவினன் (வேடர் அல்லர்), அரனை அன்னியமாக இதுகாறும் நினைத்தது தவறு என உணர்ந் தான். மன்னர் குமாரனாகிய அவன் மீண்டும் தன் மன் னனைச் சேர்ந்தான்.

'குருவுமாய்' என்பது, உள்ளுணர்வால் உணர்த்துவதே யன்றி இறைவன் குருவாகவும் வருவன் என்பதைக் குறித் தது. மெய்கண்டார் ஒரு சிறுகதை கூறுவது போலக் கூறி இதை விளக்கியுள்ளார். அதன் உரைகளைப் படிக்கும் போது தான் தத்துவம் அச்சத்தைத் தருகிறது.

சைவ சமயத்தில் இறைவன் குருவாக வந்து ஆட் கொண்ட செய்தி, மணிவாசகர் வரலாற்றிலேதான் மிகச் சிறப்பான இடம் பெற்றுள்ளது. மாணிக்கவாசகர், இறை வன் இம்மண்ணுலகிற்கு வந்து, தன் அரிய நலன்களைக் காட்டி, தன் சிந்தையுட் புகுந்து, பெரும் மாற்றத்தை விளை வித்தமையை ஆனந்தமாக ஆடியும், நன்றியுணர்வோடு பாடியும் மீண்டும் காண வேண்டுமென அவாவியும் அங் ஙனம் காணப்பெறாமையால் ஊடியும் இரங்கற் குறிப் போடு உருகியும் பாடிய பாடல்களின் தொகுதியே திருவாசக மாகும். அதனால் முதற்காட்சி நிலை சார்ந்த, இந்நிகழ்ச்சி இக்காப்பியத்தின் தலைமைக் கருத்தாக விளங்குகின்றது.

பொங்குமலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி 8:1

சிவன் அவனி வந்தருளி 8:3

மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே 20:9

அவனியிற்புகுந்து எம்மைஆட்கொள்ள வல்லாய் 20:10

வான்பழித்து இம்மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல் 18:4

நமக்கு எப்படிப்பட்ட தலைவர் வேண்டும்? நம்மைத் தேடி வந்தும் காப்பாற்றும் தலைவர்தான் வேண்டும். குறிப் பறிந்து, வாய்விட்டுக் கூறுவதற்கு முன்பே, கொடுக்கின்ற வள்ளலே சிறப்புக்குரியவர். வானுலகிலேயே இருக்கிற இறைவன் நமக்கு எதற்கு? நாம் மேலை வீடெய்த நம் மிடம் வருகிறவன் யாரோ; நம்மைக் கூப்பிட்டும் நன்மை கொடுக்கின்றவன் யாரோ; அறைகூவி வீடருளும் அங்கணன் யாரோ அவன்தான் நமக்கு வேண்டும் என நம் உள்ளம் விழையும். அதனால்தான் திருவாசகத்துள் வரும் குரு வாகிய இறைவன். மாணிக்கவாசகரை மட்டுமன்றி நம்மை யும் கொள்ளை கொண்டு விடுகிறான்.

**வந்து, காட்டி, புகுந்து ஆண்டமை**

இறைவன் உலகில் வந்தமை திருவாசகத்தில் பேசப் படும் விதமே தனி ஆய்வுக்குரியது. அதிலுள்ள இலக்கிய நயமும் மெய்ப்பொருள் உண்மையும் ஒருசேர வைத்துச் சிந்திக்கற்பாலன. இறைவன் எவ்வாறெல்லாம் வந்தான்? காப்பியங்களில் இராமன் நடந்து வந்தான், சீதை நடந்து வந்தாள், இராவணன் நடந்து வந்தான் என்றால் அந்த நடை வருணிக்கப்படும் விதமே தனிச்சிறப்பாக இருக்கும். இங்கு இறைவன் இவ்வுலகிற்கு வந்ததே சிறப்பல்லவா? எனவே 'வந்து' என்ற சொல்லாட்சியின் சூழல்களையும் சிறப்புக்களையும் சற்றே எண்ணிப் பார்ப்போம்.

சிவன் இந்த அவனிக்கு வந்தான்; நமக்கு எளிவந்தவ னாக வந்தான்; தன் தொழும்பில் கொள்ள வந்தான்; அடி

யோம் கண்ணாரக் காண வந்தான்; தனி உருவம் கொண்டு வந்தான்; உத்தமனாக உளம்புக வந்தான்; எங்கள் முன் வந்தான்; மண்ணகத்தே வந்தான்; நிலந்தன் மேல் வந்தருளி னான். இவ்வாறே எண்ண எண்ண இனிக்குமாறு வருகின் றான். இதுபோன்றதே 'புகுந்து' என்ற சொல்லாட்சியும், வந்ததோடன்றி, மனத்துட் புகுந்தது இன்னும் சிறப்பன்றோ? இவை அனைத்தும் திருவாசகம் முழுதும் காணப்படுதலை, ஒரு சில சான்றுகளாலேனும் காட்டி நிறுவினால்தான் இவ் விலக்கிய ஆய்வு 'நோக்கு'டையதாகும்.

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி 1:21

நிலத்தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காஅட்டி 1:59

அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமை... 4:75,76

வந்து எனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை 5:26

வந்து இங்கு ஆட்கொண்ட தேனே 5:55

மையிலங்குபொற் கண்ணி பங்கனே
வந்து எனைப் பணிகொண்ட பின் மழக்
கையிலங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை என்றுனைக் கருதுகின்றிலேன் 5:95

கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்து அருளும் ஈசன் 7:2

தானே வந்து எம்மைத் தலையளித்து
ஆட்கொண்டருளும் 7:6

வந்து என்னைத் தன்தொழும்பில் கொண்டருளும்
வானவன் 8:14

பெருந்துறையில் எளிவந்த அந்தணன் 8:18

புனவேய் அனவளைத் தோளியொடும் புகுந்தருளி

நனவே எனைப் பிடித்து ஆட்கொண்டவா நயந்து
நெஞ்சம் 11:10

கண்ணார வந்து நின்றான் கருணைக் கழல்பாடி 11:19

நெஞ்சினுள்ளே புகுந்தருளி 15:4

உத்தமன் வந்து உளம் புகலும் 15:14

தனி உருவம் வந்தருளி 16:9

தென்பாலைத் திருப்பெருந் துறையுறையும் சிவபெருமான்
அன்பால் நீ அகம் நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது 38:7

போதலர் சோலைப் பெருந்துறைஎம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருள் 43:1

ஈசன், ஞாலமதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி 43:2

பட்டியலிட்டால் இடம் கொள்ளாது. அதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கே இத்துணையும் காட்டப்பட்டன. இறைவன் வந்தது பெரிது; நேரே வந்தது அரிதினும் அரிது — முதலமைச்சர் என் வீட்டிற்கு வந்தார் என்று ஏன் அழுத்தமாகக் கூறுகிறோம்? காந்தியடிகள் வந்திருந்த இடம் என்று ஏன், அதனை அழுத்திக் கூறுகிறோம்? பேரறிஞர் அண்ணா மதுரை வந்த போது, அவர் முதலமைச்சரானதால், பெரும் செல்வர்களெல்லாம் அழைத்தார்கள். ஆனால் அவர் ஓர் ஏழைத் தொண்டர் வீட்டிற்கே வந்தார் என்று நினைவு கூர்கிறோம். பின்வந்த பெருந்தலைவர்கள் வந்தென்ன? போயென்ன? இறைவனே, வந்தது பெருமை,

அருமை சிறப்பு என்பதால், அவர் வந்த செய்தி நூன் முழு துமே ஊடாடிக் கிடக்கிறது. மேலை நாட்டார் படிமம் (Symbol) என்புவற்றுள் பெயர்ப் படிமத்தை விட, வினைப் படிமம் சிறப்புடையதென்பர். முல்லையைக் கூறி, கற்பை உணர்த்துவதும்; கயல் எனச் சொன்னதும் பிறழும் கண்ணை நினைவுகூர வைப்பதும் பெயர்ப்படிமங்கள் பலமுறை எடுத்தாண்டு, சித்திரமாகத் தீட்டிய சிறப்பாலும், வருணனை களாலும் விளக்கத்தாலும் உவமையாலும் பொருள் வளர்ச்சி காட்டியதாலும் இவை குறித்த அளவிலேயே தனிப் பொருட் சிறப்பை உணர்த்த வல்லனவாகின்றன. இது போல, வினைச் சொற்களைப் பலகாலும் ஆண்டதாலும், சித்திரமாகத் தீட்டியதாலும், உருவகப்படுத்தியதாலும் அவை படிமமாவது மிக அரிதாகவே காணப்படும். திருவாச கத்தில் வந்து, புகுந்து, காட்டி என்ற சொற்கள் ஞான நாட கத்தின் காட்சி வரிசைகளாய்ப் படிமப் பொருள் கொண்டு திகழ்கின்றன. சாதாரணமாக நாம் பயன்படுத்தும் 'வந்து' என்ற சொல்லுக்கும் திருவாசக 'வந்து'வுக்கும் நிறைய வேறு பாடுண்டு. இறைவன் கீழிறங்கி வந்து அருளுதலாகிய காட்சி முழுதும் அவ்வொரு சொல்லில் அடங்கிக் கிடக் கிறது வறண்டு வாடிக் கிடந்த நிலத்தில் மழை வந்தது போன்றது அது. இறைவனின் திருவருளைக் குறிக்கும் படிமமாக (Symbol) அது திருவாசகத்தில் இலங்குகிறது.

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்துஎனதுள்ளம் புகுந்தடியேற்கு அருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்து அன்றே
வெறுத்திடவே 38:10

திருவாசகம் முழுவதும் கற்றார், இப்பாடலில் மையக் கருத்து எது? மையச்சொல் எது? என்பனவற்றை நன்குணர்

வர். முற்காட்டியாங்கு 'வந்து' என்ற சொல்லாட்சி வந்துள்ள இடங்களையெல்லாம் பலமுறை படித்து, நினைவிற் கொண்டால்தான் இப்பாட்டின் பொருள் நன்கு மனத்திற்குப் படும். இதுவே நோக்கு எனப்படுவது. திருவாசகம் என்ற முழுமையில், இப்பாடல் ஓர் உறுப்பு. இப்பாடலில் 'வந்து' என்பது ஓர் உறுப்பு. அது வினைப் படிமமாக உளது. 'தானே வந்து எனதுள்ளம் புகுந்தான்' என்பதே மையக் கருத்து. அதிலும் வந்து என்ற சொல்தான் அவன் தானாக நாடி வந்ததையும், தன்னிடம் வந்ததையும் குறிப்பதாகும். அவன் வந்ததற்குக் காரணம் தான் தவம் செய்திருந்தமையே யாம். தான் சிவாயநம என்று சொல்லி, உணரக் கற்றதற்கும் உயிர் வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கி வீடு பேற்றில் புக விரும்பியதற்கும் தன் உள்ளமெல்லாம் தித்தித்தற்கும் அவ் வருகையே காரணமாகும். எனவே வந்து என்றதுமே குரு வருதல், உலகினிடை வருதல், வந்து அருளுதல், தேவன் மனிதனாக வருதல், எளிமையுடன் வருதல் என எல்லாமே பெறப்படுகின்றன.

புகுந்து என்பது வருதலோடு இல்லுட் புகுதலையும் மனத்துட் புகுதலையும் உணர்வுட் புகுந்து கலத்தலையும் சுட்டுகிறது.

### காணுதலும் காட்டுதலும்

திருவாசகம் அனுபவ முதிர்ச்சியால் பிறந்ததாகலின் அதன் வாசகங்கள் பல மெய்யியல் இலக்கணச் சூத்திரங்கள் போலவும் பழமொழிகள் போலவும் ஆத்திசூடி கொன்றை வேந்தன் அனைய நீதிவாசகங்கள் போலவும் திகழ்கின்றன.

> சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
> அவன் அருளாலே அவன்தாள் வணங்கி 1:17,18

என்பது ஒரு திருவாசக மந்திரம். அவனை நாம் வணங்குதற்கும் அவன் அருளே காரணமாகும். நாம் செய்த தவப் பயனைக் கொண்டு என்று கூறலாமாயினும் அத்தவ நினைவைத் தருபவனும் அவனே என்பது கருத்து. அவன் இயக்குபவன்; நாம் இயங்குபவர். அவனை வணங்குதலாகிய நம் இயக்கத்திற்கும் அவன் நம்மை அவ்வாறு இயக்குதலே காரணம். ஆனால், தீயவழிகளில் இயங்குதற்கும் அவனே காரணம் என்று, கூறி விடலாம் அல்லவா? அதற்காகவே 'சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்'' என்று கூறுகிறார். உயிரின் முயற்சி சிறிதேயாயினும், அது நன்னெறி நோக்கியதாக இருக்க வேண்டும். சிந்தையுள் சிவன் நிற்க வேண்டும். நிற்பதற்கும் அவனே காரணம் எனினும், அவ்வாறு சிந்திக்கும் முயற்சியினுட் புகும் உயிர்க்கே அவன் அருள் செய்ய முந்தி வருவான் என்பது அடிப்படை. அதுபோலவே இறைவனை நேரே கண்டதைப் பற்றிக் கூறும் மணிவாசகர், அவன் அங்ஙனம் காட்டக் கண்டதைக் கூறி உலகில் தாம் இறைவனை நேரே கண்டது உண்மையே என வற்புறுத்துகிறார். இறைவனைப் போல் இருந்தது என்றோ; இறைவனைக் கண்டது போல் இருந்தது என்றோ அவர் கூறவில்லை. அரைக் கிணறு தாண்டும் வழக்கம் அவரிடமில்லை. ''கடவுளே நீ இருந்தால் காப்பாற்று!' என்பது இன்றைய, ஐய உலகில் உழலும் மானுடனின் வேண்டுதல். ஆனால் ஐயமற்ற, உறுதிப்பாடு உடைய இடத்தில் மணிவாசகர் நின்று கொண்டு பேசுகிறார்.

'கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்து எய்தினான்'' *(1:21)*. கண்ணுக்குக் காட்ட, கண்ணெதிரே காட்ட, தன் கருணைக் கண்ணை என் கண்ணுக்குக் காட்ட என்று இதைஎவ்வாறு வேண்டுமானாலும் விரித்துப் பொருளுரைக்கலாம். 'மெய்யே' 'உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' *(1:32)* என உறுதிப்படுத்துதல் காணலாம்.

திருவண்டப் பகுதியில் இறைவனின் புகழுரைகளை அடுக்கிக் கொண்டே வருகின்றார்.

முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன் னேரில்லோன் தானே காண்க
ஏனத் தொல்லெயிறு அணிந்தோன் காண்க
கானப் புலிஉரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன் 3:29—34

என்று பாடிவரும் பொழுது, முதலில் வருவன எல்லாம் சிவபெருமானின் தனி முழுமுதல் உண்மைகள்; தோற்ற வருணனைகள். 'நீற்றோன்' என்றதும் மணிவாசகருக்கு என்ன நினைவு வந்திருக்கும்? 'செம்மேனியான் வெண் ணீற்றான்' என்றும் 'செய்யானை வெண்ணீறணிந்தானை' என்றும் பாடிய நெஞ்சத்திற்கு இங்கும் குருவாகிவந்த அந்தண னின் தோற்றமே நினைவில் ஓடியிருக்குமன்றோ? திருவாச கத்தில் முழுமை நோக்கில் கற்கும் நமக்கும் கானப்புலி உரி உடுத்தது வரை வானுலகச் சிவன் நினைவிலோடினும் 'நீற் றோன்' காண்க என்றதும் வெண்ணீறு பூசிய, அந்தண வடி வினனாகிய, மனித உருக்கொண்ட குருவே மனக்கண் முன் தோற்றுதல் காணலாம்.

மாணிக்கவாசகருக்கு இந்நினைவே ஓடிற்றென் பதைப் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன. இவ்விரண்டு அடி களுக்கு முன்னரும், பின்னரும் மணிவாசகர் மிக நிதான மாக இறைவன் தோற்றப் பொலிவுகளையே வருணிக்கின் றார். மீண்டும் காண்க.

கானப்புலிஉரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும், நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்

இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன்று அவ்வயின் அறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க 1:32-37

இறைவன் புகழை ஏத்தித் தொழும் பொழுது உருகாத உள்ளம், 'நீற்றோன்' என்றதும் நீராய் உருகி விடுகிறது. சற்றே புகழை நிறுத்தி 'நினைதொறும் நினைதொறும் ஆற்றேன் காண்க, அந்தோ கெடுவேன்' என்று அரற்றி அழு கிறார். ஏன்? அன்று நேரில் வந்து, கண்ணெதிரே காட்சி தந்து, மறைந்ததை நினைக்கும்தோறும் நெஞ்சம் நெக்குருகு கின்றது. 'அந்தோ கெடுவேன்' என்பது, அதனை நிலை பெறப் பெறாமல், இழந்ததால் வந்த இரக்கம். அதுதானே ஐயா திருவாசகம். அந்த இரக்கத்தை உருக்கத்தைக் கண் ணீரைப் பாடல்களாக வடிவப்படுத்தி விட்டதுதான் திரு வாசகம். இறைவன் புகழைச் சொல்லிக் கொண்டே வரு கிறார்; அவரையும அறியாமல் 'நீற்றோன்' என்ற சிறப்பும் வந்து விடுகிறது. நீறு பூசிய சிவபெருமானைப் பொது வாகக் குறிப்பதுதான் அது. ஆனாலும் மணிவாசகர் வாழ் வில் நடந்துவிட்ட நிகழ்ச்சியால், அப்பொதுச் சொல் சிறப்புப் பொருளுக்கு — சிறப்பான, அதிசயமானதொரு நிகழ்வுக்கு உரிய பெயராகி விடுகிறது. 'நீற்றோன்' என்றதும், அது இலக்கியத் திறனாய்வுப்படி, படிமமாய் மாறி, ஒரு க்ட்சியைக் கண்ணெதிரே கொண்டு வருகிறது. நீறு பூசிய — நெற்றியும் உடலும் திகழ நீறு பூசிய பொன்னிறமேனி தோன்றுகிறது; குருந்தமரம் காட்சியளிக்கிறது; திருப் பெருந்துறையில் தாம் பெற்ற பெறற்கரிய பேறு உள்ளுணர் வில் ஓடுகிறது. உடனே சொல் தடைப்படுகிறது. நினைக்கும் தோறும் நினைக்கும் தோறும் அந்தோ ஆற்றேன், கெடுவேன் என்று நன்றிப் பெருக்கோடு, கரைந்துருகுகின்றார். சீரார் பெருந்துறையான் சிந்தனையை வந்துருக்கிய காட்சியால்

நிகழ்ந்தது இது. இன்றேல் 'பரமன் காண்க, பழையோன் காண்க' என்று முடியுமிடங்களில் கூட, மணிவாசகர் இங்ஙனம் உருகியிருக்கலாமே?

இக்காட்சிப்பேறே மணிவாசகர் உள்ளத்துள் நின்று, அவருக்கு ஞானப்பேறு தந்தது. அதனால் நூல் முழுதும் இன்பத்துக்கும் துன்பத்துக்கும் அதுவே காரணமாதலைப் பல இடத்தும் காண்கிறோம். பெறற்கரிய பேறு கிடைத்ததே என்பதால் மகிழ்ச்சிக்கும் பெற்றதைக் கைவிட்டு விட்டோமே என்ற ஏக்கத்தால் இரக்கத்துக்கும் அது காரணமாகிறது.

வெண்ணீற்றனாகக் காட்சியளித்ததை ஒரு படிமமாக முன்பு கண்டோம். செம்மேனியனாக விளங்கியதும் அங்ஙனம் படிமக்காட்சி ஆதலை இனிக் காண்போம்.

வந்துஎனை ஆட்கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே இரண்டும்இலித் தனிய னேற்கே 5:26

இங்கு அனுபவமும் அறிவுமாகிய இரண்டுமில்லாத தமக்கு இறைவன் வந்து ஆட்கொண்டு, தன்னையே தந்த செய்தி கூறப்படுகிறது. அதனால் 'செந்தாமரைக்காடு போன்ற அழகிய திருமேனியை உடையவன்' என்று எல்லோரும் போல் உரை சொன்னால் போதாது. அங்ஙனம் ஆட்கொள்ள வந்தபோது, செக்கச் செவேர் என்ற செம்மேனியவனாய் இறைவன் வந்தான். அக்காட்சியையே, இத் தாமரைப் படிமம் காட்டுகிறது. 'அலங்கலம் தாமரை மேனி அப்பா, ஒப்பிலாதவனே' *(6:29)* என்னும் போதும் பிற இடங்களிலும் இப்படிமம் தோன்றுவதைக் காணலாம்.

கண்ணால் யானும் கண்டேன் காண்க
... ... ... ...
புவனியில் சேவடி தீண்டினன் காண்க
சிவன்என யானும் தேறினன் காண்க
அவன்எனை ஆட்கொண்டு அருளினன் காண்க
3:58, 61-63

தாம் நேரில் கண்டது உண்மை என்பதையும் அங்ஙனம் தம்மால் காணப் பெற்றவன் சிவனே என்பதையும் மணிவாசகர் சத்தியம் செய்வார் போல் உறுதிப்படுத்தக் காண்கிறோம். இங்ஙனம் கேட்கும் மாக்கள் ஐயுறா வண்ணம், நகுகின்ற உலகோர் நம்பும் வ்ண்ணம் கூறுகின்றாராயினும் இறைவன் தானாக வந்து காட்டவே, தாம் கண்டதாகத்தான் பல இடத்தும் கூறியுள்ளார். அவர்தம் சூத்திரத்தின்படி அவனருளால் அன்றோ அவன்தாள் காணுதல் கூடும்!

இறைவன் தமக்குத் தன் சிறப்புக்கள் அனைத்தையும் புறக்கண்களுக்கும் தோற்றுமாறு காட்டினான் என்பதை வற்புறுத்துகிறார்.

கேட்டாயோ தோழி கிறிசெய்தவாறு ஒருவன்
தீட்டார் மதில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டி
தாள்தாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம் மேலை வீடெய்த
ஆள்தான் கொண்டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்
8:6

காட்டுதற்கரிய தோற்றத்தையே தமக்குக் காட்டியதை — உலகோர் நம்பினும் நம்பாவிட்டாலும் - சிவம் என்பதைக் காட்டியதை அவர் உறுதிப்படுத்தும் விதம் எண்ணியெண்ணி மகிழ்தற்குரியது.

பேணு பெருந்துறையில், கண்ணார் கழல் காட்டி 8:10

நாட்கொண்ட நாண்மலர்ப் பாதம் காட்டி 9:8

பாரிடைப் பாதங்கள் காட்டி 18:9

அந்தணனாகி வந்து இங்கே
அழகிய சேவடி காட்டி 18:10

செந்தழல் புரை திருமேனியும் காட்டித்
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி
அந்தணனாவதும் காட்டி 20:8

*'காட்டினை உன் கழலிணைகள்' (38:1)*, *'அடியேற்கு உன் பாதமலர் காட்டியவாறு' (38:3)* என இவ்வாறு இறைவன் தன் பாதமலர்கள் காட்டிய செய்தி மட்டும் பந்து இடங்களுக்கு மேல் காணப்படுகிறது. திருவடித் தீக்கை பெற்றதால், பாதமலர்களின் ஊற்றுணர்ச்சியால் உந்தப் பட்டு இங்ஙனம் பாடினாராதல் வேண்டும். இங்ஙனம் 'கழல்' என்றதுமே, திருவாசகத்தில் 'அருளின் படிமமாய்'ப் பொருள்படுமிடங்கள் மேலும் பலவுள.

கேட்டாரும் அறியாதான் கேடொன்றில்லான்
கிளையிலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே
காட்டாதன எல்லாம் காட்டிப் பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமல் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே 5:28

இங்ஙனம் இறைவன் செய்த அற்புதச் செயலைக் கண்டு நாட்டு மக்கள் விழித்தகண் விழித்தபடி இருந்தார் களாம். எல்லோருக்கும் பெருவியப்பாக இருந்திருக்கிறது. அமரரும் அறியாதவன் 'இது அவன் திருவுரு, இவன்

அவன் எனவே' (20:7) எழுந்தருளி வந்தானாம். எங்கும் மறைந்து உறையும் அவன் தமக்குக் கண்ணுக்குப் புலனா மாறு காட்சியளித்ததை வியந்து 'கரந்ததோர் உருவே களித்த னன் உன்னைக் கண்ணுறக் கண்டு கொண்டு இன்றே'' (22:6) எனக் கண்ணாரக் கண்டதாகக் கூறுமிடமும் உண்டு. இவ் வாறு, முதன்மை நிகழ்ச்சியான இதனைப் பல்வேறு இடங் களில் குறித்து, எல்லாம் அவன் செயலே என வியப்பது மணிவாசகரின் தனிச் சிறப்பாகக் காணப்படுகிறது.

**எதிர்பாராத நல்வினைப் பயன்**

புத்தர் பெருமான் போதி மரத்தின் அடியில் அமர்ந்த தும் திடீரெனப்போதம் கைவரப் பெற்றது போல் திருவாத வூரரும் எவ்விதமாகவும், முன்செயல்-ஆயத்தம்-எதிர்பார்ப்பு எதுவுமின்றியே, திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலில் குருமணியை எதிர்ப்பட்டு ஞானம் பெற்றார் எனத் தோற்று கிறது.

> கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
> மற்று அறியேன் பிறதெய்வம் 38:5

பிற தெய்வம் அறியாராய், பிற சமயங்களில் ஈடு படாது வாழ்ந்ததனால் பிறவிப்பிணி தீர்தற்குரிய அளவு கல்வியும் ஞானமும் பெற்றிலரேனும், இறைவனால் கடைக் கணிக்கப்பட்டார். அதற்குக் காரணம் நல்வினைப் பயனே யாகும். 'நானேயோ தவம் செய்தேன், சிவாயநம எனப் பெற்றேன்' (38:10) எனத் தம் தவப்பேற்றினை எண்ணி மகிழ்வார் அவர். சாதாரண நாட்களில் 'ஏய்ந்த மாமலர் இட்டு, முட்டாதது ஓர் இயல்பொடும் வணங்காது' (41:2) வாழ்ந்த தாகக் குறிப்பிடுகிறார். 'நல் உறவு செய்து எனை உய்யக் கொண்ட பிரான்' (42:7) என்பதால் இச்செயல் நிகழ்வு தற்செயலாக ஏற்பட்டதென்றும், அதற்குப் பிறகே இவ் வுறவு முற்றியதென்றும் போதருகின்றது.

**நாய்க்கு இட்ட தவிசு**

தம்மை மணிவாசகர் மிகவும் எளிமைப்படுத்திக் கொண்டு இவ்வாறு கூறுகின்றார். தகுதியிலாத தமக்கு இறைவன் திருவைந்தெழுத்தைப் போதித்து, உலகோர் அறிய உய்யக் கொண்டது நாய்க்குத் தவிசிட்டது போன்ற தென அவர் பல இடங்களில் பேசுகின்றார். ‘பணியுமாம் என்றும் பெருமை’ என்பது வள்ளுவம். அதற்காக இவ்வளவு தாழ்த்திக் கொள்ள வேண்டுமா? என்றொரு கேள்வி எழு கிறது. தன் முனைப்பு அறுதலின் தத்துவம் என்று இதைக் கருதலாம் போலும்.

நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனை 8:7

நாயிற் கடைப்பட்ட நம்மை 9:8

நாயிற் கடைப்பட்ட நம்மையும் ஓர் பொருட்படுத்தி 13:3

நன்றாகவைத்து என்னை
நாய்சிவிகை ஏற்றுவித்த... பெருமான் 10:8

நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனியான் 10:20

ஒரு நாய்க்குத் தவிசிட்டு இங்கு
ஊனார் உடல்புகுந்தான் 34:2

அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமாறு அன்றே
நின் பொன்னருளே 38:5

நம்மையும் ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே
51:9

இறுதிப் பாடலில் காணப்படும் அதே செய்தி, முதலி லுள்ள சிவபுராணத்திலும் இடம்பெறுவதைக் காணலாம்.

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே 1:60,61

முற்கூறிய நாய், தாய் உவமையே பின்னரும் கூறப் பட்டிருப்பது கருதத்தக்கது. திருவண்டப் பகுதியில் 'அறை கூவி ஆட்கொண்டருளி' *(148)* என்றவர், திருவம்மானையி லும் 'அறை கூவி வீடருளும்' *(1)* அந்தணனைக் காட்டு கிறார். காப்பியங்களிலே காணும் அளவு கருத்தோட்டமும் நிகழ்ச்சித் தொகுப்பும் பாவிகமும் இருத்தலால், திருவாச கத்தைக் காப்பியத்தோடு ஒத்தது எனவும் முழுமை நோக்கில் கற்க வேண்டியது எனவும் கூறும் கருத்துக்களை எளிதில் மறுத்தல் இயலாது.

## தொன்மக் கதைகளும் கருத்து வெளிப்பாட்டிற்குத் துணை நிற்கும் அழகு

திருவாசகத்தில் ஒருசில தொன்மங்கள் திரும்பத் திரும்ப வருகின்றன. திருவிளையாடலில் வரும் சில தொன் மங்கள் இடம் பெறுகின்றன. மாணிக்கவாசகர் தம் வாழ்க்கை யில் நடந்த சில அற்புத நிகழ்ச்சிகளைத் தொன்மங்கள் என்றே கருதுகின்றார்.

யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்தது, முப்புரம் எரித்தது, தக்கன் வேள்வியைத் தகர்த்தது, தேவர் களும் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடியது எனப் பல தொன்மங்களைக் காரண காரியத்தோடும் மெய்ப் பொருளை விளக்கும் நோக்கோடும் ஆள்கின்றார். மண்ணா ளும் வேந்தர்களும் செருக்குக் கொண்டால் அழிவர் என்பதை தக்கன் வேள்விக் கதையால் அவர் அறிவுறுத்துகிறார். இறைவனை ஐம்பூதங்களாய்க் கண்டு பாடுவதில் அவ ருக்குப் பெருவிருப்புண்டு.

சொக்கர் வலைவீசியது, பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்தது, வளையல் விற்றது போன்ற திருவிளையாடல் களைத் 'திருவார்த்தை'யில் காணலாம்.

காட்டகத்து வேடன், கடலில் வலைவாணன்
நாட்டில் பரிப்பாகன் நம்வினையை—வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளும் கெடநெஞ்சே வாழ்த்து 48:3

இதில் பிற புராணக் கதைகளுடன் தன்பொருட்டு பரி மீது வந்த கதையையும் சேர்த்துக் கூறியிருக்கக் காணலாம். இதுபோன்ற இடங்கள் வேறு சிலவும் உள. இவை எல்லாம் தனி ஆய்வுக்குரியன.

இங்கு இறைவனின் அடிமுடி காணாத கதை ஆளப் பட்டுள்ள முறை மட்டுமே விளக்கப் பெறுகிறது. இறை வன் நாயினும் கடைப்பட்ட தமக்குத் தாயினும் சாலப் பரிந்து வந்து அருள் செய்ததாக மணிவாசகர் குறிப்பிடுகி றார். விண்ணவரும் காண மாட்டாத திருவடிகளை இறை வன் தமக்குக் காட்டியதை அவர் வியந்தும் நன்றியுணர் வோடும் பேசுமிடங்கள் நூற்றுக்கணக்கில் உள.

செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய
பொங்குமலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி 8:1

பாரார், விசும்புள்ளார், பாதாளத்தார் புறத்தார்
ஆராலும் காண்டற்கு அரியான்; எமக்கு எளிய பேராளன்
8:2

பூமேல் அயனோடு மாலும் புகல் அரிது என்று
ஏமாறி நிற்க 'அடியேன் இறுமாக்க 10:20

அரியொடு பிரமற்கு அளவறி ஒண்ணான்
நரியை குதிரை ஆக்கிய நன்மையும் 2:35, 36

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவன் அவனி வந்தருளி 8:3

இவ்வாறு சிவன் புறத்தார்க்குச் சேயோனாகியும் அன்பர்க்கு எளியனாகியும் உள்ள தன்மை, புராணக் கதை மேல் வைத்து விளக்கப்படுகிறது. இக்கதை வருமிடங்களில் எல்லாம், அருமைக்கும் எளிமைக்கும் ஒரு முரண் சுவை தோற்றுமாறு கற்பனை அமைகிறது. மணிவாசகருக்கு இறைவன் தானே போந்து அருள் செய்தமையால், அவன் எளிமையை நயம்பட, மனத்தில் பதியுமாறு எடுத்தியம்புவதற்காக இப் புராணக் கதை சிறந்த உத்தியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏனைய புராணக் கதைகளினும் இது மிகுதியாக இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

**ஞானகுரு: நேர்க்கெதிர் நோக்குதல்**

ஞானகுருவாக வந்த இறைவன் ''என்பெலாம் உருக நோக்கினான்'' *(35:3)*. அவனது கடைக்கண் நோக்கிலேயே வாதவூரர் தம்மைப் பறிகொடுத்து விட்டார்.

புணர்ப்பது ஒக்க எந்தை என்னை ஆண்டு பூண
நோக்கினாய் 5:71

சேரும் காலம் வரும் போது இறைவன் அருளால் ஆண்டு, தன்னை அடையும்படி, பொருந்தும் வண்ணம் திருவருட் பார்வை நல்கியமையை இவ்வடி விவரிக்கிறது.

ஈறிலாத நீ எளியை ஆகிவந்து
ஒளிசெய் மானுடமாக நோக்கியும் 5:91

முடிவிலாத பெருமையுடைய இறைவன் எளியனாகி வந்து, ஒளிகாலும் மானுட வடிவத்துடன் அருட்கண் நோக்கினான். முதற்கண் குருமணி தம் கண்ணால் தீக்கை நல்கியதை இது குறிக்கிறது. காதல் வாழ்வில் 'கண்ணொடு

கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள், என்ன பயனும் இல' என்பது போல, இறை ஒளியும் ஆன்மாவும் கண்ணால் அருள்கனிய இரண்டறக் கலந்ததை இம்முதல் நிகழ்ச்சியின் முதல் நோக்கு காட்டுகிறது.

முதல் பார்வையே, வாதவூரரின் நெஞ்சில் அன்பைத் தோற்றுவித்து, நெகிழ வைத்துவிட்டது. எனவே அப்பார் வையை நினைத்து நினைத்து ஏங்குகிறார் மாணிக்கவாசகர்.

அன்பால் நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது
என்பாலே நோக்கியவாறு அன்றேஎம் பெருமானே 38:7

தன்னை நோக்கிய பார்வையின் திறத்தாலேயே தான் ஆட்பட நேர்ந்து விட்டது என்கிறார் அவர். மற்றுமொரு பாடலில் இந்நோக்கின் ஆற்றலை அவர் விரிவாகப் பேசு கிறார். திருப்பெருந்துறைத் தலைவன் வந்து ஆட்கொண்டு பேரருளால் நோக்கிய நோக்காகிய மருந்து பேரின்பத்தைத் தந்து, தம்மைப் பித்தேற்றி, பிறப்பறுத்து, பேசற்கரிய களிப் பினையும் விளைவிக்கும் என்பது அவர் தரும் விளக்க மாகும்.

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே ஆக்கும்வந்து என் மனத்தை—அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்து இறவாப் பேரின்பம் வந்து 47:6

தம்மை அவர் பார்த்தது 'உயிரை உண்பது போல இருந்தது' என்றும் குறிப்பது உணர்வின் ஆழத்தைக் காட்டு கிறது.

'இன்பே அருளி எனை உருக்கி உயிருண்கின்ற
எம்மானே' (44:3)

என்பது மணிவாசகம்.

அதுபோலவே மாணிக்கவாசகரும் அவ்விறைவனை அப்படியே பருகுவது போல் பார்த்தாராம். 'உருகி நான் உனைப் பருக வைத்தவா' (5:95) என்னும் போது அவ ருண்ணுமாறு தாம் உருகியதையும் தாமும் அவரை நீர் போலப் பருகியதையும் ஒருசேரக் குறித்தல் காணலாம். இவை போன்ற பகுதிகளால் இந்த ஞான நாடகத்தின் முதற் காட்சியே சுவையுடையதாய், ஏனைய காட்சிகளுக்கெல் லாம் அறிமுகமாய், விளக்கமாய் இருத்தலை அறியலாம். மேலும் இதன் தலைமைப் பாத்திரங்களான இருவரும்—மாணிக்கவாசகரும் குருவடிவாகிய இறைவனும்—ஆன் மாவும் கடவுளும் எத்தகைய பண்புநலம் கனிந்த, பக்குவம் மிக்க பாத்திரங்கள் என்பதும் உணர்த்தப்படுகிறது. 'பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து, இருவரும் ஒருவராவரென்பது' அப்போதே புலனாகி விடுகிறது.

**வார்த்தையுட்படுத்துப் பற்றுதல்**

ஞானகுரு 'சிவாயநம' எனும் திருவைந்தெழுத்தை ஓதி, விளக்கி அருளினார். அவ்வார்த்தையைக் கேட்ட அள வில் தம்மை அதனுள் அகப்படுத்திக் கொண்டார் திருவாத வூரர். 'மன்ன, என்னை ஓர் வார்த்தையுட்படுத்துப் பற்றினாய்' என்பது அவர் வாக்கு (23:2). அதனால் அவர் தம் வாக் கினை அவ்விறைவனின் புகழ் மொழிகளைப் பேசவே உரித்தாக்கினார். 'வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி' என, அவ்விறைவன் புகழ்பாடும் வார்த்தையை மணி போன்ற வார்த்தை—மணிவார்த்தை என்றே போற்றினார். இறை வனை மாசற்ற மணி என்றும் அவன் புகழை மணி வார்த்தை என்றும் அதனையே தாம் பேசிப் பிறப்பறுத்ததாகவும் மாணிக்கவாசகர் 'பண்டாய நான்மறை'யில் கூறுகிறார். 'மாசில் மணியின் மணிவார்த்தை, பேசிப் பிறப்பறுத்தேன்' என்பது அவர் திருவாக்கு (48:7).

சென்னி மேல் திருவடி வைத்தல்

தம் பாதமலர்களில் வீழ்ந்து வணங்கிய மாணிக்க வாசகரின் திருமுடி மேல், தமது திருவடிகளைப் பதித்துச் சிவதீக்கை தந்த நிகழ்ச்சி அடுத்ததாகும். சரணாகதித் தத்து வத்தின் சின்னமாக இது காணப்படுகிறது. உயிர் இறையின் பால் முற்றிலும் தன்னை ஒப்படைப்பதற்கு அடையாளம் இது. இதனையும் சேர்த்து நோக்கும் பொழுதுதான் மனம், மொழி, மெய்களாலாகிய சிவதீக்கை முற்றுப் பெறுகிறது. கண்ணால் நோக்குதல் மனத்தின் செயலாதலின், அது மனவழித் தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

பூவார் அடிச் சுவடு என் தலைமேல் பொறித்தலுமே 11:7

பாதமலர் என் ஆகம் துன்னவைத்த பெரியோன் 13:9

சீரார் திருவடிஎன் தலைமேல் வைத்தான் 13:10

என்னுள்ளே தன்இணைப் போதவை அளித்து 13,14

என் உடலிடம் கொண்டாய் 22:5, 10

சென்னிப்பத்தில் தம்சென்னி அவ்விறைவனின் சேவடிக் கண் பொருந்திப் பொலிதலையே பாடியுள்ளார்.

பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்து பார்ப்பான்எனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடம்செய்வான்
எத்தனாகி வந்துஇல் புகுந்துஎமை
ஆளுங் கொண்டுஎம் பணி கொள்வான்
வைத்தமா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே 42:4

தம் சென்னி அத்திருவடிகளில் மன்னி (நிலை பெற்று)ச் சுடர்வதாகவும் மலர்வதாகவும் பொலிவதாகவும் திகழ்வ

தாகவும் அவர் கூறும் வாசகங்கள், இச்சிவ தீக்கையின் பெருஞ் சிறப்பை நன்கு புலப்படுத்துகின்றன.

மடைமாற்றம் - பெரும் திருப்பம் - ஞான உதயம்

மாணிக்கவாசகரின் வாழ்க்கையிலே பெரும் மாற்றம் ஒன்று நிகழ்கிறது. இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் குருவாகி வந்த இறைவன் மறைந்தமையை நாம் பிற பாடல்களின் வழி உய்த்தறிகிறோம். ஆனால் இந்நிகழ்ச்சியால் ஏற்பட்ட மனமாற்றம் சொல்லும் தரத்ததன்று. ஞான நாடகத்தின் திருப்புமையம் இது எனலாம். இதுகாறும் அமைச்சராக இருந்தவர், தம் ஆரவார நீர்மை அனைத்தையும் மறந்து துறவியாகின்றார்; பித்தர் போலாகி உலகோர் பிதற்றிச் சிரிக்கும் நிலையை அடைகிறார். கொண்ட கடமையை மறவாதவர், இப்போது உலகையே மறந்தொழிகிறார்.

அரசன் குதிரை வாங்கக் கொடுத்த பொன்னுடனும் பரிவாரத்துடனும் கீழைக் கடற்கரை நோக்கிச் சென்றவர், அவ்வரச ஆணையையும் மறந்து விடுகிறார். அந்தப் பொன் முழுவதும் சிவ புண்ணியச் செயல்களில் செலவாகி விடுகிறது. சில நாள் செல்ல, ஞானகுருவைப் பிரிந்த ஏக்கம் தலை தூக்குகிறது. பாண்டியனுடைய பொன்னைச் செல விட்டதோடு, வந்த வேலையை மறந்தமையும் நினைப் பூட்டப்படுகிறது. இந்த மாற்றத்தைச் சிலர் மனமகிழ் வோடு போற்றுகிறார்கள். பலர் எள்ளி நகையாடித் தூற்று கிறார்கள். மாணிக்கவாசகரின் மாசற்ற மனம் கூசுகிறது. உலகோர் தம்மைத் தூற்றிச் சிரித்து ஆரவாரிப்பதாக எண்ணி ஏங்குகிறது. மற்றொருபுறம் இம்மாற்றத்தால் தம் மனம் ஞான ஒளி பெற்றுத் துலங்குவதை அவரால் உணர முடி கிறது. மேன்மேலும் எழுச்சியுண்டாவதையும் இருள் விலகு வதையும் அவர் உணர்கிறார். உலகம் அவருடைய மாற்

றத்தை முற்றிலும் விளங்கிக் கொண்டதாகத் தோன்ற வில்லை.

உளவியலில் 'மடைமாற்றம்' என்று ஒன்றைச் சொல் வார்கள். சுட்டித்தனமான ஆனால் சுறுசுறுப்பான இளை ஞன் ஒருவனால் அடிக்கடி ஏதாவது தீங்கு விளைந்த வண் ணம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனை அடிப்பதாலும் எதிர்ப்பதாலும் அச்சுட்டித்தனமே வளரும். அவனுக்குப் பிரியமான விளையாட்டிலோ, பொழுது போக்கிலோ, நல்லதொரு ஆர்வமுள்ள துறையிலோ அவனை மெல்லப் பழக்கி ஈடுபடுத்தி விட்டால் அவனுடைய சுட்டித்தனமெல்லாம் அவ்விளையாட்டில் போய் அதில் அவனை மிளிர வைக்கப் பயன்படும்; பயனுள்ள பொழுது போக்கில் புகவைத்து விட்டால் அவனுக்கு அதிலுள்ள ஈடுபாட்டினால் முன்பு செய்த சுட்டித்தனங்களை மெல்ல மெல்ல மறந்து விடுவான்; அவனுக்கு ஆர்வமுள்ள துறை எதுவெனக் கொண்டு அதிலே ஈடுபட வைத்து விட்டால் துறையையும் வளர்த்துத் தானும் வளர்வான். இதற்கே மடைமாற்றம் என்று பெயர். பெருகிவரும் வெள்ளத்தைத் தடுத்து, மடை மாற்றி, வளரும் பயிர்களுக்கு ஓடவிட்டுப் பயன் காண்பது போன்றது இது. மாணிக்கவாசகரின் திறமை யும் ஆற்றலும் சுறுசுறுப்பும் இங்ஙனம் உலகியல் நிருவாகச் சுவைஷய அகற்றி, மடைமாற்றம் செய்யப்பட்டுத் தன்னைத் தானே தூய்மைப்படுத்திக் கொள்ளும் ஆன்மநெறியில் ஈடு படுத்தப்படுகின்றன. இப்பெருந்துறைக் காட்சியே மாணிக்க வாசகரிடம் மடைமாற்றத்தை ஏற்படுத்தியது என்றும் இம்மடை மாற்றத்தைச் செய்தவன் இறைவனே என்றும் ''மாணிக்கவாசகரது வாழ்வின் திருப்பு மையமாக அமைந்த பெருந்துறைக் காட்சி அவர்க்கு வாய்த்த அருளியல் வாழ் வின் தொடக்கப் படியாக — இறைநெறிச் செலவின்

முதற்கட்டமாக இருந்தது'' என்றும் அறிஞர் திருமதி இராதா தியாகராசன் குறிப்பிடக் காண்கிறோம்.[1]

இம்மாற்றம் எவ்வளவு வலிமையானது, பெரியது என்பது பற்றி அவரே கூறக் கேட்போம்.

திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையும் கண்டதில்லை 11:2

ஒரே மூச்சில் கருவேர் அறுந்து பிறப்பு ஒழிந்ததாகவே கூறுகிறார். அதன் பிறகு வேறு எவரையும் ஒரு பொருளாக மதிக்கத் தோன்றவில்லை என்கின்றார். பாண்டிய மன்னனை யும் மறந்து விடுகின்றார்.

நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமானவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 11:4

புதிய செஞ்சுடர் அனையான் நல்லுணர்வு வழங்கிய வுடனே நாம்-தான் என்ற தற்போதம் ஒழிந்து, சிவமாம் தன்மை எய்தியமை பெறப்படுகிறது. கணப்பொழுதில் ஆன்மா சிவமாக மாறி அதனுள் ஒன்றுகிறது. அங்ஙனம் ஆளப்பட்ட போது, மணிவாசகருக்கு ஏற்பட்ட மெய்ப் பாட்டு மாற்றங்கள் பலவாகும். உரை தடுமாறியது; உள்ளம் நடுங்கியது. உள்ளொளி கிளர்ந்தது; ஒள்ளிய கண்மலர் களில் நீர் திரையிட்டு ஆடியது. மனத்தினுள் ஏற்பட்ட மாற்றத் தினுக்கேற்ற மெய்ப்பாட்டை முகம் புலப்படுத்தியது.

பூவார் அடிச்சுவடு என்தலைமேல் பொறித்தலுமே
தேவானவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 11:7

என்பதும் இத்தகைய மாற்றத்தைப் பாடியே தெள்ளேணம் கொட்டி மகிழ்கிறது. இப்பெருமாற்றத்தை இத்தெள்ளேணப்

---

1. டாக்டர் திருமதி இராதா தியாகராசன், திருவாசகத்தில் அருளியல், வானதி, சென்னை *1983*, பக்: *40,74*.

பதிகத்தில் பாடியிருப்பது, உயிர் இதைச் சொல்லிச் சொல்லி ஆரவாரித்து மகிழ்வது போல் உளது.

கயல் மாண்ட கண்ணிதன் பங்கன்
எனைக் கலந்து ஆண்டலுமே
அயல் மாண்டு, அருவினைச் சுற்றமும்
மாண்டு, அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம்
மாண்டு என்னுடைய
செயல் மாண்டவா பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ 11:11

வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டல் இன்றிச் சலிப்பறியாத தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்
உள்ளமும் போய்
நான் செட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ 11:18

மாண்டு, கெட்டு என்ற சொல்லாட்சிகள் மிக வலிமை யானவை. அரசுச் சுற்றம், உறவுச் சுற்றம், உலக மயக்கம் யாவும் மாண்டு—சொல்லும் செயலும் மாண்டு அறவே ஒழிந்தன என்றும், உணர்வும் உள்ளமும் போனதோடு நான் என்பதே போய் விட்டதெனல் கருதத்தக்கது. 'ஆர்பாடும் சாரா வகையருளி ஆண்டு கொண்டான்' *(11:13)* என்பதால், அரசனைச் சார்ந்து வாழ வேண்டும் என்ற அவசியமும் போய் விட்டமை அறியப்படும். இதனையே அவர் மிகத் தெளி வாகவும் விளக்கமாகவும் தெரிவிக்கும் இடங்கள் பல வாகும்.

இணையார் திருவடிஎன், தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
13:1

எந்தை எந்தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்து என்னை ஆண்டுகொண்ட பாண்டிப்
பிரான் 13:2

தந்தை தாய் முதல் சுற்றமனைத்தையும் துறந்ததையும் மற்றுமுள்ள பந்தம் அனைத்தையும் நீக்கியமையுடன் செல்வம், மனைவி, மக்களையும் குலம், கல்வி என்ற பேதம் மற்றும் சிறப்புக்களையும் கைவிட்டமையையும் அவர் உறுதி தொனிக்கப் பாடுகிறார்.

வைத்தநிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பி 10:6

மேலும் அவர் 'மானம் அழிந்தோம் மதிமறந்தோம்' *(15:8)* என்று மொழிவதும் 'ஆர் உறவு எனக்கு இங்கு? யார் அயல் உள்ளார்?' *(22:8)* என வினவுவதும் அவர்தம் பற்று, தன்மதிப்பு, அச்சம் அனைத்தையும் விட்ட நிலையைப் பறைசாற்றுகின்றன.

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ 33:7

என்று அவர் கேட்பது, முற்கூறியவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பது போல் இருக்கிறது. இம்மாற்றம் அன்றுடன் நில்லாது தொடர்கிறது. அவர்தம் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கிறார். முன்பு உலகியலில் அவருக்கு எத்துணைப் பிடிப்பும் உறுதியும் இருந்தனவோ, அத்துணைப் பிடிப்பும் உறுதியும் இன்று அவருக்கு இத்துறவற வாழ்விலும் அமைந்தன. அவர் ஆன்ம ஈடேற்றத்தில்

வெற்றி பெற்றதற்கு இவ்வுறுதியே காரணம். உலக உயிர்கள் உய்தியடையும் நெறிமுறைகளை அவர் வாழ்வில் காண்கிறோம் எனில் அதற்கு இவ்வுறுதியும் மனத்திண்மையுமே காரணங்களாகும்.

**கல்லைப் பிசைந்து கனியாக்கிய விச்சை**

'எம்பெருமான் நீ செய்த விச்சை' என இறைவன் செய்த சாமர்த்தியம் மிக்க வித்தையை, மாணிக்கவாசகர் புகழ்வதற்குக் காரணம் முற்காட்டிய பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதுதான். ஆனால் அதுமட்டுமன்று. அவர் முன்பு அமைச்சராக இருந்தவர். அதனால் உலகத்தில் அவர் மிக அழுத்தமான பற்றும், பதவி, செல்வம், வசதி, போகம் போன்றவற்றைத் துய்க்கும் வாய்ப்பும் உடையவராக இருந்தார். அவர் மனத்திண்மையும் உறுதியும் மிக்கவராகத் திகழ்ந்தார். அப்போது, இச்சிவகுரு நாதரின் காட்சிக்குப் பிறகு எல்லாம் மாறிவிட்டது. போக போக்கியங்களிலிருந்த பற்று போய்விட்டது. கல்மனம் மிகவும் இளகிவிட்டது. குருமணியின் கடைக்கண் நோக்கும், மணி வார்த்தையும், திருவடித் தீண்டுதலுமே அவரிடம் இம்மாற்றத்தையும் ஏற்படுத்தி விட்டன.

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்து அழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும்
முல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய் 8:5

மாணிக்கவாசகர் உயிர் உய்தற்கான இறைநெறிகளை இதுகாறும் கற்றவரல்லர். அவர் பிறிதொரு துறையைச் சேர்ந்தவர். இன்று அவர் அவ்வாழ்வை அறவே வெறுத்துப்

பேசினாலும், அவ்வாழ்வு ஆடம்பரமான—உலகை ஆளும் வாழ்வு. ஆனால் துறவு பூண்டு, உய்தி தேடும் மன மாக இப்போது மாறியது, அவருள்ளேயே ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்துகிறது. பிச்சேற்றுதல் என்பது ஒரு திருவாசகப் படிமம். அறிவிலோ உணர்விலோ மிக உயரிய நிலைக்குப் போய் விட்டவர்கள் பிச்சேறியவர் — பித்துப் பிடித்தவர்போல் ஆகிறார்கள். 'கல் நெஞ்சு உருக்கி' *(10:11)* என்றும் 'கல் போலும் நெஞ்சம் கசிந்துருக' *(15:4)* என்றும், 'இரும்பு தரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என் என்புருக்கி' *(18:1)* என்றும் இதுபோல வருமிடங்கள் பலவாகும். 'கல்லில் நார் உரிப் பது போல' என்பது உலகப் பழமொழி. திருவாசகத்தில் கல்நார் உரிப்பது என்பதும் ஒரு படிமமாகி, வறண்ட மனத் தில் பத்திச் சுவையைப் பெருக்கி உருக வைப்பது என்றாகி யது. 'கல்நார் உரித்து என்னையும் தன் பொன்னார் கழல் பணித்து ஆண்டபிரான்' *(11:9)*; 'கல்நார் உரித்து என்னை ஆண்டு கொண்டான் *(13:9)*; 'கல்நார் உரித்த கனியே' *(4:97)* என வருமிடங்கள் பல இதற்கு ஆதாரம் ஆகின்றன.

மாணிக்கவாசகரின் மாற்றத்தைப் பார்த்த உலகம் அவருக்குப் பித்துப் பிடித்து விட்டதோ என்று எண்ணியது. அவ்வாறு தூற்றவும் செய்தது. மாணிக்கவாசகர் அதை உணராமலில்லை. தம்மை ஏளனமாகப் பார்த்துச் சிரிக்கும் உலகை அவர் கண்டார்; உணர்ந்தார். அதற்காக அவர் கவலைப் படவில்லை. ஆயினும் அவருக்கே தம்முள் பெரும் மாற்றம் நிகழ்ந்து விட்டது தெரிகிறது. பெருந்துறைப் பிரானைப் பார்த்தது முதல் தமக்குப் பித்தேறியது போன்ற ஒருநிலை ஏற்பட்டு விட்டதை அவர் தாமாகவே உணர் கிறார். அதுவும் அவருக்கு மகிழ்ச்சியே தருகிறது. பிறரறி யாமல் காதல் வயப்பட்டுவிட்ட ஒருத்தி, உலகோரால் அஃது அறியப்பட்டுத் தூற்றப்படும் பொழுது வருந்துவாள்.

ஆயினும் இன்னானை இவள் விரும்புகிறாள் என்று சொல்வதை—தன் உயிருக்குயிரான காதலனோடு தன்னைச் சார்த்திப் பேசுவதைக் கேட்குந்தொறும் அவள் உள்ளம் மகிழவும் செய்யும். அதுபோன்ற மனநிலையையே நாம் மாணிக்கவாசகரிடம் காண்கிறோம்.

பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சு ஏற்றி
வாராவழி அருளி 8:2

வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சு ஏற்றி 8:5

பேராளன், வல்லாளன் என்ற சொற்களைக் கவனியுங் கள். 'அவன் பெரிய ஆள்' என்பது போன்ற உலக நடையில் வந்தது இது. எவ்வாறோ தம் மனத்தில் பித்தேற்றி விட்ட வனின் வன்மையை வியக்கின்றார்.

பெரும்பெருமான் என்பிறவியை வேர் அறுத்துப்
பெரும்பிச்சுத் தரும்பெருமான் சதுரப் பெருமான் 24:3

பெரும்பித்தனாக்கிய இறைவனைச் சதுர—சாமர்த் தியமான பெருமான் என்றது, முற்கூறியவாறு 'சதுராலே சார்ந்து', அவன் செய்த அருட்செயல் காரணமாகவேயாம். இதனை இன்னும் விளக்கமாகவும் மாணிக்கவாசகர் பேசு கிறார்.

பித்தன் என்றுஎனை உலகவர் பகர்வதுஓர்
காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருள் கூடிடும்
உபாயமது அறியாமே
செத்துப்போய் அருநரகிடை வீழ்வதற்கு
ஒருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே 26:4

தம்மை அத்தன் ஆட்கொண்டதை அறியாமல்தான் இந்த உலகம் பித்தன் எனப் பேசுகிறதெனத் தெளிவுபடுத்து கிறார்.

இந்த அருட்செயலை இறைவன் நாடறிய, உலகறிய நடத்திக் காட்டியதால், இதனை வரவேற்றவர்களும் பலர் என்றும், கேலி பேசித் தூற்றி ஆரவாரித்தவர்களும் பலர் என்றும் அறிகிறோம்.

நற்பாற்படுத்து என்னை நாடுஅறியத் தான்இங்ஙன்
சொற்பாலதானவா 15:4

நாடு முழுதும் அறியும்படி செய்து, எல்லோரும் பேசு மாறு நடந்தது என்பதால் அன்று எவ்வாறு இச்செய்தி நாடு முழுவதும் பரவிப் பேசப்பட்டது என்பதை உய்த்துணர லாம்.

தேன்நாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊன்நாடி நாடிவந்து உள்புகுந்தான் உலகர் முன்னே 13:5

வண்டுகள் தேடும் கொன்றை மலர்மாலையை அணிந்த பெருமான், மனித உடம்பெடுத்து, என்னைத் தேடி வந்து உலகத்தவர் முன்னே என்னுள் புகுந்தான் என்னும் போதும், உலகம் காண—கண்ணெதிரே வந்த செய்திதான் வற்புறுத்தப்படுகிறது.

அருமந்த தேவர் அயன்திருமாற்கு அரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளி 11:5

பிரமன், திருமால், தேவர்கட்கெல்லாம் அரிய பெரு மான், மனித உருவில் ஞானாசிரியனாக வந்து, உலகோர் மகிழ்வடைய ஏற்றுக் கொண்டான் என்பதால் கண்ணாற் கண்டவரெல்லாம் மகிழ்ந்தனர் என்றும் நல்லுணர்வுடை யோர் பலரும் மகிழ்நதனர். என்றும் அறிய முடிகிறது.

அதே சமயம் பொது மக்கள், விவரம் தெரியாத மக்கள் பலர் இதைக் கேட்டு நகையாடியுள்ளனர். பைத்தியம் என்று பல வாறு பேசியுள்ளனர். மாணிக்கவாசகரைக் காணும் பொழுது கூட, சுற்றி நின்று, ஓர் உண்மையான பித்துப் பிடித்தவனை நடத்துவது போல ஆரவாரித்துச் சிரித்து ஏதேதோ பேசி யுள்ளனர்.

நாட்டார் நகைசெய்ய நாம் மேலை வீடு எய்த 8:6

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட்டு உலகமெல்லாம்
சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 11:3

''தேவர்கள் திருமால் பிரமன் போன்றவர்களாலேயே காணமாட்டாத சிவம் இவரை வந்து உருக்கிற்றாம்; இவரை ஏவல் கொண்டதாம்; நன்றாயிருக்கிறது. காதிலே பூ வைக்கிறீர்களே?'' என்று உலகம் சிரித்ததாம். ஆமாம், கடவுள் நேரே வந்தார் என்றால் யார் நம்புவார்கள்? அதோடு, அரசனுடைய பொன்னையுமல்லவா செலவிட்டு விட்டார். தாம் செய்த பிழைக்குச் சாக்குச் சொல்லவே வாத ஊரர் பொய் கூறுகிறார் என்றுதானே உலகம் பேசும்.

நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப 9:7

என்னும் போது உலகம் அவரைச் சுற்றி நின்று ஏளனமாக ஆரவாரித்ததையும் அவர் அந்த உலகோரைப் பார்த்து ஆரவாரித்ததையும் பார்க்கிறோம். இங்ஙனம் வருமிடங்கள் பலவற்றை உற்று நோக்கும் போது, வாதவூரர் எத்தகைய சூழலில் உலவினார் என்பது நன்கு விளங்குகிறது. உலகம் அவர்பால் நிகழ்ந்த அற்புதத்தை அறிய மாட்டாமல் அவரை அவமானப்படுத்திச் சிரித்திருக்கிறது. அவரும் மன உறுதியோடு அதை எதிர் கொண்டிருக்கிறார்.

சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுதல் இன்றி 4:68-70

என அதனையே அணிகலனாக, மனங்கோணாமல் ஏற்றிருக்கிறார். தம் செயல் முழுவதும் 'மாண்டதாகக்' கூறும் அவர், தம் செயலாக அன்றியே, அரசன் தந்த பொன்னைச் செலவிட்டிருக்கிறார். அவ்வாறு செலவு செய்தது குற்றம் எனின், மாணிக்கவாசகரை விட அவரை அக்குற்றத்திற்கு ஆளாக்கிய சிவபெருமானே குற்றவாளி ஆவார். 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்று அவர் துணிச்சலாகக் கேட்பது, இதனாலேதான். 'பூதலரால் உன் அடியான் என்று ஏசப்பட்டேன்' (5:82) என்று, இவ்வடிமைத்திறமே அவரை இவ்வாறாக்கி விட்டதென உலகமும் அதனை எண்ணியமை காண்கின்றோம்.

## தன் வரலாற்றுத் துளிகள்

### பிரிவுநிலை
### தனிவாழ்வு

**சோதனைகள் பந்தம் பரியப் பரியின்மேல் வந்தது**

மாணிக்கவாசகருடைய வாழ்வு, உலகோர் வாழ்வினின்றும் சற்றே வித்தியாசமானது. திருப்பெருந்துறை நிகழ்ச்சி மிக மிக அரிய ஒன்று. அதன்பின் உலகம் பழித்தது என்பது மட்டுமன்றி, பாண்டியனுக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. சொன்னபடி குதிரைகள் வாங்கி வரவில்லை. அவர் குறித்த நாளும் போய்விட்டது. பாண்டியன் சீற்றங் கொள்கிறான்.

இச்சூழலில், நரிகளையே நல்ல பரிகளைப் போல் ஆக்கிக் கொண்டு, பரிமா விற்கும் வணிகனைப் போல்

வந்து, பாண்டியனிடம் அவற்றை ஒப்படைத்து, மாணிக்க வாசகர் செய்ய வேண்டிய கடமையை இறைவன் நிறை வேற்றுகிறான். இறைவன் பிச்சது ஏற்றிப் பெரும் பித்த னாக்கித் தம்மையே மறக்கச் செய்ததாலன்றா இத்தீங்கு விளைந்தது. இச்சூழலில் அவ்விறைவனே அக்கேட்டை நீக்க வந்தது பொருத்தமே. அக்குதிரைகட்கான பொன்னைக் கொடுக்கப் பாண்டியன் முன்வந்த போது, குதிரைச் சேவக னாக வந்த இறைவன் அதை மறுத்து விட்டதாகவும், இறை வனின் அழகிய ஒளி பொருந்திய தோற்றத்திலும் செயலி லும் பாண்டியன் கட்டுண்டு, பேச்சிறந்து, தன்னை மறக்க நேரிட்டது என்றும் வரும் திருவாசகக் குறிப்புக்கள் கருதத் தக்கன. இவற்றையே பின்வந்த புராணங்கள் கை கால் வைத்துப் பெரிய கதையாக்கியுள்ளன.

'நரியைப் பரியாக்குதல்' என்பது ஒரு பழமொழி என்பர். மட்டமான ஒன்றை நல்லதென்று கூறி விற்று விடு வதையும் இது சுட்டுமாம். பாண்டியனிடம் மட்டமான குதிரைகளை நல்லன என்று அலங்கரித்து விற்று விட்டுப் போய் விட்டதாகவும், பின்பு சேவகர்கள் பார்த்து வந்து 'இவை நரியிலும் கேடானவை' என்று கூறிய போது, பாண்டியன் ஏமாற்றத்தால் சினமுற்றதாகவும் கூறுவர். இதுவே புராண மாகக் கற்பனைப்படுத்தப்பட்டது என்பது ஆய்வாளர் கருத் தாகும்.[1] திருவாசகத்தில் வரும் இதுபோன்ற தனிவாழ்க்கை பற்றிய வரலாற்றுக் குறிப்புகட்கும் இன்று வழங்கும் புராணக் கதைகட்கும் உள்ள பொருத்தம், அதில் ஆர்வமுடையாரால் ஆராயத்தக்கதாகும்.

மொக்கணி அருளிய முழுத்தழல் மேனி
சொக்கதாகக் காட்டிய தொன்மையும் 2:33-34

---

1. *நீ. கந்தசாமிப் பிள்ளை, திருவாசகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1964. ப. 57.*

குதிரையைக் கொண்டு குடநாடதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தான்எழுந்தருளியும் 2:26,27

அரியொடு பிரமற்கு அளவறி ஒண்ணான்
நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்
ஆண்டுகொண்டு அருள அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனகம் இசையப் பெறாஅது
ஆண்டான் அங்குஓர் அருள்வழி இருப்ப
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும் 2:35-41

அந்தண னாகி ஆண்டுகொண்டருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும் 2:42,43

மதுரைப் பெருநன் மாநகர் இருந்து
குதிரைச் சேவகனாகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட்காகப்
பாங்காய் மண்சுமந்து அருளிய பரிசும் 2:44-47

இறைவன் இயற்றிய பல்வேறு அற்புதச் செயல்கள் இக்கீர்த்தித் திரு அகவலில் கூறப்படுகின்றன. இப்புராணச் செய்திகள் பல முதன் முதலாகத் திருவாசகத்தில்தான் இடம் பெறுகின்றன. பின்னர் இவை திருவிளையாடல்களிலும் தலபுராணங்களிலும் விரித்துரைக்கப்படுகின்றன. இவை கல்லாடம், திருவிளையாடல் புராணங்களில் எவ்வெவ்வாறு கூறப்பட்டுள்ளன என்று ஒப்பிடப்பட வேண்டியவையாகும். மாணிக்கவாசகர் இப்புராண வரலாறுகளோடு, தம் வாழ்வில் நடந்தனவற்றையும் ஒருசேர வைத்துக் கூறுகிறார். அங்ஙனம் கூறுங்கால், இவ் அகவல் போன்ற நெடும் பாடலில் அக்கதைகளைக் கால வரிசைப்படி கூறுவார் என்றே பலரும் எண்ணுவர். ஆனால் அவ்வாறு தோன்றவில்லை. காலவரிசை தோற்றவில்லை.

தன் வரலாறு, பிறர் வரலாறு என்ற வேறுபாடு தெரிய வில்லை; ஒரு வரலாற்றின் ஏதோ ஒரு பகுதியே அழுத்தம் பெறக் கூறப்படலால், முழு வரலாறு எது என்பதோ, எத னுடன் எது இயைபுடையதென்பதோ புலனாகவில்லை.

குதிரையுடன் குடநாட்டிற்கு வாணிகச் சாத்துடன் சென்றது, குதிரை வாயிலே கொள்ளுப்பையைக் (மொக் கணி) கட்டியருளுதற்பொருட்டு சொக்கப் பொன் போன்ற ஒளியுடைய திருமேனியைக் காட்டியது என்பன முறையே கூறப்படுகின்றன. அதன் பிறகு நரியைக் குதிரையாக்கிய நற்செய்தி இடம் பெறுகிறது. அதன் பிறகு பாண்டிய னுக்குப் பரிமா விற்றதும் அதற்கீடான மிகுந்த பொன் கைவரப் பெறாததும் பாண்டியன் மனமும் அருள்வழிப் படுமாறு சுடர்ப்பெரும் சோதியாகத் தோன்றிய தொன்மையும் (பழைய செய்தியும்) கூறப்படுகின்றன. அதன் பின்னர் மதுரை மாநக ரில் 'குதிரைச்' சேவகனாக வந்த செய்தி கூறப்படுவதைச் சுந்தர சாமந்தன் வரலாறாக மெய்க்காட்டிட்ட படலத்துள் கூறப்படுகிறது என்பர். அதனைத் தொடர்ந்து பிட்டுக்கு மண் சுமந்த கதை இடம் பெறுகிறது. ஒன்றை நன்றாக நினை வில் வைத்துக் கொள்ள வேண்டும். பிற்பட்ட காலத்தில் எழுந்த புராணங்களை வைத்து, முற்பட்ட நூலில் வரும் செய்திகட்கு விளக்கம் கூறக்கூடாது. ஏனெனில் நான் கைந்து மேலுமான நூற்றாண்டுகள் பிற்பட்டு எழுந்த புராணங் கள் தம் காலச் செவிவழிச் செய்திகளைக் கொண்டே இவற்றை விளக்கியிருத்தல் கூடும். இனி மாணிக்கவாசகர் தம் வாழ்வில் நடந்த நரி பரி ஆக்கிய வரலாற்றை அடிக்கடி கூறுகிறார். அவற்றைக் காண்போம்.

பந்தம் பரியப் பரிமேல் கொண்டான் தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய் 8:3

கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டி 8:20

குதிரை மேல் வந்து குற்றம் நீக்கியது எனல், பாண்டியனது பொன்னுக்குரிய குதிரைகளைச் சேர்ப்பித்து, வாதவூரரைக் காப்பாற்றியதைக் குறித்தது எனலாம். இதுவே மேலும் பல இடங்களில் கூறப்படுகிறது.

மாஆர ஏறி மதுரைநகர் புகுந்தருளி
தேவார்ந்த கோலம் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல் பரவிப் பூவல்லி கொய்யாமோ 13:20

கோல வரைக்குடுமி வந்து, குவலயத்துச்
சால அமுதுண்டு, தாழ்கடலின் மீதெழுந்து
பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரி மேற்கொண்டு என்
உள்ளம் கவர்வரால் அன்னே என்னும் 17:7

அந்தணனாக வந்த போது வெள்ளைக் கலிங்கமும் பாய் பரிமேல் வந்தபொழுது பள்ளிக் குப்பாயமும் அணிந்திருந்தனர் எனக் கருத இடமுண்டு. பரிமேல் வருதலால், சேவகனுக்குரிய சட்டை அணிந்திருந்தனர் போலும்.

நன்பொன் மணிச்சுவடு ஒத்த நற்பரிமேல் வருவானை 18:6

பொன்னை அழித்தநன் மேனிப் புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் 18:7

தாவி வரும் பரிப்பாகன் 18:8

பரிமேற் கொண்ட சேவகனார் 36:1

குதிரையின்மேல் வந்து கூடிடுமேல் 36:2

மாணிக்கவாசகர் உண்மையானவர். தம் உள்ளத்தில் பட்டதை அவ்வாறே சொல்பவர்; அவர் தம் அனுபவத்தை உலகோரும் அடையுமாறு அடையுமளவே சொல்பவர். குதிரை மேல் அமர்ந்து வருங்காட்சியேஅவர்கள் முன்

நிற்கிறது. மேலும் காட்டியனவும் மேலும் பலவுமான அனைத்து இடங்களிலும் குதிரையின் மேல் ஏறிவரும் திருக் காட்சியே திரும்பத் திரும்பக் காட்டப்படுகிறது. இதன் மூலம் ஒரு காட்சியுரு (Visual image) எழுதலை நாம் நன்கு உணரலாம். சிறந்த ஆங்கிலப் பேராசிரியர்கள் பலர் தமிழை நன்கு கற்றால், தாம் கற்ற இலக்கியக் கோட்பாடுகளைக் கண்டு தெளிந்து உணரவல்ல களங்கள் பல தமிழில் இருப்பதைக் கண்டு வியப்பர்.

மாணிக்கவாசகர் தம் கண்ணுள் நிற்கும் காட்சியையே திரும்பத் திரும்பப் பாடுகிறார். அவர் புனைந்து பாடுபவராக இருந்தால் வெவ்வேறு விதமாகப் பாடி இருக்கலாம். ஒரு வண்ண ஒளிப்படம் போல், ஒரு காட்சி ஒரு கோணத்தில் — மனமாகிய தாளில் பதிவாகி விட்டது என்பது நன்கு புலனாகிறது. இது தொடர்பாக, மெய்யியல் உருவகமாக ஒரு பாடல் திருப்பாண்டிப் பதிகத்தில் காணப்படுகிறது.

செறியும் பிறவிக்கு நல்லவர்
 செல்லன்மின்; தென்னன் நன்னாட்டு
இறைவன் கிளர்கின்ற காலம் இக்
 காலம் எக்காலத்துள்ளும்;
அறிவுஒண் கதிர்வாள் உறைகழித்து
 ஆனந்த மாக் கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார்
 புரள இருநிலத்தே 36:4

பாண்டிய நாட்டில் எக்காலத்தையும் விட இப்போது இறைவன் கிளர்ந்து வெளிப்பட்டுத் திகழ்கின்றனன். இது மிகச் சிறந்த காலம். அவன் ஆனந்தமாகிய குதிரையைச் செலுத்திக் கொண்டு, அறிவு வாளை உறை கழித்துச் சுழற்றிக் கொண்டு, எதிர்த்து வருபவர்களது பிறப்பை இருநிலத்தே வெட்டி வீழ்த்துகிறான். ஆகவே பிறவியை விரும்புபவர்

4.6.

கள் — பிறவிக்கு நல்லவர்கள் அவன் முன்னே செல்லா தீர்கள்! குதிரை மேல் வந்து, குற்றங்களைந்து குணம் போற் றும் இறையருளை, ஒரு பொது அனுபவமாக உலக மக் கட்கு முன்வைத்தது மட்டுமன்றி, அதனையே மெய்ப் பொருட் தத்துவ உருவகமாக்கிக் காட்டும் திறம் அறியற் பாலது. இலக்கிய உத்தி, மெய்ப்பொருள் பகரும் உண்மைக் கிடனாய் நிற்பதைத் திருவாசகம் முழுவதும் இங்ஙனம் பல இடத்தும் காணலாம். உள்ளத்துக் கிளர்ந்தெழும் மகிழ்ச்சிக் குதிரையிலே இறைவன் தாவி வரும் பரிப்பாகனாக ஏறி வருவது, உளவியல் உண்மையாம். மகிழ்ச்சியில் ஏறிவரு தல் என்பது, ஆனந்தக் கூத்தாடுமுள்ளத்திற்கு அவன் வெளிப் படல், கட்புலனாக்கும் பாங்கு உணர்வுடன் ஒட்டியது. அடுத்து, அது பழச்சுவை என தேன் என அமுது எனக் கூறும் எத்தனையோ இடங்கள் வாசகத்தில் உள்ளன. அத்தனை யும் நாவென்னும் புலனோடும் மன உணர்வோடும் இணைத்து, அதனால் உள்ளத்தே தோற்றும் இறைவனை உள்மனத்திற்கு உணர்த்துவன. இறை அனுபவம் என்பது மகிழ்ச்சி, ஆனந்தம், இனிப்பு, உவகை. பலர் அதைத் துக்கம், அவலம் என்று எண்ணுகிறார்கள். அதில் ஏற்படும் உருக்கம் மகிழ்ச்சி உருக்கம், அதில் வரும் கண்ணீர் ஆனந்தக் கண்ணீர்!

இனி, பாண்டி நாட்டிலே அடிக்கடி இறைவன் தோன்றி அருள் செய்தலையும், மதுரை சார்ந்த திருவிளையாடல் களையும் நினைந்து போலும், பாண்டி நாட்டில் இறைவன் என்றுமில்லாமல் கிளர்ந்தெழுங்காலம்' என்று தம் காலத்தை வியந்து பாடுகிறார்.

அங்ஙனம் பரிமேல் வந்தபொழுது, இறைவன் பேரழ குடையவனாகக் காட்சி தந்ததால், அவனை யாரென்று, 'தூண்டிய சோதியை மீனவனும் சொலவல்லன் அல்லன்'

(36:6) என்கிறார். பாண்டியனையே திகைக்க வைத்தது அக்காட்சி என்று தெரிகிறது.

### நரி பரி ஆக்கியது

'நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்' (36) என்பது கீர்த்தித் திரு அகவல், 'நரிகள் எல்லாம் பெருங்குதிரை' ஆக்கிய வாறன்றே உன் பேரருளே' (1) என்பது திருவேசறவு, நரிகள் எல்லாம் குதிரையாக்கி, மீண்டும் அவைகள் நரிகளே என அறிய வைத்ததால் மதுரை நகரமே சிரிக்கும் படியாயிற்று. இஃது உண்மையோ, பொய்யோ என மயங்கும்படி ஆயிற்று. மதுரையையே பித்துப் பிடிக்கும்படி செய்து விட்டதாக மாணிக்கவாசகர் கூறுகிறார்.

நரியைக் குதிரைப் பரியாக்கி
　　ஞாலம் எல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரை எல்லாம்
　　பிச்ச தேற்றும் பெருந்துறையாய் 50:7

### பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்

இதற்குப்பின், வையையாற்றுச் சுடுமணலில் நிறுத்தி வைத்தது போன்றவை எதுவும் வாசகத்துட் கூறப்பட வில்லை. அடியவளுக்காக மண் சுமந்தது, பாண்டியனால் மொத்துண்டது (அடிபட்டது), பிட்டுக்குக் கூலியாளாய் மண் சுமந்தது என இக்குறிப்புக்களே பாடல்களில் காணப் படுகின்றன.

அடியவட்காகப் பாங்காய் மண்சுமந்தருளிய பரிசும் 2:47

கடவுள் கலி மதுரை மண் சுமந்து கூலி கொண்டு
அக் கோவால் மொத்துண்டு, புண் சுமந்த பொன்மேனி
8:8

பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பித்தனே 30:2

மண்பால் மதுரையில் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 13:16

இறைவன் முதுகைப் புண்படுத்தியதைக் கூறும் பாடலும் 'புண்பாடல்' என்றே கூறப்படுவது, மாணிக்கவாசகரின் மென்மைமிக்க உள்ளத்தைக் காட்டுகிறது.

**பாண்டிய மன்னனும் மாணிக்கவாசகரும்**

தம்மை அமைச்சராகக் கொண்டு விளங்கிய பாண்டிய மன்னன் யார் என உணருமாறு, குறிப்பாகவேனும் மாணிக்கவாசகர் சுட்டிச் சென்றார் அல்லர். அதனைத் தேவையற்றதென அவர் மனம் எண்ணியிருக்க வேண்டும். தம் பெயரையே சுட்டாதவர்; தம்மொடு தொடர்புடைய யாரையும் முரண்பட்டாரையும் செப்பாததில் வியப்பில்லை. மேலும் அவர் உணர்வுகளை, மிக மென்மையாக நாகரிகமாகக் கையாள்கிறார்.

இறைவன் ஒருவனுக்கே தாம் அடிமை என்றும் மன்னர்களுக்கோ மற்றவர்களுக்கோ தாம் அடிமையில்லை என்றும் அவர் அடித்தும் பேசுகிறார்.

அவர் மன்னனாக ஏற்றுக் கொள்வது இறைவனையே யாம். அதனால்தான் இறைவனைச் சுட்டுமிடத்தெல்லாம் — பெரிதும் தென்னன் என்றும் தென்னாடுடையான் என்றும் பாண்டிப்பிரான் என்றும் மேலும் தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கள் எல்லாம் அவனே என்றும் அவர் சிறப்பித்துப் பேசுகிறார். பாண்டியனைத் தென்னன் என்றும் தென்னவன் மதுரையார் கோ என்றும் அவர் குறிக்குமிடங்களை எளிதில் வேறுபிரித்தறிய முடிகிறது.

அடுத்து, அம்மன்னனுக்கும் அவ்விறைவனே தலைவன் என்றும் அப்பாண்டியனது பிறவியைத் தீர்ப்பதற்கும் அவனே உதவினன் என்றும் புகழ்ந்துரைக்கின்றார்.

குதிரையின்மேல்வந்து கூடிடுமேல் குடிகேடு கண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப்போட மறித்திடுமே 36:2

குடிகேடு என்பது பிறவிப் பயனை ஒழிப்பார் என்ப தாம். அதுமட்டுமன்றி, மதுரையர் மன்னனின் மறு பிறப்பையும் தடுத்து ஒழித்திடுவாராம். எனவே இவை தமக்கு மட்டுமன்றிப் பாண்டிய மன்னனுக்கும் நலம் விளை விப்பனவே என அவர் நம்பியமை பெறப்படும்.

தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான் 8:1

பேராளன் தென்னன் பெருந்துறையான் 8:2

வல்லாளன் தென்னன் பெருந்துறையான் 8:5

என்று கூறுமிடங்களைத் தொடர்ந்து,

மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானை 8:10

என்று, மன்னரிலும் சிறந்தவன் என வேறுபடுத்தியும் கூறக் காண்கிறோம். 'தென்னா தென்னா' என்று தெள்ளேணம் கொட்டப்படுகிறது. தென்னன் பெருந்துறை அத்தர், பாண்டி நன்னாடர் *(17:3,5)* என இதுபோல் வருமிடங்கள் மிகப் பலவாகும்.

மன்னன் பரிமிசை வந்தவள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கன் வரக்கூவாய்
18:7

என்று மும்மூர்த்திகட்கும் தலைவனை மூவேந்தர்கட்கும் தலைவன் என்று கூறுமிடம் கருதத்தக்கது. திருத்தசாங்கத்

தில் பாண்டி நாடே அவன் நாடு என்றும் உத்தரகோச மங்கையே அவன் ஊர் என்றும் கூறப்படுகின்றன. திருப் பாண்டிப் பதிகத்தில் 'பாண்டியற்கு ஆர்அமுதாம் ஒருவர்' என்றும் 'பாண்டிப் பிரான்' என்றும் 'சேய நெடுங்கொடைத் தென்னவன்' என்றும் மிகவும் சிறப்பித்துப் பேசுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக முத்தியைப் 'பாண்டிப் பெரும் பதம்' என்றே குறிப்பிடக் காண்கிறோம் *(36:8)*. இப் 'பாண்டி நன்னாடுடையான் படையாட்சிகள்' பாடுவதில் *(1)* அவர் விருப்பம் தெரிவிக்கிறார்.

யாவருக்கும் தலைவனாகிய அவனுக்கு அடிமையான தால், இனி யாம் யார்க்கும் குடி அல்லோம் எனப் பேசுதல் கவனிக்கத்தக்கது.

> யாவர்கோன் என்னையும்வந்து ஆண்டு கொண்டான்
> யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம் 5:34

அப்பரடிகள் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்' எனப் பாடுவது இதன் விளக்கம் போல அமைந்து, இதே பெருமித உணர்வை வெளிப்படுத்துகிறது. ''மன்னரோடு உறவும் அஞ்சேன்' *(35:9)* என அவர் பிறிதோரிடத்திலும் கூறியுள்ளார். 'வானேயும் பெறில்வேண்டேன், மண்ணாள் வான் மதித்துமிரேன்' *(5:12)* என்று மனத்திண்மையை வெளிப்படுத்துகிறார். இத்தகைய பாடல்களால் அடியார் களுடைய மனநிலையை நன்கு அறிய முடிகிறது. அவர்கள் கவலைப்படுவதற்கு என்று எதுவுமில்லை. வைத்தநிதி, பெண்டிர், சுற்றம் என்ற அனைத்தையும் துறந்து விட்டத னால், அவர்கள் மனம் இயல்பாகவே பெருமிதம் உடைய தாகிறது.

## பிரிவு நிலை
## ஆன்ம வாழ்வு

### பிரிவும் பரிவும்

உலகியலைவிட்டு ஒதுங்கி விட்டதால் இப்போது அவ்வுலகியல் அவரை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் தம்பால் அருள் கொண்டு வந்து, ஆட்கொண்ட இறைவன் தம்முடன் வந்த அடியவர் கூட்டத்தோடு மறைந்ததும், தம்மை இவ்வுலகில் இருக்கப் பணித்ததும் தில்லை மூதூர் வருகெனக் கூறிப் போனதும் நெடுநாளாகியும் திரும்ப அக்காட்சி கிட்டாமையும், இவ்வுலகியலிலேயே உழல விட்டதும் ஆகியனவே அவர் நெஞ்சை அவலமாகிய கடல் வெள்ளத்திலே அழுந்த வைக்கின்றன.

பரிமேல் வந்தது, பிட்டுக்கு மண்சுமந்தது போல்வன தனிவாழ்வு பற்றியனவாதலின் அவை பற்றிய குறிப்புக்கள் மிகக் குறைவாக உள.

அவர் அருட் காட்சிக்குப் பிறகு ஏற்பட்ட பரிவும் பிரிவும் பற்றியே நிறையப் பாடியுள்ளார். அக்காட்சியால், இன்புற்று அமுதம் உண்டு களித்தவர் போல் ஆடிப்பாடுகிற உள்ளம் ஒருபுறம்; காலம் செல்லவும், மன்னனாலும் உலகோராலும் சோதனை பெருகவும் நேரிட்ட போது, அக்காட்சியாலும் புணர்ப்பாலும் விளைந்த இன்பமே துன்பமாவது பிறிதொரு புறம். இந்த இரண்டிற்குமிடையே அவர் உள்ளம் படுகிற பாடு பெரும்பாடு எனலாம்.

### பழ அடியாருடன் மறைந்தமை

இறைவன் அடியவர்கள் சூழ வந்துதான் மணிவாசகரை ஆட்கொண்டிருக்கிறான். பின்பு அவ்வடியவர்களுடன் சேர்ந்து மறைந்து, இவரைச் சோதனைக்கு ஆளாக்கி விட்

டான் இறைவன். அதனோடு மண்ணுலகில் இருக்குமாறு பணித்துப் போனதாகவும், தில்லையம்பலத்திற்கு வரு மாறு கூறிப் போனதாகவும் குறிப்பிடுமிடங்கள் பலவுள. முதலில் 'வருக' எனக் கூவிப்பணிகொண்டவர், மீண்டும் வருக எனக் கூவி மறைந்தவர், இப்போது 'வருக' எனக் கூவிக் காப்பாற்ற வரவில்லையே என அவர் ஏங்குமிடங்கள் சில காணப்படுகின்றன.

ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய் நீ மாளா வாழ்கின்றாயே 5:19

எல்லையில் கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வகை மனத்தேன் பட்ட கட்டமே 5:48

திருவார் பெருந்துறைச் செல்வனாகிக்
கருவார் சோதியில் கரந்த கள்ளமும் 2:54,55

இங்ஙனம் தம்மை இறைவன் விட்டுச் சென்றதற்காக வாதவூரர் வருந்துமிடங்கள் மிகப் பலவாகும். பல அடியார் களுடன் மறைந்ததால் அவர்கள் எல்லாம் நல்லவர்கள் என்று தானே இறைவன் தன்னுடன் அழைத்துக் கொண் டான். நாம் பொய்யன், கீழ்ப்பட்டவன் என்றுதானே இவ் வுலகில் உழல நம்மை விட்டுவிட்டான் என இவ்வாறு அவர் உள்ளம் நோகிறது.

பேரா உலகம் புக்கார் அடியார்
புறமே போந்தேன் யான் 5:87

சிறிதே கொடுமை பறைந்தேன்
சிவமே நகர் குறுகப்
போனார் அடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே 5:85

அருள்செய் அன்பரும் நீயும் அங்கெழுந்தருளி
இங்கெனை இருத்தினாய் முறையோ 5:93

அடியாரானார் எல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார்
செடிசேர் உடலமிது நீக்கமாட்டேன் எங்கள் சிவலோகா 5:83

இதுவே தாளாத பிரிவாயிற்று. திருவாசகம் முழுவதும் இப்பிரிவினாலாகிய சோகக் கண்ணீரே வழிந்தோடுகிறது, அருள்பெற்ற அடியவர்கள் மகிழ்கிறார்கள், ஆடுகிறார்கள். பாடுகிறார்கள், அகம் நெக்கு உருகுகிறார்கள். பொய்யும் தாமுமாகப் புறம்போந்த மணிவாசகரோ புலம்பி நைந்து உருகுகிறார்.

கூடிக்கூடி உன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்;
வாடி வாடி வழியற்றே
வற்றல் மரம்போல் நிற்பேனோ 32:11

இஞ்ஞான நாடகத்தில் பிற அடியார்க்கும தமக்கும் ஒரு வேற்றுமை கண்டு மணிவாசகர் கூறுவன, ஒரு முரண் சுவையைத் தோற்றுவித்து மனத்தை நெகிழ்விக்கின்றன. 'அடியார் சிலர்உன் அருள்பெற்றார் ஆர்வம் கூர யான் அவமே, முடைஆர் பிணத்தின் முடிவின்றி முனிவால் அடி யேன் மூக்கின்றேன்' *(32:2)* என்று தாம் மட்டும் உலகில் உழல்வதை எண்ணி நைகின்றார். இதுபோல் அவர் நினைந்து நினைந்து வருந்துமிடங்கள் பலவாகும். அதில்தொனிக்கும் ஏக்கம் நம் உள்ளத்தையும் நெகிழ்விக்கிறது.

கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி ஏசற்றுஇங்கு
இருத்தல் அழகோ அடிநாயேன் 32:7

அடியேன் அல்லேன் கொல்லோ
தான் எனை ஆட்கொண்டிலைகொலோ

அடியாரானார் எல்லாரும் வந்துன்
தாள் சேர்ந்தார்
செடி சேர் உடலமிது நீக்கமாட்டேன்
எங்கள்சிவலோகா 5:83

திருச்சதகம், பிரார்த்தனைப் பத்துப் போல்வனவும் பிற சிலவும் பெரிதும் இப்பிரிவின் கொடுமை பற்றியே கூறுகின்றன. உலகில் மெய்ம்மையுடையாரும் பொய்ம்மை உடையாரும் கலந்தே காணப்படுகின்றனர். பொய்ம்மை யுடையார் மெய்யர் போல் புறவேடம் காட்டுவர். மெய்ம்மை யாரோ தம்மிடமுள்ள சிறு பொய்ம்மைக்காகவும் மீண்டும் மீண்டும் வருந்தி, மேன்மேல் மெய்ம்மை மேவ ஆசைப் படுவர். இவ்வுலகப் பொதுவுண்மையே இவற்றால் மேற் போக்காகத் தோற்றினும், இவை அனைத்தின் அடியில், மணிவாசகர் வாழ்வில் ஏற்பட்ட தனிச்சிறப்பு நிகழ்ச்சியே அடங்கிக் கிடக்கிறது. தன்னனுபவத்தை உலக அனுபவ மாக்கிக் கூறல் (Making the Self-experience as Univarsal experience) என்பது, இந்நிகழ்வு பற்றிய பாடல்களில் நன்கு பொருந்தியுளது. இறைவனைப் பார்த்து 'மெய்ம்மை அன்பர் உன் அருளை மேவினார், பொய்ம்மை உடையேன் புழுக்கூடு காத்துக் கிடந்தேன்' என்று பாடும் போது, அங் ஙனம் பாடும் ஒவ்வொருவரும் தத்தமது சிறிதளவு பொய்ம் மையையும் அவ்வாறு வெறுத்துப் பாடுவதாகக் கொள்ள லாம். அன்றி மாணிக்கவாசகர் வரலாறு தெரிந்தவர்கள், இஃது அவரது 'தன்னுணர்ச்சிப் பாடல்' என்றும் கருதி, உண்மையை ஓர்ந்து மகிழலாம்.

மெய்யிலங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்
பொய்யில் இங்குஎனைப் புகுதவிட்டுநீ
போவதோ சொலாய் பொருத்தம் ஆவதே 5:92

இதில் 'மெய் இலங்கு வெண்ணீறு பூசிய மேனியனே' என்பது பொதுவாகச் சிவபெருமானைக் குறிக்கிறது என்றும் கொள்ளலாம். மணிவாசகரை ஆட்கொள்ள வந்த ஞான குருவையே குறிக்கிறது என்பதுதான் உண்மை. திருவாசகம் முழுவதும் கண்டு, மறித்து நோக்கிப் பயன்கொள்வார்க்கு, 'வெண்ணீற்று மேனியாய்' என்பது ''செம்மேனியான வெண்ணீற்றான்' எனவும் 'செய்யானை வெண்ணீறணிந் தானை'' எனவும் திருவம்மானையில் வருவன போல இங் கும் நேரில் வந்த ஞானகுருவே குறிக்கப்படுகிறார் என்பது கண் முன் தோன்றும். 'இவை தனிப்பட்டவருடைய ஏக்கம் தானே நமக்கு என்ன?' என்று விட்டுவிட முடியாதவாறு, இவை பொதுமையுணர்வுடன் பாடப்பட்டுள்ளன. உலகில் பிறந்து, இறைவனைக் கண்டு உணர்ந்து கலக்கத் தவறி விட்ட ஒவ்வோரான்மாவும் ஏங்கும் ஏக்கமாக இவை வெளிப் படுகின்றன.

பழ அடியார்களாகிய இவர்கள், திருப்பெருந்துறைத் திருவருட் காட்சிக்குப்பின் எவ்வாறெல்லாம் இறையரு ளில் கலந்தனர் என்பது, கீர்த்தித் திருவகவலில் சற்று விளக்க மாகவே கூறப்பட்டுள்ளது.

நாயினேனை நலம்மலி தில்லையுள்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருகஎன
ஏல என்னை ஈங்கு ஒழித்தருளி;
அன்று உடன்சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன் கலந்தருளியும்
எய்த வந்திலாதார் எரியில் பாயவும்
மால் அதுவாகி மயக்கம் எய்தியும்
பூதலமதனில் புரண்டு வீழ்ந்தலறியும்
கால் விசைத்தோடி கடல்புக மண்டி
நாத நாத என்று அழுதரற்றி

பாதம் எய்தினர் பாதம் எய்தவும்
பதஞ்சலிக்கு அருளிய பரம நாடக என்று
இதம்சலிப்பு எய்தநின்று ஏங்கினர் ஏங்கவும்
... ... ... ...
இறைவன்ஈண்டிய அடியவரோடும்
பொலிதரு புலியூர்ப்புக்கு இனிதருளினன்
ஒலிதரு கைலை உயர்கிழ வோனே 2:127-146

'தில்லை வருக' எனப் பணித்து விட்டு இறைவன் மறைதல்; மணிவாசகரை உலகில் தங்க வைத்தல்; உடன் சென்ற அடியவர் இறையுடன் ஒன்றிக் கலத்தல்; அங்ஙனம் ஒன்றுமாறு விரைந்து வாராது காலம் தாழ்ந்து வந்தவர் நெருப்பில் பாய்ந்து உயிர் நீத்தல்; மயக்கம் எய்துதல், மண்ணில் புரண்டு வீழ்ந்து அலறுதல், விரைந்தோடிக் கடலில் விழுந்து அரற்றுதல் என இவ்வாறாகப் பலரும் உயிர் நீத்தல்; எய்தாதார் ஏங்கி வருந்துதல் என்ற நிகழ்ச்சிகளும் இறைவன் அடியவரோடு தில்லையினுள் புகுந்து இனிதருளுதலாகிய நிகழ்ச்சியுமாகிய இவை இங்கு கூறப்பட்டுள்ளன. இவையே பின்பு புராணங்களுள் விரித்துக் கூறப்பட்டுள்ளனவாயினும், உண்மை யாதென்பது புலனாக வில்லை. மாணிக்கவாசகர் உலகில் இருத்தி, பின்பொரு காலம் தில்லை அம்பலத்தே வருக எனப் பணித்தது ஏன்? ஒரு சில அடியவரோடு மறைந்ததும் மற்றும் சிலர் மேற்காட்டியவாறு அல்லற்பட்டு அரற்றி உயிர் நீத்ததும் ஏன்? இறைவன் வார்த்தைக்காக உயிர் விடாதிருக்க மாணிக்கவாசகர், நீண்ட நாட்கழித்துத் தில்லை சென்று இறையருகிருக்கும் பேறு பெற்றது மட்டுமே நமக்குத் தெரிகிறது.

### களிப்பில் கருத்து இழந்தமை

இறைவன், ஞானகுருவாக வந்து கண்ணாரக் காட்சி கொடுத்ததும் மிக்க களிப்புடன் நடந்து கொண்டதாகவும்,

அப்போது அக்கறையுடன் இறைவனைச் சாராது, இவ்வுலகில் இருக்க இசைந்தது தவறாகப் போய் விட்டதென்றும் மணிவாசகர் கரைகின்றார்.

புலைய னேனையும் பொருள் என நினைந்துன்
அருள்புரிந்தனை புரிதலும் களித்துத்
தலையினால் நடந்தேன் 23:3

'தனித்துணை நீநிற்க யான்தருக்கித் தலையால் நடந்த, வினைத்துணையேனை' *(6:39)* என்பதும் 'களிப்பெலாம் மிகக் கலங்கிடுகின்றேன்' *(23:10)* என்பதும் காணலாம். ஏதோ கிடைக்காத ஒன்று கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்துக் கிடைத்ததைத் தவறவிட்டு விட்டதாக அவர் வருந்துவது தெரிகிறது. ஒருமுறை 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' என்று கண்ணாரக் கண்டவர், அஃதே போல் பிறிதொரு முறை காண அவாவி அழுமிடங்கள் பலவாகும்.

### வருக எனக் கூவிப் பணிகொண்டதும் மீண்டும் வருக என ஏவி மறைந்ததும்

முதலில் இறைவன் 'வா' என வலிய அழைத்து ஆட்கொண்டார். பின்பு 'தில்லைப் பொதுவில் காலங்கழித்து வருக' எனக் கூறி மறைந்தார்.'அறை கூவி வீடு அருளும்' *(8:1)* என்பார் அவர். 'அடியேனை வருக என்று, அஞ்சேல் என்று அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே *(51:5)* என்பதும் காணலாம். 'அடியேனை மண்ணார்ந்த பிறப்பு அறுத்திட்டு ஆள்வாய் நீ வா என்ன' *(38:2)* என்பதும் வா என்று கூறிப் பிறப்பறுத்த செய்தியையே செப்புகிறது. ''வாவா என்றென்னையும் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்'' *(11:7)* என்று கூறலும் காண்க.

என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்து என்னை வா என்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றன் 10:4

என்பதில் முன்பு தில்லைக்கு வருக என்றமை சுட்டப்படு கிறது. அதன்பின் பிரிந்திருந்த காலத்தில் அவர் தம்மை அழைத்துக் கொள்ளுமாறு ஏங்கிடக் காண்கிறோம்.

மருளார் மனத்தோடுனைப் பிரிந்து
வருந்துவேனை வாஎன்றுன்
தெருளார் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனால் சிரியாரோ 21:8

இது தெளிவாக மீண்டும் தம்மை வாவென்று அழைத்து அருள் செய்ய வேண்டுவதாகும். 'தொழுதே உன்னைத் தொடர்ந்தாரோடும் தொடராதே, பழுதே பிறந்தேன்' *(5:88)* 'பழைய அடியார்க்குன் அணியாற் பாதம் கொடுத்தி, (எனக்குத்) தணியார் பாதம் வந்தொல்லை தாராய்' *(5:89)* என்பனவெல்லாம் இவ்வேட்கையைப் புலப்படுத்துவனவே.

பிரிவு அவலத்தின் உச்ச நிலையைச் செத்திலாப் பத்து, குழைத்த பத்து, ஆனந்த மாலை போன்ற பதிகங்களில் காணுகின்றோம். திருப்பூவல்லி, திருத்தெள்ளேணம் போன்றவற்றை ஒருபுறமும் மேற்சுட்டிய பதிகங்களையும் ஒருசேர வைத்து ஒப்பிட்டு நோக்கினால், முன்னதில் காணப்படும் மகிழ்ச்சிப் பெருக்கும் பின்னதில் நிரம்பி யுள்ள அவலப் பெருக்கும் புலனாகும். இம்முரணும் இக் காப்பியப் பாங்குடைய நூலுக்குச் சுவை சேர்க்கிறது. முன்னதில் தமக்குத் துன்பம் தருவன என்று எண்ணுவன வற்றையும் இன்பமாக எடுத்துக் கொள்கிறார். பின்னதில் தமக்கு இன்பம் தருவன என்று எண்ணக் கூடியவற்றையும் துன்பமாகக் கொண்டு பாடுகிறார்.

விண்ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து
மண்ணோர் மருந்து அயன்மாலுடைய வைப்பு அடியோம்
கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடி
தென்னா தென்னாஎன்று தெள்ளேணம் கொட்டாமோ 11:19

துள்ளிக் குதிக்கும் மனம் இதில் மகிழ்ச்சி கொண்டாடுகிறது.

என்னால் அறியாப் பதம்தந்தாய்
யானதறியாதே கெட்டேன்
உன்னாலொன்றும் குறைவில்லை
உடையாய் அடிமைக்கு யாரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியாரொடும் கூடாது
என்நாயகம் பிற்பட்டு இங்கு
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே 50:2

ஆருயிர்கள் இறைவனைக் காண்பதென்பது என்ன? எல்லோரும் மாணிக்கவாசகர் ஆக இயலாது. ஆயினும் மனக்காட்சியில் அருள் தோன்றுதலும் இறைத் தோற்றம் உண்டாதலும் அவ்வப்போது நிகழ்தலுண்டு. மனம் சில சூழல்களில், சில சமயங்களில் மிக உயரிய நிலைக்குப் போகிறது. ஆயினும் அதிலேயே நிலைத்து நிற்பதில்லை. அத்தூய மனநிலை இடையறவுபடுகிறது. அடிக்கடி பழைய இழிந்த நிலைக்கு இறங்கி விடுகிறது. இவ் ஏற்ற இறக்கம், இடையறுதல் போலவே, மாணிக்கவாசகர் வாழ்விலும் நிகழ்ச்சிகள் நடந்து விட்டதால் அவை ஒவ்வோர் ஆன்மாவுக்கும் பொருந்தி வருகின்றன. மகிழ்ச்சி பெருகும் மேனிலையில் 'தென்னா தென்னா' என்று தெள்ளேணம் கொட்டும் மனம், மாறும் பொழுது 'என்னால் அறியாப் பதம்தந்தாய், யான் அஃது அறியாதே கெட்டேன்' என்று அவலமுறுகிறது. மேலும் இக்கால நடைமுறை வாழ்க்கைக்கும் அது

பொருந்துவதைக் காணலாம். ஒருவர் தமக்குக் கிடைத்த பெரும் பதவிக்கு ஏற்பப் பொறுப்புடனும் மதிப்புடனும் நடந்து கொள்வதில்லை. சில அமைச்சர்கள்கூட அங்ஙனம் பதவிக்கு ஏற்காத முறையில் நடந்து, தம்மைத் தாமே இழிவு படுத்திக் கொள்வதாகக் கேள்விப்படுகிறோம். இத்தகைய சூழல்களில் எல்லாம் நமக்கு நினைவு வரும் அடி எது? ''என்னால்அறியாப் பதம் தந்தாய், யான் அது அறியாதே கெட்டேன்'' என்ற அடி இதற்குப் பொருந்தி வருகிற தல்லவா? இங்ஙனமே எண்ணிப் பார்த்தால், ஆன்ம வாழ் விற்கு மட்டுமன்றி, உலகியல் வாழ்வுக்கும் திருவாசக அடிகள் பொருந்தி வருமிடங்கள் பலவாகும்.

வேட்கை நிலை
திரும்பவும்கூட விழைதல்

முற்கூறிய பிரிவு பற்றிய பாடல்களிலேயே, மீண்டும் இறையடியிற்கூடி அங்கேயே உறைய வேண்டும் என்ற வேட்கை புலப்படுத்தப்படுகிறது. என்றாலும் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், பிடித்தபத்து, அருள்பத்து, கண்டபத்து போல்வன பலவற்றில் பிரிவும் வேட்கையும் மின்னிப் பொலிகின்றன.

இறைவனிடமிருந்து பிரிந்த உயிர் இறைவனை அடைய எப்பொழுதும் அவாவி நிற்கிறது என்பர். ஆணும் பெண்ணும் கலந்த முழுமையான வடிவொன்றிலிருந்தே, அவ்விணைகள் பிரிந்தன என்றும் அதனால் அவை மீண்டும் ஒன்றினொன்று கூடி முழுமையடையவே வேட்கை கொண்டு நிற்கின்றன என்றும் கூறுவர். இவை கற்பனை போல் தோன்றினும் இவற்றில் உள்ள அடிப்படை உண்மை மறுக் கொணாதது. மாணிக்கவாசகர் தம்மை இறைவன் என்றும் மீளா வகை ஆட்கொள்ள வேண்டும் என்று அவாவுகின்

றார். செத்திலேன், உடல் தன்னைச் செற்றிலேன், திண் வரை உருள்கிலேன், நெருப்பில் வீழ்ந்திலேன் என்று தம் குறிக்கோளை அடையாமைக்காக அவர் குமையும் விதங் கள் பல. முன்பு அருள் தந்த இறையை அழைத்து அழைத்து அவர் தம் ஆசையை வெளிப்படுத்துகிறார்.

மெய்ப்பால் நரம்பு கயிறாக
மூளை என்பு தோல் போர்த்த
குப்பாயம் புக்கு இருக்ககில்லேன்
கூவிக்கொள்ளாய்! கோவேயோ!
எப்பாலவர்க்கும் அப்பாலாம் சிவனே என்
னாரமுதேயோ
அப்பா காண ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே! 25:2

'முத்தா உன் முகஒளி நோக்கி முறுவல் நகை காண சால ஆசைப்பட்டேன்' *(25:6)* 'உன் பழஅடியார் கூட்டம் அடியேன் காண ஆசைப்பட்டேன்' *(25:9)* என்னுமிடங்கள் முன்பு கண்ட காட்சியை நினைந்து, பின்னும் அதுபோல் காண விழைவதை வெளிப்படுப்பன. முன்பு அந்தணராக வந்த குருவின் தாள்களைத் தலைமேல்சூடி, ஆனந்தம் கொண்டு திருவடித் தீக்கை பெற்றதை எண்ணியெண்ணி இன்புற்றுப் பாடிய பாடல்கள் பலவற்றைக் கண்டோம். அதுபோல் மீண்டும், அத்திருவடிகளைக் கழுமத் தழுவிக் கொண்டு, அழல்சேர் மெழுகொப்ப உருகி, 'எம்பெரு மானே எம்பெருமானே' என்று அரற்ற வேண்டும் என்று மாணிக்கவாசகர் விரும்புகிறார்.

கையால் தொழுதுஉன் கழற்சேவடிகள்
கழுமத் தழுவிக் கொண்டு,
எய்யாதென்றன் தலைமேல் வைத்துஎம்
பெருமான் பெருமான் என்று

4.7.

ஐயா என்றன் வாயால் அரற்றி
அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற்றரசே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே! 25:8

இதனை மேலும் நயம்பட அவர் பாடுமிடங்களும் உள. திருவாசகத்தில் பெரும் பகுதி இப்பிரிவும் பரிவும் வேட்கையும் விண்ணப்பமும் தானே! இறைவன் அரு ளாரமுதத்தை அளவின்றி வழங்கினானாம். அதனை அப்படியே விழுங்க முயன்றதால், இடையில் விக்கிக் கொண்டதாம். இவ்விடையில் ஏற்பட்ட தடை நீங்க, விக்கல் நிற்கத் 'தழங்கருந் தேன்அன்ன தண்ணீர் பருக'க் கேட்கிறார். (24:10) தந்நிகரில்லா இப்பெரியவர் நெக் குருகும் நெஞ்சத்தைக் காட்டுவது திருவாசகம்; இறை வனையே அன்பால் பருகுவது—இறைவனால் அருள் வழிப் பருகப்படுவது என நீர்மை சான்ற இதில், இறைவன தருளைத் 'தழங்கருந் தேனன்ன தண்ணீர்' என உருவகித் தமை எண்ணி எண்ணி வியக்கற்பாலது. தமிழ் நாட்டில் பிறந்த ஆங்கிலப் பேராசிரியர்கள் ஏன் திருவாசகத்தைப் படிக்க வில்லை? தாம் படித்த உருக்காட்சிகளும் (Images) படிமங் களும் (Symbols) திறனாய்வு அடிப்படைகளும் இங்கே கொட்டிக் கிடப்பதை ஏன் காணவில்லை? 'ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்கு' நடத்தப்படும் கருத்தரங்குகள், ஆய்வுகள் எனக்கு நகைப்பை விளைவிக்கின்றன.

முன்பு ஆண்டது போல், இப்போதும் அருட்காட்சி கொடுத்து, முற்றிலும் அடைக்கலமாக ஏற்றுக் கொண்டு விட்டால் பிரச்சினை ஒழிந்தது. அப்போது தானே உலகம் ஏற்கும்; உலகம் அடியாரையும், ஏற்றவரையும் புகழும்; சிறப் பாக எண்ணும். இதற்காக அடிகள் கெஞ்சிக்கேட்கும் முறை கள்; வாதிடும் முறைகள்; ஊடி நிற்பது போலச் சினந்து பேசுமிடங்கள் பலவாகும்.

இம்மாநிலம் முழுதும்
நிகழப்பணிகொண்டு என்னை ஆட்கொண்டு
ஆஆ என்ற நீர்மை எல்லாம்
புகழப்பெறுவது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே 27:5

முன்னே எனை ஆண்ட
பார்ப்பானே எம்பரமா என்று
பாடிப்பாடிப் பணிந்து பாதப்
பூப்போது அணைவ தென்றுகொல்லோ! 27:10

இப்பிரிவு அவலமும் வேட்கையுமே, உலகில் பிறந்து தத்தளிக்கும் ஆன்மாவின் அவலக் குரலாக ஒலிக்கிறது. ஆன்மா அனைத்தின் வேட்கையையே மாணிக்கவாசகர் குரல் எடுத்தியம்புகிறது. எடுத்த காரியத்தில் விடாமுயற்சி வேண்டும். ஒன்றில் வெற்றி பெற முதலில் விடாமுயற்சியும் அடுத்து உழைப்பும் தேவை. மாணிக்கவாசகர் உள்ளம் குறிக்கோளை இறுகப் பற்றிக் கொள்கிறது; அதன் விடா முயற்சி பல்வேறு வகைகளில் வெளிப்படுகிறது.

இருந்து என்னை ஆண்டுகொள்; விற்றுக்கொள்;
ஒற்றிவை என்னின் அல்லால்
விருந்தினனேனை விடுதி கண்டாய்! 6:18

'என்னை விற்கவோ, ஒற்றி வைக்கவோ உரிமை தரும் பத்திரம் உன்னிடம் தரப்பட்டுள்ளது' எனத் தம்மை ஒப்படைக்கிறார்.

### சிரிப்பிப்பேன் உன்னை ஏசுவேன்

''உத்தரகோச மங்கைக்கு அரசனே! என்னைக் கை விட்டு விடாதே! அப்படி என்னைக் கைவிட்டு விட்டால், பெரியவர்கள் நீ யார்? உனக்கு ஏன் இந்த அவதி வந்தது என

வினவினால், 'நான் உன் அடிமைக்கு அடிமை; அதனால் தான் இப்படி ஆகிவிட்டது' என்று சொல்லி, உன்னை அவர்கள் சிரிக்கும்படி செய்வேன்,'' என்று மணிவாசகர் ஊடுகிறார். அம்மட்டோ, ''என் பிழைப்பை ஊரறியச் செய்து சிரிப்பிப்பேன்; நான் ஈசனின் அடியானாக இருந்து இப்படி ஆனேன் என்று என் அடிமைத் திறத்தை ஊரிலே விரித்துரைப்பேன்; என்னைக் கைவிட்டு விடாதே! கை விட்டால் உன்னை என்ன சொல்வேன் தெரியுமா?'' என வினவி, அவர் இறைவனைப் 'பித்தன் பித்தன்' என்று வைகிற அழகைக் காணுங்கள்.

தாரகை போலும் தலைத்தலை
மாலைத் தழல் அராப்பூண்
வீர என் தன்னை விடுதி கண்டாய்
விடின் என்னை மிக்கார்
ஆரடியான் என்னின் உத்தர
கோச மங்கைக்கு அரசின்
சீரடியார் அடியான் என்று
நின்னைச் சிரிப்பிப்பனே! 6:48

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பை;
தொழும்பையும் ஈசற்கு என்று
விரிப்பிப்பன்; என்னை விடுதி கண்டாய்;
விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப்பிச்சன் நஞ்
சுஊண் பிச்சன்; ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன்; என்னையும் ஆளுடைப்
பிச்சன் என்று ஏசுவனே! 6:49

'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைக்கும்' முருகப் பெருமானின் தந்தையை, மணிவாசகர் ''யானைத் தோல் போர்த்த பித்தன், புலித்தோல் உடுத்த பித்தன்

நஞ்சுண்ணும் பித்தன்; சுடுகாட்டில் எரியாடும் பித்தன், என்னுடைய தலைவனாகிய பித்தன்'' என்று ஏசுவன் எனத் தெளிவாகக் கூறுகிறார். இங்ஙனமெல்லாம், தமக்கேற்பட்ட ஏமாற்றத்தால் — அடைந்தே தீரவேண்டும் என்ற வேட்கையால் திட்டி விடுகின்ற மணிவாசகர் உள்ளம் உடனே நெகிழ்ந்து விடுகிறது. 'வைதுவிட்டோமோ' என்று உள்ளம் தடுமாறுகிறது. அவர் கண்கள் குளமாகின்றன. அடுத்த பாடலில் பாடுகிறார், ''ஏசினும் யான்உன்னை ஏத்தினும் என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை விடுதிகண்டாய்'' என்று 'உன்னை வைதாலும் புகழ்ந்தாலும், என் குற்றத்திற்காக நானே வருந்தி அழுகின்ற என்னைக் கைவிட்டு விடுவாயோ?' எனக் குழைகின்றார் (6:50). அப்பாடலை முடிக்கும்பொழுது ''சிற்றுயிர்க்கு இரங்கிக் காய்சின ஆலம் உண்டாய் - அமுதுண்ணக் கடையவனே'' என விளிக்கின்றார். ''அன்று சிற்றுயிர்களைக் காப்பாற்றக் கொதித்து எழுகின்ற நஞ்சினைக்கூட, அவற்றின்பால் இரக்கம் கொண்டு உண்டனை அன்றோ? அமிழ்தம் உண்ணும் தகுதியும் வாய்ப்புமுடைய நீ அன்று நஞ்சினை உண்டாயன்றோ?'' என்று அவர் கேட்பதில் தொனிப்பது என்ன? ''உயிர்களின் பொருட்டு அமுதினைவிட்டு நஞ்சினை உண்ட நீ, யான் பேசும் புகழ் வார்த்தைகளை ஏற்பது போல என் இகழ்ச் சொற்களையும் ஏற்காமலா விட்டுவிடுவாய்! அவற்றை ஏற்று, மன்னித்து என்னைக் காப்பதுறுதி'' என்பதைத்தான் அவ்விறுதியடிகள் சொல்லாமல் சொல்கின்றன. 'ஏசினும் உன்னை ஏத்தினும் கைவிட்டு விடாதே' என அவர் விண்ணப்பிப்பது கண்டு, நம் கண்களும் பனிக்கின்றன அன்றோ?

'உன் அடியவர்கட்கு மட்டும் காட்சி கொடுத்து விட்டு, என்னிடம் பாலில் வெண்ணெய் அடங்கியிருப்பதுபோல், மிக அடக்கமாகப் பேசாதிருந்தால் உன்னை உலகோர் ஏச மாட்டார்களா?' என வினவுகிறார். 'நான் கெடுகின்ற

முறைப்படியே கெட்டுப் போகின்றேன். கேடிலாதாய், இந்தப் பழி எல்லாம் உனக்கேதான்' என்று குமுறுகின்றார். 'காத்தாட் கொள்ள வேண்டிய நீயே நடுவுநிலையைக் கை விட்டு விட்டால், இஃது உன் தலைமைப் பதவிக்கு நல்லதா?' என்று கேள்வி கேட்கிறார். 'என்னை அப்படியே துளையிடாச் சுரைபோல விட்டுவிட்டால், அடேயப்பா இதனால் உனக்கென்ன இலாபமோ?'; 'நான் படுகிற வேதனை எல்லாம் பட்டபிறகு பின்பு பயன் என்ன? நீ காப்பாற்றினா லும் காப்பாற்றாவிட்டாலும் என்ன ஆகப்போகிறது?'' — இவ்வாறெல்லாம் இறைவனோடு நெருங்கி நின்று, நேரடி யாக உரையாடித் தம்மை ஆட்கொள்ள வேண்டிய இன்றி யமையாமையை வலியுறுத்துகிறார்.

கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ! (21:5)

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடிலாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவது எல்லாம்நான்
பட்டாற் பின்னைப் பயன்என்ன?
கொடுமா நரகத்து அழுந்தாமே
காத்தாட் கொள்ளும் குருமணியே
நடுவாய் நில்லாது ஒழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே? 50:4

மான்ஓர் பங்கா! வந்திப்பார்
மதுரக் கனியே! மனம் நெகா
நான்ஓர் தோளாச் சுரை ஒத்தால்
நம்பி! இத்தால் வாழ்ந்தாயே! 32:10

தோண்டும் சுரை பயன்படும். தோளாச்சுரை வற்றி வற்றி உட்பகுதி கூடாகிவிடும். பயனற்று ஒழியும். ''மனம் நெகிழா என்னைத் தொளையிடாத சுரைபோல — தோண்டாத சுரைபோல விடுத்தால் பயன் என்ன? இப்படி என்னைச் செய்வதனால் நீ நிரம்ப வாழ்ந்து விட்டாய் போலும்!'' என்று கடிந்து பேசுகிறார், ஆண்டவனிடம் அவர்க்குள்ள உரிமை பற்றி

குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீகொண்டால்
என்தான் கெட்டது? 33-3

நான் குற்றமே செய்திருந்தால்தான் என்ன? எவ்வளவு பெரிய குற்றமானாலும் பொறுத்துக் கொண்டால் குடியா முழுகிப் போய்விடும்? குற்றத்தைக் குணமாகக் கொண்டால் என்னதான் கெட்டுவிடும்? — இவ்வாறு உரிமையுடன் வினவுகிறார். சிறியோர் செய்த பிழையைப் பொறுப்பது பெரியோர் கடன் அல்லவா என நினைவுபடுத்துகிறார்.

ஊடல், உணர்த்தல், உணர்தல் என்பன அகவாழ்வில், காணப்படும் காதல் நெறிகள். தலைவி ஊடுவாள்; தலைவன் உணர்த்துவான் (ஊடலைத் தீர்க்கச் சமாதானம் கூறுவான்); தலைவி ஊடல் உணர்வாள் (உண்மை அன்பை உணர்ந்து ஊடலைக் கைவிடுவாள்). இந்நெறிகள் தொல்காப்பியத்திலேயே பேசப்படுகின்றன. திருவாசகத்தில் மாணிக்கவாசகர் இறைவனுடன் பிணங்குகிறார்; ஊடுகிறார். பிரிந்த தலைவன் நெடுநாளாகியும் வரவில்லையே என்பதுதான் அவருடைய ஏக்கம். எனவே அவனை மனக் கண்ணாற் கண்டு, ஊடுகிறார். பிறகு, அவரே மனம் நெகிழ்ந்து ஊடல் உணர்கிறார். அதாவது ஊடலைக் கைவிட்டு, நெகிழ்ந்து மனம் ஒன்றுகிறார். இறைவனாகிய காதலன்

ஊடல் உணர்த்தினானா? மானுடக் காதலன் கூடத் தன் காதலிபால், இரக்கம் கொண்டு ஊடலுணர்த்த முற்படும் பொழுது, சிற்றுயிர்க்கும் இரங்கும் சீராளன் ஊடலை உணர்த்தாமல் இருப்பானா? அவன், மாணிக்கவாசகரின் உள்ளத்தின் உள்ளே ஒளியாக நின்று ஊடலுணர்த்தி, அவரை உணர வைத்துப் பக்குவப்படுத்திக் கொண்டே இருந்தான். பக்குவப்படும் உயிரின் போராட்டத்தைத்தான், அன்பின் மாக்கதையாகத் திருவாசகம் பேசுகிறது.

திருவம்மானையில் அகப்பொருள் நெறியில் வைத்து, ஒரு தலைவி கூறுவதாக இச்செய்தி அழகுற விளக்கப் பட்டுள்ளது. தலைவனின் பூங்கொன்றையைச் சூடுதல், சிவனின் திரள் தோளைக் கூடுதல், கூடி முயங்கிப் பிரிய நேர்ந்த காலை மயங்குதல், மீண்டும் அருகடைந்து ஊடுதல், செவ்வாய்க்கு உருகுதல், உள்ளுருகித் தேடிக் கூடுதல் என இச்செயல்கள் தலைவியின் மெய்ப்பாடுகளாக விவரிக்கப் படுகின்றன. மாணிக்கவாசகரின் வாழ்வில் நேர்ந்த இறைக் காட்சி அனுபவங்களும் இவை போன்றவையேயாகும்.

சூடுவேன் பூங்கொன்றை; சூடிச்சிவன் திரள்தோள்
கூடுவேன்; கூடி முயங்கி மயங்கி நின்று
ஊடுவேன்; செவ்வாய்க்கு உருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன்; தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்;
வாடுவேன்; பேர்த்தும் மலர்வேன்; அனல்ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்! 8:17

இப்பாடலுள் தொகுத்துச் சொல்லப்படுவது, நூன் முழுவதும் இறை அனுபவ மெய்ப்பாடுகளாகக் கூறப்படு வனவற்றின் சுருக்கமே எனில் மிகையாகாது. அகக்காதல் மெய்ப்பாடுகளாகக் கூறுங்கால் அது மேலும் இனிமை யுடையதாகிறது.

## பொய்ம்மைக்கும் மெய்ம்மைக்கும் போராட்டம்

பொதுவாக உலகம், செல்வம், உறவு போன்றவற்றைப் பொய்யானவை என்றும் நிலையற்றவை என்றும் மெய்யறிஞர் எடுத்துரைப்பர். அவற்றை மாயை எனக் கொண்டு பற்றறுக்க வேண்டும் என்பர். அதுபோல் மாணிக்கவாசகரும் பொய்ம்மையானவற்றை விட்டு விலகுமாறு புகலுமிடங்கள் உள. இறைவன்பால் உண்மை அன்புடையாரே உய்திக்கு உரியர். பொய்யானவர்கள் உய்தி பெறுதல் இயலாது. எத்துறையிலும் உண்மையானவர்களும் பொய்யானவர்களும் இருக்கவே செய்கிறார்கள். இவ்வேறுபாட்டையும், சமயத் துறையில் காணலாம். எனவே மாணிக்கவாசகர் பொய்ம்மை பற்றிப் பேசுமிடங்கள் இப்பொதுக் கருத்தையே முதலில், மேற்போக்காக எதிரொலிக்கின்றன. ஆனால் அதுமட்டுமன்று, அவற்றின் அடித்தளத்தே, அவர்தம் 'தன் வரலாற்றுண்மை' ஒன்றும் அடங்கிக் கிடப்பதை அவை கூறப்படும் முறையாலும் அழுத்தத்தாலும் உணரலாம்.

மாணிக்கவாசகர் குதிரை வாங்கக் கிழக்குக் கடற்கரைக்குக் கொண்டு போன அரசுக்குரிய பொன்னை, அதற்குச் செலவிடாமல் வேறு வழிகளில் செலவிட்டதை உலகம் 'பொய்'யெனப் பழித்தது; குதிரைகள் வருமெனக் கூறியபடி வாராதது கண்ட மன்னன் அவரைப் 'பொய்யர்' எனக் கருத நேர்ந்தது. அவர் தாமே தம்மை இழந்த நிலையில், இவ்வுலகியலுக்கு அப்பாற்பட்டு நடந்து கொண்டார். ஆனால் அந்த மிகவுயரிய நிலையை உலகம் உணர்வது எவ்வாறு? அவரே காலம் செல்லவும், பாண்டியன் தண்டனைக்கு ஆளாக நேர்ந்ததாலும், உலகம் பழிப்பதை எதிர்கொள்ள நேர்ந்ததாலும் தமக்குள் இடையறா வருத்தத்திற்கு ஆளானார். தம்மைப் பொறுத்துத் தவறில்லை; உலகமோ தவறெனக் கருதுகிறது. இத்தகைய சூழல்கள்

வாழ்க்கையில் அரிதின் ஏற்படுவது இயற்கையே. மாணிக்க வாசகரின், இம்மனப் போராட்டம் நூல் முழுவதும் பாடல்கள் தோறும் நூற்றுக்கணக்கான இடங்களில் வெளிப் படுகிறது.

பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே 1:37,38

பொய் கெட்டு மெய்யானார்...
கட்டழிக்கவல்லானே 1:86

கேதம் கெடுத்து என்னை ஆண்டருளும் கிடப்பறிவார் 43:9

பொய்யார் பெறும்பேறு அத்தனையும் பெறுதற்குரியோன், பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப் பாதம் மேவக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்யனேன் நான் உண்டுடுத்திங்கு இருப்பதானேன் போரேறே 5:52

போந்தும்என் பொய்ம்மை ஆட்கொண்டு அருளிடும் பெருமை போற்றி 5:69

பொய் கலந்தது அல்லதில்லை
பொய்ம்மையேன் எம்பிரான்...
மெய்கலந்த அன்பர் அன்பு
எனக்கும் ஆக வேண்டுமே 5:73

பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டுகொண்டு நாயினேனை
ஆவ என்று அருளு நீ 5:74

விச்சுக்கேடு பொய்க்கு ஆகாது என்று
இங்கு எனைவைத்தாய் 5:81

சிவமா நகர் குறுகப்
போனார் அடியார் யானும் பொய்யும்
புறமே போந்தோமே 5:85

புறமே போந்தோம் பொய்யும் யானும் 5:86

யானே பொய் என்நெஞ்சும் பொய் என் அன்பும் பொய் 5:90

மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்

பொய்யில் இங்கு எனைப் புகுதவிட்டுநீ
போவதோ சொலாய்? பொருத்தமாவதே? 5:92

பொருத்தமின்மையேன் பொய்ம்மை உண்மையேன் 5:93

கூடவேண்டும் நான் போற்றி! இப்புழுக்
கூடு நீக்கெனப் போற்றி! பொய்யெலாம்
வீட வேண்டும் நான் போற்றி! வீடுதந்து
அருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே! 5:100

பொறுப்பர் அன்றே பெரியோர் சிறுநாய்கள் தம்
பொய்யினையே 6:6

பொய்யவனேனைப் பொருள்என ஆண்டு
ஒன்று பொத்திக் கொண்ட
மெய்யவனே 6:7

ஒரு சான்றுக்காக, முதல் ஆறு பகுதிகளில் மட்டும் வருகின்ற பாடலடிகள் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவை மற்றவர்கள் போல் உலகம் மாயை என்பது பற்றிய கருத்துக்கள் என்னும் அளவில் நில்லாமல், இவற்றைப் பாடியவரின் உள்ளுணர்வுப் போராட்டம் ஒன்றைக் காட்டுகின்றன. மற்றவர்களை மெய்ம்மை அன்பர் எனவும் தம்மைப் 'பொய்ம்மையன்' எனவும் அடிக்கடி, வேறுபடுத்திக் கூறிக் கொள்கிறார். தாமும் பொய்யும் மட்டும் வெளியில் போந்ததாகவும்' தம்பால் உள்ள பொய்

எல்லாம் வீட (அழிய) வேண்டும் எனவும் சிறியோரின் பொய்யைப் பெரியோர் பொறுக்க வேண்டும் எனவும் கூறுவன கருதத்தக்கன. பொய்யவனாகிய தன்னை ஒன்று பொத்திக் கொண்டதாக (தம்மை சீர்திருத்தி ஆட்கொண்ட தாக) கூறுதல் காண்கிறோம். தம் பொய்ம்மை தீர்த்து ஆட் கொள்ள வேண்டும் என்கிறார். இங்ஙனமே எண்ணிப் பார்த்தால், இவற்றிலுள்ள தன்னுணர்ச்சிப் பாங்கு புலப் படாமற் போகாது.

நூல் முழுவதும், இம்முதல் ஆறு பகுதிகள் போன்ற காட்டுகள் நிறைய உள. வற்புறுத்தித் தெரிவித்தற் பொருட்டு, மேலும் சில காட்டுகள் தரப்படுகின்றன. இந்நூலுள் தரப் பட்டுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சி பற்றியும் தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகள் மிகுதி என யாரும் எண்ணுதல் கூடாது. காட்டப்பட்டவை போலவே, மேலும் பல எடுத்துக் காட்டுகள் உள. அனைத்தையும்தரின் பொருளடைவு போல் ஆகிவிடும். இந்த அளவு கூடத்தரப்படாவிட்டால், படிப்போர் மனங்கொள்ளுமாறு இவ்வுண்மைகளைப் பதிய வைக்கவும் முடியாது. எல்லோரையும் போலவே, இவரும் உலகப் பொய்ம்மைகளைச் சாடியுள்ளார் என்று கூறவே எவரும் முந்துவர். அஃது உண்மையன்று என்பதை நிறுவவே இத்தனை காட்டுகள் தரப்படுகின்றன. மாணிக்க வாசகர் தம்மைக் 'கள்ளன்' என்றும் பிழை செய்து விட்ட வன் என்றும் கூறி வருந்துமிடங்களும் உள.

உத்தமன் அத்தன் உடையான்
அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மால் இவன்
என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட
ஊர்ஊர் திரிந்து எவரும்

தத்தம் மனத்தன பேசஎஞ்
ஞான்றுகொல் சாவதுவே! 5:3

எவ்வளவு துயரம்? ஏன் ஊரார் தத்தம் மனத்தன பேச வேண்டும்? ஆம், பிறர் வாழ்வில் நிகழவொண்ணாத, ஒரு பெரும் சூழல், இவர் வாழ்வில் ஏற்பட்டு விட்டதையே இது காட்டுகிறது.

கள்ளன் கடியன் கலதிஇவன் என்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தான் என்மனத்தே 10:19

இவ்வாறு தம்மைக் கூறிக்கொள்ளுதல் மேலும் பல இடங்களில் காணப்படுகிறது. அவர் நெஞ்சினுள் ஒரு போராட்டம் நிகழ்ந்ததாலேயே இவ்வண்ணம் எண்ணி யெண்ணி வாடுகிறார். 'பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும், மெய்யாக் கருதிக் கிடந்த' தம்மை இறைவன் தெளிவித்து ஆட்கொண்டதாகக் கூறுதல் *(10:17)*, ஒரு கணப்பொழுதில் அவர் 'ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும்' மனவுறுதியைப் பெற்றதைக் கூறுகிறது.

பொய்யெலாம்விடத் திருவருள் தந்துதன்
பொன்னடி இணைகாட்டி 41:1

நடித்து மண்ணிடைப்
பொய்யினைப் பலசெய்து... திரிவேனை 41:3

'பொய்விட்டு உடையான் கழல்புகும் காலம் வந்தது' *(45:1)* பொய் நீக்கிப் புயங்கன் ஆள்வான் *(45,3)*; பொய்யிற் கிடந்து புரளாது சிவன் கழலுக்குப் போராப் புரிமின்' *(45:9)* என்பன போல் வருமிடங்கள் பலவும் சிந்தனைக்குரியன. இறைவன் அவருக்குப் 'பொய்யிருள் கடிந்த மெய்ச்சுட ராகவே' *(22:3)* காட்சி தருகிறார். 'பொய்யனேன்' *(23:1)* என்று தம்மைக் கூறிக்கொண்டு, தமது பொய்ம்மையை

விடத் திருவருள் புரியுமாறு இறைவனை அடிக்கடி வேண்டுகிறார்.

இவற்றால் மாணிக்கவாசகர் பொய்ம்மையுடையவர் என்று ஆகிவிடாது. அவர் உண்மையான அடியார்களில் எல்லாம் உண்மையானவர். இறைவன்பால் முழுதும் தம்மை ஒப்படைத்து விட்டபின், தம்மிடமுள்ளது எதனையும் அவர் தம்மது, பிறரது என்றெல்லாம் நோக்கினாரில்லை. பாண்டியனும் பாண்டியனுடைய பொன்னும் இம்மண்ணுலகமும் செல்வமும் பிறவும் எல்லாம் அவருக்குத் துச்சமான நிலை ஒன்று வாய்த்தது. அதற்குப் பின் நடந்தன எல்லாம் இறைவன் செயல்களே அன்றி, அவர் செயல்கள் ஆகா. அவர் பாடல்களில் காணப்படுவது, உலகியலில் காணப்படும் போராட்டமேயாகும். அதிலும் உழன்று உழன்று அவர் மனம் வெற்றி பெறுகிறது. தம் வாழ்வில் நடந்த நல்லதற்கும் கெட்டதற்கும் தாம் பொறுப்பன்று என்றும் எது சரி என ஆராய்வது தம் கருத்தன்று என்றும் அதிகாரம் தம்முடையதன்று[1] என்றும் அவர் காண்கிற தீர்வுகள் மெய்யுணர்வு நிலையினின்று மதிப்பீடு செய்யத் தக்கன. தமக்கு எவ்வித இடையூறுகளும் இனி வாரா என்றும் தம் பிறப்பறுக்கும் கடமையை இறைவனிடம் ஒப்படைத்து விட்டதாகவும் அவர் விளக்குகிறார். தம் அனுபவங்களை உலகப் பொது அனுபவங்களாக்கி, ஒவ்வொருவரையும் உண்மையுணர வைக்கும் ஆற்றலுடைய மணிவாசகர், இப் பொய்ம்மைப்போரையும் உலகம் தன் சொந்த அனுபவமாக உணர வைக்கிறார்.

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையோ?

இன்றோர் இடையூறு எனக்குண்டோ?
எண்தோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே? (33:7)

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்!
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்னதோ இங்கு அதிகாரம்?
காயத் திடுவாய்; உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய கண்ணுதலே! (33:8)

திருவாசகத்துள் காணப்படும் பொய்ம்மை மெய்ம்மைப் போராட்டத்தின் முடிவாக, மாணிக்கவாசகரின் பக்குவ மடைந்த மனநிலையைக் காண்கிறோம். சற்றே தாம் பொய் கூறி விட்டோமோ என்று சலனப்படும் அவர் மனம், அவ் வசைவு நீங்கிச் சரணாகதியில் உறுதிப்படுகிறது. குழைத்த பத்தில் அவர்தம் குழம்பிய மனம் உறுதிப்படுவது தெரி கிறது. மாணிக்கவாசகர் 'பொய்யடிமை இல்லாத புலவர்' என்பது இவற்றால் அறியப்படும் செய்தியாகும். சங்கப் புலவர்களைக் குறிப்பதாயின் பொய்யிலாப் புலவர் என்று அமைந்திருக்கலாம். பொய்யடிமை என்றது, அடிமைத் திறம்பூண்டு ஒழுகிய ஆளுடைய அடிகளையே குறிக்கும். தம்மைப் பொய்யடிமையுடையாராக அவர் அடிக்கடி கூறிக் கொள்ளினும், அங்ஙனம் வெளிப்படக் கூறிக் கொள்ளு தலே, அவர் மெய்யடியார் என அறியப் போதிய சான்றா கிறது. தம்மை அவர் இங்ஙனம் கூறிக் கொண்டு, மெய்ம் மையையே நாடியதால்தான் அவரைப் பொய்யடிமை இல் லாத புலவர் எனப் புகன்றனர்.

சிவப்பிரகாசர் நால்வர் நான்மணி மாலையில் மாணிக்கவாசகரைக் குறிக்குமிடத்து,

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ!

ஆயினும் தன்னைநீ புகழ்ந்துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன் அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி அறியா என்புஅணி வோனே 24

என்று மாணிக்கவாசகரைப் புலவர் என்றும் அவர் நூலைச் செய்யுள் என்றும் குறிக்கக் காண்கிறோம். கபில, பரணர் அனைய சங்கப் புலவர்கள் 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறார்; மெய்கூறுவர்; பொய்யாச் செந்நாவுடையார்' என்பது உண் மையே. அவர்களைக் குறிப்பதாயின் 'பொய்யில் புலவர்' என்றே கூறியிருப்பர். 'பொய்யில் புலவன்' என மணி மேகலை திருவள்ளுவரைச் சுட்டும். 'பொய்யடிமை இல் லாத' என்பதே ஐயத்தை உண்டாக்குகிறது. சேக்கிழார் 'நாத மறை தந்து அளித்தாரை நடை நூற்பாவில் நவின்று ஏத்தும் போதம் மருவிப் பொய்யடிமை இல்லாத புலவர்' என்றும், 'செய்யுள் நிகழ் சொல் தெளிவும் செவ்விய நூல் பல நோக்கும் கொண்டு, மெய்யுணர்வின் பயன் இதுவே எனத் துணிந்து, மையணியும் கண்டத்தார்க்கே ஆளான புலவர் என்றும் கூறுவன சங்கப் புலவர்களைவிட, மணிவாசக ருக்கே பொருந்துவனவாம். இறைவனை நவின்று ஏத்திய பாடல்களைச் செய்யுளாக (இலக்கியமாக), நடைநூற்பா வில் (திருத்தெள்ளேணம், திருக்கோத்தும்பி முதலிய உலக வழக்குப் பாடல்களில்) தந்தவர் மாணிக்கவாசகரேயன்றி, சங்கப் புலவர்களை அது சாராது. சங்க இலக்கியப் பரி பாடலில் சிவபெருமானைப் பற்றிய தனிப்பாடல்கள் காணப் பட்டில. முற்காட்டியது போல, திருவாசகத்தில் உயிரிழை யாகக் கிடக்கும் உணர்வுகளில் பொய்யை வெறுக்கும்

இவ்வுணர்வும் ஒன்றாகும். நூன் முழுவதும் விரவி, மாணிக்கவாசகரை 'உரு'வாக்கிக் காட்டும் இத்தொடர் களைப் பல்கால் பயில்பவருக்குப் 'பொய்யடிமை இல்லாத புலவர்' என்றதும் மாணிக்கவாசகரே நினைவிற்கு வருவார்; வரவேண்டும். இன்றேல் அவர்கள் திருவாசகம் படித்த தாகக் கூறுவது 'பொய்'யென உணர, வேண்டும். சிவப்பிர காச அடிகளார் போன்றவர்கள் புலவர், செய்யுள் என்ற பெரியபுராணச் சொற்களை ஆண்டிருப்பது, அவர்கள் மனத்தே மரபுவழியில் இவை மாணிக்கவாசகரையும் திரு வாசகத்தையும் குறித்தமையினாலேயாம். இதற்கு வேறாகக் காட்டப்படும் சான்றுகள் சில உளவே எனில், அவைதான் மேலும் ஆராயப்பட வேண்டியவையே தவிர, இதில் ஐயப்பாடெதுவும் தோற்றவில்லை.

### புரைபுரை கனியப் புகுந்துநின்று உருக்கிய உருக்கம்

திருவாசகத்தின் உணர்வுகளில் முடிமணியாகத் திகழ் வது உருக்கம். ''மலம் கழுவுவார் வந்து சார்ந்தது''. அழுத ரற்றிக் கண்ணீரால், அம்மனமாசு நீங்கப் பெற்றுத் தூய்மை அடைய வைப்பதே திருவாசகம். முதலிற் கண்ட திருவடிக் காட்சியின் போதே, 'பருகு அன்ன அருகா நோக்கமே' பாலித்தது. பின்னர்ப் பிரிவு நிலையிலும் பிரிவாற்றாது கூட விழையும் வேட்கை நிலையிலும், நன்றிப் பெருக்கிலும் நன்மையை எட்டிப் பிடித்த மகிழ்ச்சி நிலையிலும்— தொடக்கம் முதல் முடிவு வரை கண்ணீரே நெக்குருகி வழிந்து, ஆறாகப் பாய்கிறது.

இறைவனையும் அவனது அருளையும் நீர்ப்பொரு ளாகக் கொண்டு, பருகி ஆனந்தமடைகிறார் மாணிக்கவாசகர். அவ்வருளை மட்டு (தேன்), அமுது, பால் என இனிப்புப் பானங்களாகக் கொண்டு, பருகி ஆனந்த வெள்ளத்தில்

அழுந்துகிறார். கரைந்துருகல், நினைந்துருகல், கசிந்துருகல், நெக்கு நெக்குருகல், உடலில் எற்புத்துளைதோறும் புரை புரை கனிய உருகல் என இவ்வாறு உருகும் வகைகளாக அவர் காட்டும் மெய்ப்பாடுகள் வேறு எங்கும் காணாதனவாகும்.

நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே 1:69

எனத் தம்மை நீராகவே உருக்கி விட்டதாகப் பேசுகிறார். இறைவனை அவர் மேகமாக உருவகிக்கும் நீண்ட உருவகம்—காப்பியத் தன்மையுடன் முப்பது அடிகளில் கூறப்படுகிறது. கடலே மேகமாகி மாறி அருள் மழை பொழிகிறது. *(3:66-95)* இவ்வுருவகம் நூல் முழுவதும் இறையருளைத் தண்ணீராக உருவகிப்பதோடு ஒத்திருப்பது 'நோக்கி' உணரத்தக்கதாகும்.

அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவர், ஆரத் தந்த
அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க! 3:93-95

என்று இவ்வுருவகம் முடிகிறது. அன்பு விதையை விதைத்து, அன்பை விளைவிக்கும் உழவராம் தொண்டர்களுக்கு நல்ல அறுவடை தந்த மேகமே வாழ்க என்ற வாழ்த்து, நினைந்து நினைந்து போற்றுதற்குரியதாகும். நீர் என்றதும் 'இறையருள்' நினைவு வருகிறது. இறைவன் 'மேகம்' ஆகின்றான். அருள்-அருவம். அதை 'நீர்'-'உரு'வாக்கிக் காட்டுகிறது. தமக்கு இறைவன் அருள் என்ற தேன் வெள்ளத்தைப் பருக வைத்ததை, மெய்ப்பாட்டோடு அடிகள் சொல்லுமிடம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. அந்தக் கடலைப் பருகியும் தீரவில்லையாம்; விழுங்கியும் முடியவில்லையாம். உலகில் இன்பப் பெருக்கில் 'ஐயோ' செத்தேன். ''எவ்வளவு இனிமையாயிருக்கிறது தெரியுமா?'' என்று வியந்து பேசுவது போலப் பாடுகிறார்.

சொல்லுவது அறியேன் வாழி முறையோ!
தரியேன் நாயேன், தான்எனைச் செய்தது!
தெரியேன்! ஆ ஆ! செத்தேன் அடியேற்கு
அருளியது அறியேன், பருகியும் ஆரேன்,
விழுங்கியும் ஒல்ல இல்லேன் 3:163-167

''இறைவன் எனக்கு எவ்வாறு கிட்டினான் என்பதைப் பிறர்க்கு எடுத்துச் சொல்ல வழியறியேன். அவன் எனக்குச் செய்த பேரருளை நாயனையேன் தாங்க மாட்டேன். அதை அறியும் ஆற்றல் இலேன் ஐயோ, ஆ ஆ! செத்தொழிந்தேன். அடியேனுக்கு அருளியதை அளந்தறியேன். பருகியும் நிறை வெய்தப் பெறேன். விழுங்கவும் மாட்டேன். என் செய் வேன்!''

''நிறைமதி நாளில் நடுக்கடல் அலை துள்ளி எழுவது போல என் உள்ளம் மகிழ வைத்தான். சொல்லிற்கு எட்டாத அமிழ்தத்தை என் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய் தான். கொடியேனாகிய எனது உடற் குடிசையில், இவ் விழிந்த உடம்பின் பகுதிகள் தோறும் இனிய தேனைப் பாய்ச்சினான். அமுத தாரைகளை என் எலும்புத் துளை தோறும் ஏற்றினான். உருகுகின்ற உள்ளத்தையே கொண்டு ஓர் உடம்பைச் செய்தது போல எனக்கு இன்பம் தேக்கெறி யும் யாக்கையை அமைத்தனன்'' — இவ்வாறு அவர் பாடும் பகுதி கொண்டு, உள்ளம் உருகும் திறத்தையும் அதற்கான காரணத்தையும் அறியலாம்.

செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து
உவாக் கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கு இறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்; கொடியேன் ஊன்தழைக்
குரம்பை தொறும் நாயுடலகத்தே
குரம்பு கொண்டு இன்தேன் பாய்த்தினன்; நிரம்பிய

அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்;

உள்ளம் கொண்டு ஓர் உருச்செய்தாங்கு உருகுவது
எனக்கு அள்ளூறு ஆக்கை அமைத்தனன் 3:168-177

எவ்வாறு இடையறா அன்பில் உருகுவதென்பதைப் போற்றித் திருவகவல் பேசுகிறது. உருகுமிடத்தை மட்டும் காண்போம்:

தழலது கண்ட மெழுகதுபோலத்
தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும் 4:60-62

கற்றா மனமெனக் கதறியும் பதறியும் 4:73

என்புநைந் துருகி, நெக்கு நெக்கு ஏங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதஎன்று அரற்றி
உரைதடு மாறி உரோமம் சிலிர்ப்பக்
கண்களி கூர நுண்துளி அரும்ப... 4:80-85

முதல் நான்கு நெடும் பாடல்களில் மட்டும் காணப் படும் இவ்வுருக்கம் பற்றிய மெய்ப்பாடுகள், 'உள்ளன்பால் நெக்குருகும் பாங்கினை நன்கு உணர்த்துவன. 'உள்ளங் கொண்டு உருச் செய்தாங்கு' என்பதே பின்பு 'உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய் உருகாதால், உடம்பெல் லாம் கண்ணாய்' என்று விரித்துக் கூறப்படுகிறது. யாக்கை யின் எலும்புத்துளை தோறும், மயிர்க்கால் தோறும் புகுந்து நின்று உருக்குவது, பின்பு ''ஆக்கை புரைபுரை கனியப் புகுந்து நின்று உருக்கி'' *(22:3)* என்று பேசப்படும். உள்ளம் உருகுதலும் பருகுதலும் தித்தித்து இனித்தலும் பல இடங் களில் பேசப்படுகின்றன. 'சித்தம் புகுந்து தித்திக்கவல்ல கோனை' *(9:15)*; 'நினைத்தொறும் காண்தொறும் பேசந்

தொறும் எப்போதும், அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்' *(10:3)*; பரிந்து உருக்கும் பாவகத் தால், சேல் ஏர் கண் நீர்மல்க *(11:14)*; 'பருகற்கு இனிய கடல்' *(11:15)*; 'தேன் தங்கித் தித்தித்து அமுதூறித் தான் தெளிந்து அங்கு, ஊன்தங்கி நின்றுருக்கும் *(16:2)* என இவ் வாறு வருமிடங்கள் மிகப் பலவாகும்.

இறைவனதருளைத் 'தழங்கரும் தேனன்ன தண்ணீர்' *(24:10)* என்றே உருவகித்துக் காட்டுவர். ஒலிக்கின்ற அரிய தேன் போன்ற தண்ணீரைத் தந்து, தம்மை உய்யக் கொள்ளு மாறு அவர் வேண்டுகிறார். தம்மைக் கண்ணால் பருகிய வனைத் தாமும் பருகி வேட்கை மீதூரப் பெற்று மேன் மேலும் பருக அவாவுகிறார். இடமும் காலமும் கருதித் திருச்சதகத்துள் மட்டும் வருகிற பகுதிகள் சில இவண் காணத்தகும்.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே! 5:1

இறைவனைத் தனித்து, ஒன்றுபட்டு, உடல் புள காங்கித்து - கண்ணீர் ததும்பி வெதும்பி - உள்ளம் பொய் தவிர்ந்து - தலைமேல் கைகுவித்து எப்படி வணங்க வேண் டும் என்ற இலக்கணம் சொல்வது போல் இருக்கிறது இக் கவிதை. கடவுளுக்குக் கைகளைத் தலைமேல் வைத்தும், தம்போலும் மாந்தர்களுக்கு மார்பில்நேரே வைத்தும் வணங்க வேண்டும் என்பர் பெரியோர். தம் உண்மை அன்பை

உணர்ந்து போற்ற வேண்டும் என்பார் 'உடையாய் என்னைக் கண்டு கொள்ளே' என்றார். கண்டு கொள்ளுதல் என்பது அரிய தொடர். ஒருவரைக் கண்டு கொள்ளுதல் என்றால் அவர் யாரென அறிந்து கொள்ளுதல் (to recognise) என்பதாகும். பொதுவாக நம் மேலுள்ளவர்கள், பணியில் தலைமையிலுள்ளவர்கள் கீழே வேலை பார்ப்பவர்களில் உண்மையானவர்கள் யார், திறமையானவர்கள் யார் எனக் கண்டு கொள்ள வேண்டும். ஒரு வகுப்பில் உள்ளவர்களில் திறமையான மாணவனை ஆசிரியர் கண்டு கொள்ள வேண் டும். அங்ஙனம் கண்டு கொண்டால், அங்ஙனம் கண்டு கொள்ளப்பட்டவனுக்கும் நன்மை உண்டு. கண்டு கொண்டவரும் சிறந்த ஆசிரியர் என்ற பாராட்டுக்குரியவர் ஆவார். ஓர் அலுவலகத்தில் திறமைமிக்க ஓர் எழுத்தர் வேலை பார்த்தால், அவருடைய திறமை, உடையவரால் - அதனை உடைமையாக உடையவர் அல்லது நிருவகிக்கும் உடைய வரால், கண்டு கொள்ளப்பட வேண்டும். அல்லாமல் எல் லோரையும் ஒரு மாதிரியாக நடத்தினால், திறமையுடைய வரின் திறமை கண்டு கொள்ளப்படாமலே ஒழியும்; உண்மையானவரின் தகுதி கண்டு கொள்ளப்படாது பய னற்றுப் போகும். பிறகு அங்கே திறமை, உண்மை வளரா மல், தொழிலே தேங்கிப் போகும். 'உடையாய் என்னைக் கண்டு கொள்ளே' என ஏங்குகிறார், மாணிக்கவாசகர். தம் உடையவனான இறைவன், அவர் தம் அடியானாகிய தமது உண்மை வழிபாட்டைக் கண்டு கொண்டு, தமக்கு அருள் செய்ய வேண்டும் என்ற வேண்டுதலோடு திருச்சதகம் தொடங்குகிறது.

இனி உருக்கம் பற்றித் திருச்சதகத்துள் மேலும் வரும் பகுதிகளைக் காண்போம். உருக்கம் உண்மை அன்பின் வெளிப்பாடென்பது திருவாசகம்.

இடையறா அன்பு உனக்குள்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் 5:11

ஊன் எலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் 5:19

இரும்பின் பாவை, அனையநான் பாடேன்நின்று ஆடேன்
அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன் 5:22

அமுதம் ஊறி, அகம் நெகவே புகுந்தாண்டான் 5:29

என்புருகிப் பாடுகின்றிலை 5:31

கருத்தினுட் கசிந்துணர்ந்து 5:35

ஆண்டவன் கழற்கு அன்பு
நெகுவ தாவதும் நித்தலும் அமுதொடு
தேனொடு பால் கட்டி
மிகுவதாவதும் 5:36

இனையன் பாவனை இரும்பு; கல்மனம்;
செவி இன்னதென்று அறியேனே 5:41

தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை 5:58

ஆகம் விண்டு, கம்பம் வந்து,
குஞ்சி அஞ்சலிக்கணே
ஆக என்கை; கண்கள் தாரை
ஆறதாக ஐயனே 5:72

ஒப்பனே உனக்குரிய அன்பரில்
உரியனாய், உனைப் பருக நின்றதோர் துப்பனே 5:98

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந்து உருகி நெக்குநெக்கு
ஆடவேண்டும் நான் 5:100

இங்ஙனம் உள்ளத்துள் எண்ணி உருகுதல், உருகிப் பாடுதல், நெக்குருகி ஆடுதல், அலறுதல் உலறுதல், ஊனெலாம் நின்றுருகல் போன்றவற்றைப் பக்தி மெய்ப்பாடுகளாகத் திருவாசகம் விளக்குகிறது. உள்ளம் உருகும் பெருங்காதல் உடையார் இறைவனை அடைதலையும் நெஞ்சுருகிக் கசியாதார் புழுக்கூடு காத்துக் கிடப்பதையும் முரண் சுவைபடக் கூறிப் பத்திமைக்கு உள்ளம் உருகுதலே பரிசெனப் பகர்கிறது ஒரு பாட்டு (5:56). எல்லாவற்றுக்கும் மேலாக, அன்பாலும் நன்றியுணர்வாலும் உள்ளம் உருகிப் பாடும் பாடலைப் பார்ப்போம்:

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
    பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மேலாகப்
    பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்று உச்சிஅளவும் நெஞ்சாய்
    உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்,
    கண்ணிணையும் மரமாம் தீவினையினேற்கே 3:25

உள்ளம் உருகுதலை வெளிப்படுத்துவது உடம்பே ஆகும். எனவே உடம்பு, கண், செவி, மயிர்க்கால், நரம்புத் துளை, குருதியோட்டம் போன்றவற்றைச் சுட்டியே உருக்கத்தைப் புனைகின்றார் மணிவாசகர். திருச்சதகத்துள் மட்டும் இவ்வாறெனில், நூலுள் பிற இடங்களிலும் இவ்வாறே உருகும் உணர்வு மேற்படக் காண்கிறோம். ‘ஆவியோடு ஆக்கை புரைபுரை கனியப் புகுந்துநின்று உருக்கிப் பொய் யிருள் கடிந்த மெய்ச்சுடரே’ (22:3) என்று மயிர்க்கால் தோறும் கனிந்துருகுதலைப் பல இடத்தும் குறிப்பிடுதல், இவர்தம் தனியியல்பாகும்.

நூல் முழுவதும் இங்ஙனம் இழையோடும் உருக்கத்தைப் படித்தோரே 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்ற வாசகத்தை உருவாக்கி இருக்க வேண்டும். சிவப்பிரகாசர், திருவாசகத்தைப் படித்தால், 'கருங்கல் மனமும் கரைந்துருகும்' என்றதும் இதனாலேயாம். திருவாசகத்தின் குறிக்கோள் வாசகங்களில் ஒன்று ''அழுதால் உன்னைப் பெறலாமே' என்பது *(5:90)* எவ்வாறு அழுதல்? எதற்காக அழுதல்? எப்போது அழுதல்? என்பனவே வாசகம் விவரிக்கும் உண்மைகளாகும். எத்தகைய பாவி ஆயினும் அழுதால் இறைவனைப் பெறலாம் என்பது குறிப்பு. தவற்றை உணர்ந்து அழுவதால் பாவம் கரைகிறது. அழுகை-நெகிழ்ச்சி ஆணவ மலத்தைப் பொடிப் பொடியாக்கிக் கரைக்கிறது. ஆணவ மலமும் ஏனையவும்அகன்றார்க்கு, இறையருள் கிட்டுதல் எளிதேயாம்.

| | |
|---|---|
| பத்தி வலையில் படுவோன் காண்க | 3:42 |
| யாவரும் பெறஉறும் ஈசன் காண்க | 3:55 |
| அவனருளாலே அவன்தாள் வணங்கி | 1:18 |
| அழுதால் உன்னைப் பெறலாமே | 5:90 |

என்பன மணிமந்திரங்கள் - மணிவாசகர் கூறும் மந்திரங்கள் அல்லது நிலைத்த உண்மைகள். ஈசனை எவர் வேண்டுமானாலும் அடையலாம்; எப்படி? அவன் அருளை முதலில் நாட வேண்டும். எவ்வாறு? அழுது கரைந்தால் அவனைப் பெறலாம். பொய் அழுகைக்கு அவன் ஏமாறுவதில்லை. மணிவாசகர் கூறுவது போன்ற, உடம்பெல்லாம் கண்ணாய் புரைபுரை கனிய, உருகி அழும் அழுகை, வேடத்தால் வர இயலாது. வாசகப் பாடல்களுள் உகுதல், நெகுதல், கரைதல், கசிதல், உணர்தல், பெருகல், பருகல், அலறுதல், உலறுதல், ஆடுதல், பாடுதல் என்பன போன்ற சொற்கள்

பல பொருளுணர்ச்சியோடும் சுவையோடும் ஆளப்பட்டுள்ள இடங்கள் நல்ல நல்ல சொற் சித்திரங்களாகும். அவற்றைப் படிக்கப் படிக்கப் படிக்கும் மனமும் சார்ந்ததன் வண்ணமாகிச் சார்பிலானைச் சாரும் எனில் மிகையாகாது.

பணம் செலவழித்துப் 'பரிகாரம்' செய்து, பாவ விமோசனம் பெறவும் கிரக தோசம் நீங்கவும் வழிகூறுவது வைதிகம். அது பரிகாரம் தராது என்பது சிவனியம். சிவனியப்படி அழவேண்டும்; வருந்த வேண்டும்; திருந்த வேண்டும். செய்த வினைப்பயனை நுகர்ந்தே தீர்க்க வேண்டும். தீமை செய்தவன் தப்பிக்க வழி கூறின், தீமைதானே வளரும்?

## ஞானநிலை

திருவாசகத்தில் மனத்தின் வளர்ச்சி நிலையையும் முதிர்ச்சி நிலையையும் காணலாம். அகப்போராட்டம், பிரிவு வேதனை, உலகச் சோதனை, மகிழ்ச்சி, ஆனந்தம், கூத்து, ஆடல்பாடல் இவ்வாறு வரும் பாடல்களில் உயிர் பக்குவப்படும் நிலைநோக்கி வளர்வதைக் காண்கிறோம். ஆயினும் இடையிடையே பக்குவத்தின் முதிர்ந்த முதிர்ச்சியை மாணிக்கவாசகர் வெளிப்படுத்தும் போது அயர்ந்து போகிறோம். எத்தகைய அரிய உண்மைகளை, எவ்வளவு எளிமையாக எடுத்து வைக்கிறார்.

முதல் நான்கு நெடும் பாடல்களும் முதிர்ச்சி பெற்ற ஞானநிலையின் வெளிப்பாடுகளே. 'ஆழ்ந்தகன்ற நுண்மையினைப்' பாடும் அவை, ஆழ்ந்தும் அகன்றும் நுட்பமாகவும் விளங்குகின்றன.

'நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே' என்பதற்கு ஏற்ப, அருட்காட்சியையும் அது காட்ட முயல்

கிறது. இவை நான்குமே இறைவனை — அருளை — ஆன்ம முயற்சியை நன்கு உணர்த்தி விடுகின்றன. இவற்றை ஒருபுறமும், ஏனைய திருவாசகப் பகுதிகளை ஒருபுறமும் வைத்து, ஒப்பிட்டு நோக்குவார்க்கு உண்மை விளங்கும்.

### *இறைவன் யார்?*

அருக்கனில் சோதி அமைத்தோன்; திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன்; மேதகு
காலின் ஊக்கம் கண்டோன்; நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்; வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்—என்றென்று
எனைப் பலகோடி, எனைப் பல பிறவும்
அனைத்தனைத்து அவ்வயின் அடைத்தோன் 3:20-28

நூலினுள் இறைவனைப் பல்வேறிடங்களில் ஐம்பூதங்களாகவே காண்பார் வாதவூரடிகள். 'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி, ஊனாகி உயிராகி' *(5:15)* என்று பாடுவார். அதற்கு என்ன காரணம் என்பது திருவண்டப் பகுதியில் விளங்குகிறது. ஐம்பெரும் பூதங்கட்கும் ஆற்றல்களை வழங்கியவன் அவன்; அவ் ஆற்றல்களாகவே விளங்குபவன் அவன். நிழலிலே கிடந்த நீரிலேதான் சுவை இருக்கும். 'நிழல் கனிந்த கனியே' என்பார் வள்ளலார். 'நீரும் நிழலது இனிதே' என்பது திருக்குறள் *(1309)*. ஓரடைமொழி கூடக் காரணத்துடன், நோக்குப்பட அமைந்திருப்பதை நுட்பமாகப் படித்தறியலாம்.

பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க! 1:7,8

இது வெற்றிக் கட்டியம் கூறுவது. இறைவன் ஒருவனே ஆயினும் அவன் ஆடிய திருவிளையாடல்கள் பல; அவன் அமர்ந்திருக்கும் திருத்தலங்கள் பல.

பூவண மதனில் பொலிந்தினி தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினிதருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும் 2:50-53

இது அடியார் பொருட்டுச் செய்யும் அற்புதச் செயல்களை விவரிப்பது.

புவனியில் சேவடி தீண்டினன் காண்க
சிவன்என யானும் தேறினன் காண்க
அவன்எனை ஆட்கொண்டருளினன் காண்க 3:61-63

இது சிவனைத் தாம் கண்டு, நமக்குக் காட்டும் முறைமை.

கூடலிலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக்கு ஆரமுது ஆனாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி! 91-95

இது தமிழ் அருச்சனை - ஏத்தி ஏத்தித் தொழும் போற்றிப் பாடல்! 'அருமையில் எளிய அழகே போற்றி' (126) என்பது வாசகத்திற்கும் பொருந்தும்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்ற மணிமந்திரம் திருவாசகம் தந்ததன்றோ? வேதம் அறியாத சிவன், தென்திசைக்கடவுளே. என்பது இது.

திருவாசகத்தை இலக்கியம், காப்பியம் எனலாம் என்ற சிறப்புப் பற்றியே சிவப்பிரகாசர் 'செய்யுள்' என்றார்.

முன்பு செய்யுள் என்பது இலக்கியத்தையே குறிக்கும். பத்திமைப் பாடல்களைத் தமிழ் மாலை, சொன் மாலை என்றனர். இந்நெடும் பாடல்களில், காப்பியப் பாங்குகள் பல இலங்குகின்றன. புராணக் கதைகள், காப்பிய உவமைகள், இன்ப மழை பொழியும் கடலாக உருவகித்தல் *(3:66)*, தேடியவர்கட்கு எல்லாம் ஒளிப்பவன் அன்பர்க்கு எளிதில் அகப்படல் *(3:124-162)*, கருவில் வளரும் போதும் பிறகும் எவ்வெவற்றில் எல்லாம் உயிர் உழன்று பிழைத்துத் தப்பித்து வருகிறதென்ற வரலாறு *(4:11-41)* என வரும் பகுதிகள் படித்து இன்புறற்பாலன. அவை அறிவை வளர்த்து, ஒளிகாட்டும் ஆற்றலுடையன.

தமக்குக் காட்சி தந்த இறைவன் திரும்ப வந்து அவ்வாறே வாவெனக் கூவி, அருள வேண்டும் எனப் பலகால் அழுதரற்றியவர் 'கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே' எனவும் 'அனைத்துலகும் தொழுந் தில்லை அம்பலத்தே, சிந்தனையைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அந்தமிலா ஆனந்தத்தைக் கண்டேன்' எனவும் பாடும் போது, மனநிறைவுற்ற தன்மையைக் காணுகிறோம். இறைவனை எங்கும் காணலாம் என்ற முதிர்ந்த பக்குவ நிலையை இவைகள் பகர்கின்றன.

இறுதிக் காலத்தில், இறைவன் பொன்னடியைச் சார விரும்பி, காலம் வந்தது எல்லோரும் வம்மின் என அழைக்கின்றார். யாத்திரைப்பத்து, அவருடைய ஆன்ம யாத்திரையின் முடிவைக் காட்டுகிறது.

பூவார் சென்னி மன்னனெம்
 புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து, உணர்வாய்
 உருக்கும் வெள்ளக் கருணையினால்

ஆஆஎன்னப் பட்டன்பாய்
ஆட்பட்டீர்! வந்து ஒருப்படுமின்!
போவோம் காலம் வந்ததுகாண்!
பொய்விட்டுடையான் கழல்புகவே! 45:1

அவருடைய திருப்படை எழுச்சியும் அவர் அண்டர் நாடு ஆளச்செல்லும் பெருமிதத்தையே எடுத்துக் காட்டு கிறது. அச்சோப்பத்து இக்காப்பியத்திற்குத் தொடக்கம் என்றால், திருப்படை எழுச்சி அதன் இறுதியாகத் தோற்று கிறது. சென்னிப்பத்து, அற்புதப்பத்து போல்வனவும் தொடக் கத்தை முன்பின்னாகச் சார்ந்தனவே. அதுபோலத் திருப் படையாட்சி போல்வன இறுதியை ஒட்டியனவாகப்படு கின்றன.

ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப் பறைஅறைமின்
மானமா ஏறும் ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே கடைக் கூழை சென்மின்கள்
அண்டர்நாடு ஆள்வோம் நாம் அல்லற்படை வாராமே 46:1,2

யாத்திரைப் பத்தும் திருப்படை எழுச்சியும் அடுத் தடுத்து இருப்பதும் இவ்வெண்ணத்தைத் தூண்டுகிறது. இறை வன் அருகிலேயே, திருச்சிற்றம்பலத்தில் திருமுன்னர் இருக்கும் சிறப்பைப் பெற்ற மாணிக்கவாசகர், இங்ஙனம் அண்டர்நாடு ஆள, 'ரதகஜ துரக பதாதிகளுடன்' செல்லும் காட்சி பெருமிதமுடையதாயிருக்கிறது!

### இறைவன் இலக்கணம்

அவர் வாக்கு இயல்பானது. எனவே அதில் உண்மை பொதிந்து கிடக்கக் காண்கிறோம். இறைவன் என்றுமுள்ள

வன் என்பதையும், என்றென்றும் இளமையானவன், பசுமை யானவன், இயற்கை போன்றவன் என்பதையும் அவர் இரண்டே அடிகளில் சொல்வது அழகாயிருக்கிறது.

முன்னைப் பழம்பொருட்கும்
முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும் அப் பெற்றியனே! 79

திருவெம்பாவை, திருவம்மானை போல்வனவும் அவர் ஞானநிலையை நன்கு வெளிப்படுத்துகின்றன.

இறைவன் தன்னையே தந்து, மணிவாசகரை ஆட் கொண்டான். இக்கொள்வினை கொடுப்பினையில் யாருக்கு இலாபம்? இறைவனுடன் மிக நெருங்கி உரையாடும் ஆளுடைய அடிகள், தம் சதுரப் பாட்டை உணர்த்தி மகிழ் வார் போல் பேசுகிறார். எங்கும் தம் அறிவின்மையையே மிகைப்படுத்திப் பேசும் அவர், இங்கே தம் அறிவுடை மையை ஒப்புக் கொள்வது நமக்கும் மகிழ்ச்சியைத் தரு கிறது. இந்தப் பரிமாற்றத்தில் இறைவனுக்குக் கிடைத்தது என்ன?

தந்ததுஉன் தன்னைக் கொண்டதுஎன் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தம்ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றது என்பால்?
சிந்தையே கோயில்கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறைஉறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான்இதற்கு இலனொர் கைம் மாறே 22:10

தன் ஆளுகைக்கு உட்பட்டவர்களைக் காப்பது அரச னின் கடமை. ஆருயிர்களைக் காப்பது இறைவனின்

கடமை. அவ்வகையில் ஓர் ஆன்மாவிடம் வெற்றி பெற்று, அதன் உடலிடம் கொண்டது இலாபம்தானே?

### இறைவனிடம் நாம் வேண்டுவதென்ன?

சாதாரண மக்கள் இறைவனிடம் ஏதேதோ வேண்டுகிறார்கள். பிள்ளைவரம் கேட்பவர்கள், திருமணம் கைகூட வேண்டுபவர்கள், செல்வ வளம் சிந்திப்பவர்கள் எனப் பலர் பரிபாடலில் கூட, இங்ஙனம் வேண்டுபவர்கள் பலரை நாம் காண்கிறோம். சிற்றின்பங்களையே — மிகச்சிறு சிறு நன்மைகளையே வேண்டுபவர்கள்தாம் மிகப்பலர். அவர்களுள் 'கடுவன் இளவெயினனார்' வேண்டுவது சற்று வித்தியாசமாக அமைந்து, நம் நெஞ்சம் கவர்கிறது.

யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள்இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே! (பரி.5)

செவ்வேளிடம் அவர் பொன் பொருள் போகத்தை வேண்டாமல் அவற்றுக்குப் பதிலாக அருள் அன்பு அறம் ஆகியவற்றை வேண்டுகிறார். இது பெருமிதம் மிக்க அவர் உள்ளத்தைக் காட்டுகிறது. மாணிக்கவாசகர் குழைத்த பத்தில் இன்னும் ஒருபடி மேலே போகிறார்.

வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே 33:6

இப்பாடலைப் பலமுறை படித்துப் பாருங்கள். உங்கள் நிலையோடு வைத்து எண்ணுங்கள். உலகில் எவ்வாறு வாழ வேண்டும் என்றும் சிந்தித்துப் பாருங்கள். ''யான் வேண்டத் தக்கது எதுவென்று உனக்குத்தான் தெரியும். பிள்ளைக்கு எது வேண்டும் என்பது முதலில் தாய்க்குத்தான் தெரியும். அங்ஙனம் வேண்டினால் வேண்டியதனைத்தையும் தருபவனும் நீயே. அதற்காக எதை வேண்டுமானாலும் கேட்கலாமா? வேண்டிப் பெறத்தக்கதை எனக்கு உணர்த்துபவனும் நீயே.''

எல்லோர்க்கும் வேண்டியதை அளிப்பவனும் அல்லன் இறைவன். அயனும் மாலும் வேண்டியதை இதுகாறும் பெற்றிலரே? நீயோ என்னை விரும்பிப் பணிகொண்டாய் — ஆட்படுத்திக் கொண்டாய். ''நீ யான் என்ன பெற வேண்டும் என்று கருதுகிறாயோ, அதையே நானும் கேட்க வேண்டும். நானாக ஒன்றைக் கேட்கக்கூடாது. அப்படியே யான் ஒன்றை வேண்டுமெனக் கேட்க வேண்டுமென்றால் அதுவும் உன் விருப்பப்படியேயாகும்.''

சரணாகதித் தத்துவத்தின் பல்வேறு சாயல்களையும் தன்மைகளையும் திருவாசகம் பல்வேறு முறைகளில் சொல்கிறது. அதில் இதுவும் ஒன்று. இறைவனின் அருளில் தோய்ந்தார்க்கு, வேண்டாமலே எல்லாம் கிடைக்கும். 'வேண்டாமை அன்ன விழுச்செல்வம்' பெற வழிகாட்டுகிறது திருவாசகம்.இதனை முற்றவுணர்ந்து கற்பார்க்கு, செல்வமும் நல்வாழ்வும் பேறும் இன்பமும் தானே கிடைக்கும் என்பதென்னவோ திண்ணம். அவர்கள் இப்படித் தம்மை ஒப்படைத்தால் போதும். வேண்டிக் கொண்டிருக்க வேண்டியதெதுவும் இல்லை. அத்தகைய மனப் பக்குவத்தை — ஞானநிலையை இது வெளிப்படுத்துகிறது.

4.9.

வாழ்வதும் வாழ்த்துவதும்

வாழ்த்துவது வாழ்வதற்குரிய வழிகளில் ஒன்று என்பதைப் பலர் உணர்வதில்லை. நல்ல மனம் துளிர்விட்டு வளரும். வாழ்த்தும் மனத்தில் ஈரப்பசை இருந்து கொண்டே இருக்கும். அச்செழிப்பான நிலத்தில் வாழ்வு தழைத்தோங்கும். தமிழில் வைதல்கூட, வாழ்த்தாக விளங்கும். 'நீ நல்லா இருக்க', 'அட அரசாளுவாய்' என்று திட்டுவார்கள். நிரம்பச் சீற்றம் வந்து விட்டால் 'நீ நல்ல இருப்பியா? விளங்குவியா?' என்று வினவுவார்களே தவிர, கெட்டுப்போ என்ற வார்த்தை வாயில் வருவதில்லை.

நாட்டை, மொழியை நாம் வாழ்த்துவதெல்லாம் நாம் வாழ்வதற்காக. அவற்றை வாழ்த்தி வளர்ப்பதுகூட நாம் வாழ்வதற்கேயாம். அவையின்றி நாம் வாழ முடியுமா என்ன? இறைவனை ஏன் வாழ்த்துகிறோம்? நாம் வாழ்த்தித் தானா இறைவன் வாழ வேண்டியிருக்கிறது? இல்லை. பிறகு ஏன் எனில், அதனால் நாம் பயனடைகிறோம்.

பெரியவர்களை, வள்ளல்களை வாழ்த்துகிறோம். ஏன்? அதனால் நாம் வாழலாம்; அவர்களின் அன்பைப் பெறலாம் என்றுதான். நம் மேலதிகாரி நம்மிடம் அன்பாய் இருக்கிறார் என்றால், உடனுள்ளவர்கள் எல்லாம் சலாம் போடுகிறார்கள். எனவே இறைவனை வானோர்களும் வாழ்த்துகிறார்கள், தாம் வாழ்வதற்காக. உலகியலைக் கொண்டே, மெய்யியலை விளக்கும் பாட்டு இது:

வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெலாம் தொழவேண்டிச்
சூழ்த்து மதுகரம் முரலும் தாரோயை நாயடியேன்
பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே 5:16

இவை எல்லாம் பயனை எதிர்பார்க்கும் அன்புகள். கண்ணப்பர் விவரம் தெரியாமல், இயல்பான பாசத்தால் ஈர்க்கப்பட்டதே, பயன் கருதாத அன்பு. 'கண்ணப்பன் ஒப்ப தோர் அன்பின்மை கண்டபின்' என்று ஒப்பிட்டுக் கூறக் காரணம் அதுவேயாகும். ''யானும் பிறப்பறுக்க வேண்டி உன்னைப் பரவுகின்றேன். எனவே நாங்கள் அனைவரும் ஏதோ ஒரு பயன் வேண்டித் தொழுகிறோம். அதை நல்கு தல் வேண்டும்'' என்பதே கருத்து. சூழ்த்து மதுகரம் தாரி லுள்ள பூக்களின் மேல் ரீங்காரம் இடுகிறது. சுற்றி வந்து வண்டு ஒலிக்கிறது ஏன்? அவ்விசையால் பூவுக்கு ஏதும் பய னுண்டா? இல்லை. இசை பாடுவது வண்டின் இயல்பு — அங்ஙனம் பறத்தலால் தேனுண்ண வாய்ப்பாகவுளது. மது கரம் என்ற, வடசொற்குத் தேனை ஈட்டுவது பொருள் என்ப. அச்சொல்லாட்சியும் விளியும் இவ்விடத்திற்குப் பொருத்த மாக உள்ளன. 'உன்னிடம் வண்டுகள்கூடப் பயன் கருதியே முரலுகின்றன' என்ற பொருள் தொனிக்கின்றதன்றோ?

வாழ்த்தின் உட்பொருளை உணர்த்தும் இப்பாட்டும் ஞானநிலையின் முதிர்ச்சியிற் பிறந்த **'மணி மந்திரமாகத்'** திகழ்கிறது.

**உள்ளத்தில் உறையும் ஞாயிறு**

இறைவன் மணிவாசகர் உள்ளத்துள் ஞாயிறாக நிற் கின்றான். அவன் அவரது தலையில் திருவடி சூட்டியதை 'இல்புகுந்ததாகவும்', 'உடலிடம் கொண்டதாகவும்', (22:5) 'சிந்தையுட் புகுந்ததாகவும்' திருவாசகம் பேசும். இறைவன் என்ற சொல் எங்கும் நீக்கமறத் தங்கியிருப்பவன் என்று பொருள்படும். அதனை விளக்குகிறது கோயில் திருப் பதிகம்:

இன்றெனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீ அலால் பிறிது மற்று இன்மை
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந்துறையுறை சிவனே
ஒன்றுநீ அல்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறியகிற் பாரே 22:7

உலகில் நீ இன்ன பொருளில் இருக்கின்றாய் என்று கூறமுடியவில்லை. நீ இல்லாத பொருளென்றும் எதுவுமில்லை. அவ்விறைவன் தம்பால் உறைந்து, தம் உள்ளத்துள் எழுகின்ற ஞாயிறு போலத் திகழ்தலால், அவர் இறைக் காட்சியை முழுதும் உணர்ந்து, சொல்ல முடியாத இறைமையையும் சொல்லில் வடித்துத் தர முயல்கிறார்.

தம் சிந்தையை இறைவன் தான் தங்குமிடமாகக் கொண்டதைப் பிறிதொரு பாடலிலும அழகாகக் கூறுகிறார்.

இன்பம் பெருக்கி,
இருளகற்றி, எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச்
சோதியாய்—அன்பமைத்து
சீர் ஆர் பெருந்துறையான்
என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான்
உவந்து 48:11

உள்ளத்துள் ஒளி உண்டாக வேண்டும். அதனால் துன்பம் நீங்கும், இருள் அகலும், அன்பு குடிபுகும். நம் சிந்தையை இடமாகக் கொண்டு இறைஒளி புக நாம் இடம் தர வேண்டும். அவ்வளவே!

**நிற்பார் நிற்க! நில்லோம் இனிநாம் செல்வோமே!**

ஓர் அமெரிக்கக் கவிஞன் - இராபர்ட் பிராஸ்டு கூறினான். 'ஓய்வு பெறுமுன் நெடுந் தொலைவைக் கடக்க வேண்டியுளது; நிழல் பொதிந்த பொதும்பரில் ஓய்வு பெற நினைக்கும் தன் மனத்திடம் நெடுந் தொலைவைக் கடக்க வேண்டியுளது' என்று, (Many miles to go before I Sleep, Many miles to go before I Sleep) வாழ்வில் ஆற்ற வேண்டிய கடமைகள் மேலும் பலவுள என்பதைக் குறியீடாக அவன் அப்படிக் கூறினான்.

யாத்திரைப் பத்து என்ற பதிகம் ஆன்ம யாத்திரை பற்றியது. இன்று பழனி யாத்திரை போகிறோம் அல்லவா? அதையே எடுத்துக் கொள்ளுங்கள். திரும்பிப் பாராமல், திகைக்காமல், கருமமே கண்ணாக நடப்பவர்தாம் பழனியைச் சென்று அடைய முடியும்; குறிக்கோளை எய்த முடியும்.

அதிலுள்ள அழகான பாட்டு இது:

நிற்பார் நிற்க நில்லா உலகில்
நில்லோம், இனிநாம், சொல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே!
நிற்பீர் எல்லாம் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்!!
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
பெறுதற்கு அரியன் பெருமானே! 45:7

நிலையில்லா உலகில் நிற்பவர்கள் நிற்கட்டும், நாம் இனிப் பொன்னை ஒத்த திருமேனியையுடைய புயங்கப் பெருமான் திருவடியை அடையவே செல்வோமாக! நிற்க நினைப்பவரெல்லாம், விரைந்து சென்று அவன் திருவடி

களில் நிற்கும் பரிசையே நினைமின்கள்! பிறகு நின்று, காலம் தாழ்த்துக் கண்களைப் பிறழ விழிப்பதால் பயனில்லை! காலம் தாழ்த்தால் எம்பெருமான் பெறுதற்கரியன் ஆகி விடுவான்!

உலகியலில் ஒரு தொழிலைத் தொடங்குவார் கூட இடையறாது முயல வேண்டும். 'நில்லோம் இனி நாம் செல்வோமே' என்று குறிக்கோளை நோக்கி முயன்றபடி இருக்க வேண்டும். குறிக்கோளைச் சென்று அடைந்த பிறகுதான் நிற்க ஒருப்பட வேண்டும். அல்லாமல் காலம் தாழ்த் தினால் மற்றவர்கள் முன்னேறி விடுவார்கள். நாம் மிகவும் பிற்பட்டு விடுவோம். 'பிற்பட்டு நின்று பேழ் கணித்தால் பெறுதற்கு அரியன் பெருமானே', அல்லவா?

இங்ஙனம் மணிவாசகரின் கருத்துக்கள் பல சிறந்த உலகியல் உண்மைகளாகவும், ஆழ்ந்து நோக்குவார்க்கு மெய்யியல் உண்மைகளாகவும் விளங்குகின்றன.

**மூலபண்டாரம் திறக்கப்பட்டுள்ளது கருவூலத்திற்குள் புக முந்துங்கள்! பேரின்பச் செல்வத்தைப் பெறுங்கள்!**

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதே சிறப்புக்குரிய செயல். திருவாசகம் மாணிக்கவாசகரால் தமது ஆன்ம உய்வுக்காக மட்டும் எழுதப்பட்டதன்று. உலகில் பிறந்த ஒவ்வோருயிரும் உய்தியடையுமாறு அவர் மெய்ந் நெறி காட்டியுள்ளார். தம் அனுபவத்தை உலகப் பொது அனுபவமாகக் கூறுதல், இறைமை இயல்பை உலகிற்கு உணர்த்த முற்படுதல், இறைவனின் பெருமை பகர்தல், மக்க ளின் நாட்டுப்புறப் பாடல்களில் வைத்து மெய்ப் பொருளைப் பாடுதல் எல்லாம் உலகிற்காக அவர் வழி காட்டினார் என்பதைத் தானே உணர்த்துகின்றன. அதனால்தான் அவர் இறைவன் மூலபண்டாரத்தை வழங்குகின்றான் — கரு

வூல நிதியத்தை — பேரின்பச் செல்வத்தை அள்ளித் தருகி றான். அன்புடையார் எல்லோரும் முந்துங்கள் என்று அழைக்கிறார்.

காலம் உண்டாகவே காதல்செய்து உய்ம்மின் கருதரிய
ஞாலம் உண்டானொரு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப் பிரான்தன்
அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே 36:5

இறைவன் மாணிக்கவாசகரைக் கூவி அழைத்துப் பணி கொண்டார்; மாணிக்கவாசகரோ அன்பராவார் அனை வரையும் கூவி அழைத்து, பேரின்பச் செல்வத்தை வாரி எடுத்துக் கொள்ள அழைக்கின்றார்.

'காலம் உண்டாகவே காதல் செய்து உய்ம்மின்!' என்ற வாசகம் கருதத்தக்கது. நாட்கடத்தாமல், நன்றாக இருக்கும் போதே இறைவனிடம் காதல் செய்து உய்யுமாறு நெறிப் படுத்துகிறார்.

அவனோ ஆலம்—நஞ்சினை உண்டான். உயிர்களுக் காகத்தான் நஞ்சினை உண்டவன், இப்போது அடியவர் களுக்கு 'மூல பண்டாரம்' — கருவூலம் திறந்து, பொன்னை வாரி வழங்குகின்றான். திருமாலும் நான்முகனும் தேவர் களும் நண்ணுதற்கரியவன் ஆயினும் தன் அடியவர்க்கு எளிய வனாய் இவ்வாறு வழங்குகிறான்.

அப்பேரின்பச் செல்வத்தைத் தாம் மட்டும் அடைய நினையாது, எல்லோர்க்கும் பயன்படுக என முரசறைவது போல் முழக்கும் அவருடைய பரந்தமனம் பாராட்டுக் குரியது.

நவமாய செஞ்சுடர் நல்குதலும் தாம் ஒழிந்து, சிவ மான மணிவாசகர், நம்மையும் சிவமாக்க முயலும்

செம்மையை உணர்ந்து தெள்ளேணம் கொட்டலாம் போல் தோன்றுகிறது.

பார்பாடும் பாதாளர் பாடும் விண்ணோர் தம் பாடும்
ஆர்பாடும் சாரா வழியருளி ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ 11:13

## முடிப்புரை

இதுகாறும் கூறியவற்றிலிருந்து பெறப்படும் சில அடிப்படை முடிபுகள் மட்டும் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன:

1. திருவாசகம் ஒரு சில தன் வரலாற்று நிகழ்ச்சிகளின் தொகுப்பு — அந்நிகழ்ச்சிகள் வரிசைப்படி தரப்படவில்லை. எனினும் முன்பின்னாகவுள்ள, அந்நிகழ்வுகளை தலைப்புக்களின் அடிப்படையில் பகுத்தும் தொகுத்தும் இயைபுபடுத்தும் காண வாய்ப்பிருக்கிறது.

2. ஒரு சில நிகழ்ச்சிகள் போல, ஒருசில மனவுணர்வுகளே திருவாசகத்தில் பேராட்சி புரிகின்றன. இந்நிகழ்ச்சிகளும் உணர்வுகளும் மெய்ப்பாடுகளும் உடலுள் உயிர் போல நூல் முழுவதும் — பாடல் தோறும் விரவிக் கிடக்கின்றன. ஒரு பகுதியில் ஓரிடத்தில் காணப்படும் ஒருணர்வு, ஒரு சொல், ஓர் அடைமொழி, ஒரு தொடர் பிறிதொரு பகுதியில் பிறிதோரிடத்தில் அவ்வாறே காணப்படுதல் திருவாசகத்தின் இயல்பாகும். இதுவே அதற்குக் காப்பியப் பார்வை தருகிறது.

3. திருவாசகம் சிறந்த இலக்கியமாகவுள்ளது. இலக்கிய உத்திகள் மெய்யியல் விளக்கத்திற்குப் பயன்படுவதை

இந்நூலில் பரக்கக் காணலாம். 'நோக்கு' என்ற கோட்பாடு, இதற்கு மிகவும் பொருந்தி வருகிறது. நூல் முழுவதும் பாவிகம் அமைந்து, உணர்வு இழை ஓடி, தனிப் பகுதிகளின் தொகுப்பாகாமல், சிலப்பதிகாரக் காதைகள் போல் ஆகிறது.

4. தன் அனுபவத்தை உலகப் பொது அனுபவமாக்கித் தரும் செவ்வியல் பாங்குடையது இது. அதனால், மாணிக்கவாசகரின் அனுபவம் யாவும், ஆன்ம அனுபவமாய் மாறி ஒவ்வோர் உயிர்க்கும் வழிகாட்டியாகிறது.

5. ஆன்ம ஈடேற்றமே திருவாசகக் குறிக்கோள். வேண்டாமைக்கே இட்டுச் செல்லும் மணிவாசகம், விழுச் செல்வம் தரும் பெருந்துணையாகும்.

6. காட்சி, பிரிவு, வேட்கை, ஞானம் என்ற நான்கு உணர்வுக் கூறுகள் இந்நூலில் ஆட்சி செய்கின்றன. இவை தனித்தும், இணைந்தும் செயற்படுவதைப் பாடல்கள் தோறும் காணலாம். அகமரபுப்படி கூடலும் கூடல் நிமித்தமுமான பாடல்கள் மிகப்பல உள. ஊடுதல், இருத்தல், இரங்கல் பற்றியனவாகவும் பகுக்க வாய்ப்புளது.

அஞ்ஞானத்தை அகற்றும் இஞ்'ஞான நாடகம்' சுவையும் சுறுசுறுப்பும் உடையதாகப் படைக்கப்பட்டுள்ளமையே, அதன் என்றும் மாறாத செல்வாக்குக்குக் காரணமாகும் பதிகங்களையும், பாடல்களையும் மட்டும் கொண்டு நோக்கும் பொழுது, இது உள்ளத்தை நெகிழ்வித்துக் கண்ணீரை வரவழைக்கும் பேரவல நாடகமாகும்.

# 3. பொய்யடிமை இல்லாத புலவர்

## 1

'பொய்யடிமை இல்லாத புலவர்' என்பது திருத் தொண்டத் தொகை. இது யாரைக் குறிக்கிறது?

சங்கப் புலவர்களைக் குறித்தால் 'அடிமை' என்ற சொல் லாட்சி ஏன்? முன் இயலில், திருவாசகத்தில் 'பொய்ம்மை யுடன் ஒரு போராட்டம்' நடப்பது சுட்டிக் காட்டப்பட்டது. மாணிக்கவாசகர், திருப்பெருந்துறையில் குருமணியுடன் மறைந்த அடியார்கள் அனைவரையும் மெய்யடியார்கள் என்றும் தம்மை மட்டும் 'பொய்யனேன்' என்றும் கூறிக் கொள்ளுதல் சுட்டப்பட்டது.

உண்மையில் பொய்ம்மை என்பது எதுவும் இல்லை யென்றும், வாதவூரர் முற்றிலும் தம்மை இழந்த நிலையி லேயே, சிவன் செயலாகச் செயற்பட்டார் என்றும் ஆதலால் அவரைக் குறைகூற இயலாதென்றும் முன்பு நிறுவப் பட்டது. இருந்தும் உலகின் பழிப்புக்கு ஆளான அவர், தான் பித்தன் ஆனது பற்றியும் அடியார் எல்லாம் இறை யருளில் கலக்கத் தாமும் பொய்யும் புறம் போந்தது பற்றி யும் பாடுவன எடுத்துக்காட்டப்பட்டன.

பழவடியார் தொகுதியைக் குறிப்பிடல் 'அவரெல் லாம் உடன் மறைந்த விதங்களைக் குறிப்பிடல், தாம் உடன் சென்று வானுலகம் புகாமைக்கு வருந்துதல்' எனத் திரு வாசகத்துள் 'தன் வரலாறாக' வரும் செய்திகள் நன்கு எடுத்துக்காட்டப்பட்டன.

இந்நிலையில் 'பொய்யடிமை இல்லாத புலவர்' என்பது யாரைக் குறிக்கும் என எண்ணினால், உண்மையில் மெய்யடியாராய், உலகோரால் தவறாகப் பொய்யர் எனப் பழிக்கப்பட்டவரையே குறித்தல் கூடும். ஏனெனில் அவரையே பொய்யடிமை இல்லாத புலவர் என வற்புறுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது.

## 2

ஆனால் திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பி, இதை விளக்கிக் கூறியிருப்பது பொருந்துமா?

அவர் கூற்றுப் பொருந்தாதென்றே தோற்றுகிறது.

தரணியில் பொய்ம்மை இலாத் தமிழ்ச்
சங்கமதில் கபிலர்
பரணர் நக்கீரர் முதல்நாற்பத்
தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயும் திருவாலவாய்
அரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல
பாடும் புலவர்களே 49

இவ்வாறு அந்தாதியில் நம்பி கூறியிருப்பது எவ்வாறு பொருந்தும்?

சிவன் வழிபாடு சங்க காலத்தில் இருந்ததுண்மையே. ஆயின் அரன் சேவடியை நாற்பத்தொன்பது சங்கப் புலவரும் பாடினர் என்பது பிற்காலப் புராணக் கதைகளின்படி சரியே தவிர, சமூக இயல்படியும் வரலாற்றின்படியும் கிடைத்துள்ள இலக்கியங்களின் படியும் முறையாகுமா?

கபிலர், பரணர், நக்கீரர் சிவனைப் பாடிய பாடல்கள் யாவை? கதைகளேனும் முழுமையாக உளவா?

பொய் கூறாத புலவர் என்றால் பொருந்தும். 'பொய்யாச் செந்நா', 'பொய் கூறேன், மெய் கூறுவல்' போன்ற தொடர் களால் பொய்யறியாப் புலவர் எனலாம். பொய்யடிமை இல்லாத என்ற சமயவழிப்பட்ட சொல் சங்கப் புலவர் களுக்குப் பொருந்துமா?

திருப்பண்ணியர் விருத்தத்தில் நம்பி,

வருவா சகத்தினில் முற்றுணர்ந்
தோனை, வண்தில்லை மன்னைத்
திருவாத வூர்ச் சிவ பாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தரு திருக்கோவை கண்—
டேயும் மற்று அப்பொருளைத்
தெருளாத உள்ளத்தவர் கவி
பாடிச் சிரிப்பிப்பரே 58

என்று கூறுகிறார். திருவாதவூர்ச் சிவபாத்தியரைப் பற்றியும் அவர் செய்த, திருக்கோவையார் பற்றியும் தெரிந்திருந்த அவர் 'வரு வாசகத்தினால் முற்றுணர்ந்தோனை' என்று திருவாசகம் பற்றித் தெளிவின்றிக் குறிப்பிடுகிறார். சோழ நாட்டவரான நம்பிக்கும், பின்வந்த சேக்கிழாருக்கும் பாண்டி நாட்டு நாயன்மார் பற்றித் தெளிவாகத் தெரியாமல் போய்விட்டது என்றுதான் கருத வேண்டியுளது. பொய்யடிமை இல்லாத புலவர் என்ற பெயர், ஏதோ ஒரு காரணத்தால், திருவாத வூர்ச் சிவபாத்தியனையே குறிக்கும் என்பது நம்பிக்குத் தெரிந்திலது. அதனால் பொய்யடிமை இல்லாத என்றதும், வரலாற்றுக்கும் உண்மைக்கும் புறம்பாக அவர் சங்கப் புலவர் எனக் கூறிவிட்டார்.

## 3

திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாருக்கும், நெடும் சேய்மையில் வாழ்ந்த பாண்டிய நாட்டு நாயன் மாரைப் பற்றி விரிவாகத் தெரியாமல் போய்விட்டது. ஆனாலும் அவர் நல்ல வேளையாக நம்பியின் அந்தாதியை அடிப்படையாக வைத்துக் கொண்டு, கபிலர் பரணர் நக்கீரர் ஆகியவர்கள் மீது புராணம் எழுதி விரிக்காமல் விடுத்தார். அவருக்கே, இந்த இடத்தில் 'அந்தாதி'யில் ஐயப்பாடு இருந்தது என்பதைத்தான் இது காட்டுகிறது. அதனால்தான் அவர் சற்றும் அந்தாதி வயப்படாமல், தாம் அறிந்த, கூடிய வரை உண்மை எனக்கூடிய செய்திகளை மட்டும் கூறிச் செல்கிறார்.

செய்யுள்நிகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பல நோக்கும்
மெய்யுணர்வின் பயன்இதுவே எனத்துணிந்து
விளங்கிடுஒளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை இல்லாத புலவர் எனப் புகழ்மிக்கார்

பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய்யடிமை உடையவராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்?

தமிழ்ச் சங்கம் பற்றியோ, கபிலர் பரணர் நக்கீரர் பற்றியோ ஒருசொற்கூட இன்மை தெளிக. சங்கப் புலவ ருக்குத் தொடர்பின்மையை இவர் நன்கறிந்திருந்தார் என்பது உறுதிப்படுகிறது. 'மற்று அவர்தம் பெருமை அறிந்துரைக்க வல்லார் யார்?' எனக் கேட்பதிலிருந்து, அவருக்கு விவரம் தெரியாமையே புராணம் விரியாமைக்குக் காரணம் என் றும் புலனாகிறது.

ஒன்று மட்டும் உண்மை. சேக்கிழார் மிக முயன்று, தாம் உண்மை என அறிந்ததை மட்டும் சுருங்கக் கூறி, நம்பி செய்த தவற்றைச் செய்யாது விட்டு விடுகிறார். செய்யுள் (இலக்கியம்) எனப் போற்றுதல்; செவ்வியநூல் எனல், பல நோக்கு உடையதெனல்; மெய்யுணர்வின் பயன் எனத் துணிந்து, மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளாதல், அரவாரும் புரிசடையாருக்கன்றி வாய்திறவாப் பெற்றிமை உடையராதல் போல்வன செவிவழியாக ஓரளவேனும் திருவாதவூரரைப் பற்றிக் கேள்விப்பட்டுப் பாடியன என்பதை மெய்ப்பிக்கின்றன.

## 4

சிவப்பிரகாசர் தமது நான்மணி மாலையில்,

நலம்மலி வாதவூர் நல்லிசைப் புலவ!
... ... ... ...
ஆயினும் தன்னை நீபுகழ்ந்துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன் அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி அறியா என்பு அணிவோனே

என்று மாணிக்கவாசகரைப் போற்றுகிறார். சேக்கிழார் வழியில் புலவர், செய்யுள் என்ற சொல்லாட்சிகளைத் தரும் பாங்கு, சேக்கிழார் மணிவாசகரை உளங்கொண்டு தமது பாடல்களைப் பாடினார் என இவர் நம்பியதாக நமக்கு விளக்குகின்றன.

எனவே, 'பொய்யடிமை இல்லாத புலவர்' எனப் பன்மையால் குறிக்கப்படுவார், உண்மையிலேயே யாராக இருக்கக்கூடும்?

இதில் ஐயப்பாடு கிளப்பப்பட்டு, விடை தேடப்படுகிறதே தவிர, முடிந்த முடிபாக எதுவும் கூறப்படவில்லை.

## 5

மறைமலை அடிகளார் இத்தொடர் மாணிக்க வாசகரையே குறிக்குமென்பர். மாணிக்கவாசகப் பெரு மான் வடக்கிருந்து வந்த வீரசைவ மரபிற்கு உரியவர் என்றும் அம்மரபினரால் தலைமையாசிரியராக வைத்துப் போற்றப் பட்டு வந்தவர் என்றும் தமிழ் நாட்டுச் சைவ சமய மரபின ரான சுந்தரர் அவர் பெயரை வெளிப்படக் கிளந்து கூறாது, அவரை இங்ஙனம் 'பொய்யடிமை இல்லாத புலவர்' எனக் குறிப்பால் ஓதிப் போயினர் என்றும் மறைமலையடிகள் விளக்கிச் சென்றுள்ளார்.

க. வெள்ளைவாரணனார் தம் பன்னிரு திருமுறை வர லாற்றில் இதை மறுக்கின்றார். ''பொய்யடிமை இல்லாத புலவர் எனத் திருத்தொண்டத் தொகையில் போற்றப் பெற்ற வர் மறைமலை அடிகள் முதலியோர் கருதுமாறு தனியடி யாராகிய ஒருவரல்லர். மெய்ம்மை நெறிநின்று இறை வனைப் போற்றிப் பரவும் பெருங் கூட்டத்தினராகிய பலரையும் இத்தொடர் குறித்து நிற்பதென்னும் உண் மையைத் திருத்தொண்டத் தொகைக்கு வகை நூலாகத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பி களும் விரிநூலாகத் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழா ரடிகளும் தெளிவாகக் கூறியுள்ளார்கள். குடந்தை நகருக்கு அருகே இப்பொழுது தாராசுரமென மருவி வழங்கும் இராச ராசேச்சுரத் திருக்கோயிலில் சோழ மன்னரால் அமைக்கப் பட்ட திருத்தொண்டத் தொகையடியார்களைக் குறிக்கும் சிற்பங்களில் பொய்யடிமை இல்லாத புலவரைக் குறித்த சிற்பத்தில் அடியார் பலர் குறிக்கப்பட்டிருத்தலைக் காண்கி றோம். ஆதலால் பொய்யடிமை இல்லாத புலவர் என்னுந் தொடர் தனியடியார் ஒருவரைக் குறித்ததன்று என்பதும் தொகை அடியார்களையே குறித்ததென்பதும் நன்கு தெளியப்

படும்... சுந்தரர் காலம் முதல் இன்றுவரை பொய்யடிமை இல்லாத புலவரைத் தொகையடியாராக வைத்து வழிபட்டு வரும் தொன்னெறி வழக்கிற்கும் இது முரண்படுகிறது. அன்றியும் பாண்டி நாட்டுத் திருவாதவூரில் பிறந்தருளிச் சைவ சித்தாந்த மெய்ந்நூல் இலக்கியமாகத் திகழும் திரு வாசகச் செழுமறையைத் திருவாய் மலர்ந்தருளிய மணி வாசகப் பெருமானை வடக்கிருந்து வந்த வீரசைவ மரபினர் எனத் துணிந்து கூறுதல் சிறிதும் ஏற்புடையதன்றாம்,'' என்று அவர் வற்புறுத்துகின்றமை அறியற்பாலது.[1]

## 6

திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் வரலாறு மிகவும் விவாதத்திற்குரிய பல நிகழ்ச்சிகளைக் கொண்டது. கண்ணகி யின் கதை போன்று கண்ணீரை வரவழைக்கும் தன்மை யுடையது. மக்களிடையே பல காலமாக இவை பலவாறு காது, மூக்கு வைத்தும் சிக்கலுக்குரிய பல செய்திகட்குச் சமா தானம் தேடும் முறையிலுமாக வளர்ந்து புராணமாகி யிருக்க வேண்டும். கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதி யில் வாழ்ந்த மாணிக்கவாசகரை, அடுத்து வந்த சுந்தரர் சுட்டாது விட்டாரா, தொகையடியாராகக் குறித்தாரா, விரிவாகக் கூறுமாறு அடிப்படையான வாழ்க்கைக் குறிப் பொன்றை — மற்ற அடியார்களுக்குக் குறித்தது போல் இவ ருக்குக் குறிக்காத காரணம் என்ன என்பன போன்ற வினாக்கள் புதிர்களாக எதிர் நிற்கின்றன.

சேக்கிழார் மாணிக்கவாசகப் பெருமான் வரலாற்றை ஏன் விரிவாகக் கூறாது விடுத்தார். நான்கு தலைமை வாய்ந்த நாயன்மார்களில் அவர் ஒருவராயிற்றே? அவர் வாழ்ந்த

---

1. பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பாகம், அண்ணா மலைப் பல்கலைக்கழகம், 1969, பக். 86,87.

பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை திருவாசகத்தின் பெருமை உலகோரால் அறியப் படாதிருந்ததா? இவ்வினா வும் விடையிறுக்க வேண்டிய ஒன்றாக இன்றளவும் நிற் கிறது. முற்கூறியபடி, பாண்டிய நாட்டு நாயன்மார் பற்றித் தெளிவாகத் தெரியாததால் நடுநாடு, சோழ நாடுகளைச் சேர்ந்த இப்பெரியவர்கள் அவர்களைப் பற்றி முறைப்படி எழுதாது போயிருக்கக் கூடும்.

மதுரைத் தலத்தின் பெருமை பேசும் திருவிளை யாடல் புராணம் போன்றவை மட்டுமே மாணிக்கவாசகர் வரலாற்றைப் பல பகுதிகளாக விரித்துரைக்கின்றன. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த செல்லி நகர்ப் பெரும் பற்றப் புலியூர் நம்பி பாடிய திருவாலவாயுடையார் திருவிளை யாடற் புராணம், கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ் சோதி முனிவர் பாடிய திருவிளையாடல் புராணம், இவர் கட்குப் பின்வந்த கடவுள் மாமுனிவர் பாடிய திருவாத வூரடிகள் புராணம், தலபுராணங்களான திருவுத்தரகோச மங்கைப் புராணம் கடம்பவன புராணம் திருப்பெருந் துறைப் புராணம் போன்றவை யாவும் மாணிக்கவாசகர் வர லாற்றைப் பல்வேறு விதமாகப் பல்வேறு நிகழ்ச்சிகளில் வைத்து விளக்குகின்றன. இவை மாணிக்கவாசகர் காலத் திற்கு மிகவும் பிற்பட்டவையாதலின் மக்களிடையே வழங் கிய கதைகளையும் திருவாசகத்தில் காணப்படும் குறிப்புக் களையும் வைத்துக் கொண்டு தத்தம் கற்பனைகளையும் கூட்டிக் குழைத்து இந்நூலாசிரியர்கள் தாமெழுதிய புராணங் களை விரித்துள்ளனர்.

நீ. கந்தசாமிப் பிள்ளை தம் திருவாசகப் பதிப்பில், ''திரு வாசக அமைப்பும் அழகும்'' என்ற கட்டுரையின்கண் கீழ்வரு மாறு குறிப்பிடுகின்றார்: ''திணிந்த இருளில் கட்டுண்டு கிடக்கும் ஓர் ஆன்மா, பேர் ஒளியைத் தேடிச் செல்லுங்கால்

4.10.

தோன்றும் பலவகையான நிகழ்ச்சிகளையும் தெள்ளும் ஓசைத் திருப்பதிகங்களால் எடுத்தோதும் இத்தெய்வக் கவிதை. திருவாதவூரடிகள் தன் வரலாற்றைத் தானே எழுதிய ஞான வரலாறாகத் திகழ்கின்றது. பல வகையான தளைகளால் கட்டுப்பட்டு அறியாமையாகிய திணிந்த காரிருளுள் முழுகிப் போக்கிடங் காணாது, திகைத்து நின்ற ஓர் ஆன்மா, திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையில் செழு மலர்க் குருந்தம் மேவிய பேரருள் ஒளிப்பிழம்பின் வழி வந்த ஒரு தெய்வ நிகழ்ச்சியே இந்த ஞானவரலாற்றின் தோற்றுவாயாகும். இந்நிகழ்ச்சியை, அடிகள்தான் உணர்ந்த வாறே குறிப்பிடும் உண்மை, இக்காலத் தன் வரலாற்று நூல்களின் (Auto-biography) முறைப்படியே அமைந் துள்ளது.''[1]

நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் கூற்று, திருவாசகத் திற்கு ஓர் அடிப்படையான நல் விளக்கமாகும். ஒருசிறந்த கவிதை நூல், செவ்விய இலக்கியமாக மதிக்கப்பட வேண்டு மேல், தன் அனுபவத்தைத் தன் சொந்த அனுபவமாகவே கூறாமல் உலகப் பொது அனுபவமாகப் பொதுமைப் படுத்திக் கூறவேண்டும். வாதவூரடிகளின் இத் தன் வரலாறு, இங்ஙனம் பொதுமைப்படுத்தியும் கூறுவதால் அவர்தம் வரலாற்றை முழுவதும் வெளிப்படையாக அறிய வாய்ப் பில்லை. ஓர் இழப்புப் பிறிதொன்றற்கு ஈடாகி நின்று அவ் விழப்பை நிறைவிக்கின்றது. இருளில் கட்டுண்டு கிடக்கும் ஆன்மா ஒளியைத் தேடிச் செல்லும் போது ஏற்படும் அனு பவங்களையும் அறியாமையாகிய காரிருளில் மூழ்கிப் போக்கிடங் காணாது திகைத்து நின்ற ஓர் ஆன்மா பேரருள் ஒளிப்பிழம்பு ஒன்றை ஞானாசிரியனாக அடையப் பெற்று உய்தியடைந்த ஞான வரலாற்றையும் கூறுவதாக அமை

1. திருவாசகம் - முற்பகுதி, அ-பல்கலைக்கழகம், 1964, பக். 66,67.

வதால், இன்று திருவாசகம் ஆன்மாவுடைய ஒவ்வொரு வர்க்கும் உரிய நூலாகி நின்று அனைத்துயிர்களையும் உய் விக்கின்றது. மாணிக்கவாசகர் தம் வரலாற்றை — வெளிப் படத் தற்குறிப்போடு சொல்லியிருந்தால், அவர் வரலாறு மட்டுமே எஞ்சி நின்றிருக்கும். ஒவ்வோர் ஆன்மாவும் உய்தி தேடும் வரலாற்றைக் கூறுவதாக அமைந்தமை பெரிதும் பயனுடையதாகும். வாதவூரடிகள் இங்ஙனம் தற்சார் பின்றிப் பொருட்சார்பு பட்டமையாலன்றோ, மாணிக்க வாசகரானார் என்பது மனங்கொளத்தக்கது.

எனினும் அவரது வரலாற்றை அறிய விரும்பும் நாம் மேலும் சற்றுத் துருவிப் பார்த்தலில் தவறின்று. திருவாத வூரரைப் பற்றிய இயற்பெயர் உட்பட அனைத்தும் தக்க அடிப்படை ஆதாரங்கள் உடையவை அல்ல என்பதும் அனைத்தும் புராணக் கதைகள் வழிவந்தவை என்றும் முற் கூறிய நூலில் நீ. கந்தசாமிப் பிள்ளை கூறுகிறார். மேலும் இலக்கியம் ஒரு தனித்தகுதி உடையது; செவி வழக்காக வந்த வற்றை மிகைப்படுத்தியும் உருவகப்படுத்தியும் தெய்வீக நிகழ்ச்சிகள் பலவற்றைக் கற்பனை செய்து புகுத்தியும் தொன்று தொட்டு வரும் கருத்துக்களையும் வரலாற்றுச் செய்தி களையும் கொள்கைகளையும் இடையிடையே பின்னியும் எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்றம் கற்பிப்பதற்காக, காலங் கடந்த இதிகாச மாந்தருடனும் தெய்வங்கள் முனி வர்களுடனும் பெருவழக்கிலுள்ள பழஞ்செய்திகளுடனும் தொடர்புபடுத்தியும் மக்களின் அறிவு, இச்சை, செயல் களை வளம்படுத்தி நல்வழிப் படுத்துவதற்காகப் பல உண்மை களையும் வாழ்க்கை வழிகளையும் கதைகள்மூலமாகவும் வற்புறுத்திக் கூறும் நல்லுரைகள் மூலமாகவும் புராணம் இயற்றியோர் கொள்கைகள் அவர்கள் காலத்தின் கருத் துக்கள் நிகழ்ச்சிகள் முதலியவற்றை உள்ளீடாகப்

புகுத்தியும் எளிய முறையில் எல்லோர் உள்ளத்திலும் பதியுமாறு சொல்லி வருவதாகும்.

இதனால் விளைந்த நன்மைகளும் ஊக்கமும் பல என்றாலும் இப்பகுதி இலக்கியத்தைச் சார்ந்த நூல்களிலிருந்து வரலாற்று உண்மைகளை அறிந்து கொள்வது எளிதல்ல; ஆனால் வரலாற்று உண்மைகள் அடிப்படையில் இல்லாமலும் இல்லை.''[1]

இங்ஙனம விளக்கும் அவர் பிறிதோரிடத்தில் 'நரியைப் பரியாக்குவது' பற்றிக் குறிப்பிடுவது, இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. வாதவூரர் நம் நாட்டுக் குதிரைகளையே, சோனகர் கொணரும் குதிரைகளாக்க முயன்றார் — அஃதாவது வளர்ப்பு முறையால் உயர்ந்தவையாக்கி விட முயன்றார் என்றும், அதனைக் கண்ட மக்கள் 'வாதவூரர் நரியைப் பரியாக்க முயல்கின்றார்' என்று கூறி ஏளனம் செய்த சொற்களே நரிபரியாக்கிய கதைக்கு வித்தாகவுளது என்றும் அவர் குறிப்பிடுதல் காண்கிறோம். ''இயலாததை இயற்ற முன்வருவதை எள்ளுவோர் 'கருப்பை வெள்ளையாக்குதல்' என்பது போல 'நரியைப் பரியாக்குவது' என்பதும் ஒரு வழக்கு மொழியாகும்; இச்சொற்றொடர் தொன்று தொட்டுத் தமிழ்நாட்டில் வழங்கி வந்ததாகும்,'' என்பது அவர் கூற்று.[2]

## 7

**மா**ணிக்கவாசகர் வரலாற்றில் இருபெரும் செய்திகள் குறிப்பிடத்தக்கன. ஒன்று திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் இறைவனே ஞானாசிரியனாக வந்து அவரை

1. முந்து நூல், ப.21.
2. முந்து நூல், ப.57.

ஆட்கொண்டது; இரண்டு அவர் அரசன் குதிரை வாங்கக் கொடுத்த கோடிக்கணக்கான பொன்னை அடியவர்க்காக வும் திருப்பணிகட்காகவும் செலவிட்டு விட்டது.

பின்னைய நிகழ்ச்சியின் தொடர்பாக, அவர் குதிரை கள் வந்துவிடும் எனக் கூறி வாராமலும், வந்தவை நிலை பெறாமலும் போயினமையால் ஏற்பட்ட அவதூறுகள், பழிச்சொற்கள், பொய்யர் என உலகம் தூற்றியமை யாவும் அவர் தம் வாழ்க்கை வரலாறாக அமைந்து விட்டன.

குருந்த மரத்தடியில் காட்சியளித்த ஞானதேசிகரிடம் அவர் தம்மையே இழந்து விட்டார். அவருக்கு ஞான உப தேசம் செய்தபின் இறைவன் தம் மாணாக்கர்களோடு மறைந்து விட்டார்.

தம்மையே மறந்து அடிகள் தாம் கொண்டு வந்த பொருள் அனைத்தையும் அடியவர்கட்காகச் செலவிட்டுக் கொண்டிருந்தபோது, பாண்டியனின் தூதுவன் வந்து ஓலை ஒன்றைக் கொடுத்ததும் தான் அவருக்கு உலக ஞானம் — நினைவு திரும்பியது. இப்போது செய்வதற் கொன்று மில்லை. பொருள் எல்லாம் கைவிட்டுப் போய்விட்டது. அதனால் ‘வேந்தனுக்குத் தவறிழைத்த யான் எங்ஙனம் உய் வேன்’ என்று வாதவூரர் திருப்பெருந்துறை இறைவனிடம் முறையிட்டுப் புலம்பி அழுகின்றார்.

மேற்கூறிய செய்தி திருவாலவாயுடையார் திருவிளை யாடலிலும், பரஞ்சோதியார் வாக்கிலும் காணப்படுவதன் ஒரு பகுதியாகும். கடவுள் மாமுனிவர் மாணிக்கவாசகர் இரண்டாவது முறையாக, பாண்டியன் அவரது மெய்ஞ் ஞான மனவுணர்வை மதித்து வணங்கி வழியனுப்ப, திருப் பெருந்துறை சென்றார் எனக் கூறுகிறார். அப்போது, திருப் பெருந்துறையில் உள்ள சிவனடியார்கள் சிவனை நேரில் கண்டு

தரிசிக்க விரும்பித் தியானிப்பதால் தாமும் அங்கு போக விரும்புவதாகக் கூறுகின்றார். மாணிக்கவாசகரின் உடனிருந்த அடியவர்களும் மாணிக்கவாசகரும் இறைவன பிரிவைத் தாங்கும் ஆற்றலுடையோம் அல்லோம் என்று கூறி வருந்து கின்றனர். உடனே இறைவன் ''திருப்பெருந்துறையிலுள்ள திருத்தமாம் பொய்கையின் நடுவே ஒரு நாள் தீப்பிழம்பு வந்து தோன்றும். நீவிர் யாவரும் அத்தழலில் மூழ்கி நம்மை அடைந்து மகிழுங்கள்'' எனக்கூறித் தம்முடன் தொடர்ந்த அடியார்களை 'நின்மின்' எனக்கூறி மறைந்தருளினார். அவர் பிரிவை ஆற்றாத வாதவூரடிகளை, மீட்டும் குருந்த மர நிழலில் தனித்து, ஆறுதலுரை கூறி இறைவன் மறைந் தருள்கின்றான்.

சில நாட்களுக்குப் பின் இறைவன் பணித்த வண் ணமே திருத்தமாம் பொய்கையில் தீப்பிழம்பு தோன்று கிறது. அன்புடைய அடியார்கள் எல்லாம் அஞ்செழுத் தோதி அதனுள்ளே புகுந்தார்கள். சிவபெருமான் உமையுடன் விடை மீது தோன்றிக் காட்சியளித்தார். அடியார்களனை வரும் சிவகண நாதர்களாயினர். புத்தரை வாதில் வென்றும் சிவநெறியை நிலைபெறச் செய்தும் வரவே வாதவூரரை மட்டும் உலகில் இருக்கச் செய்ததாக இறைவன் அறி வுறுத்துகிறான். இவ்வாறு இரண்டாம் முறையாக மாணிக்க வாசகர் திருப்பெருந்துறை வந்தனர் எனக் கூறும் கூற்றுப் பொருத்தமுடையதன்று. இதனைத் தக்க காரணங்கள் காட்டி க. வெள்ளைவாரணர் மறுத்துரைப்பர்.[1]

## 8

*அங்ஙனமாயின் நடந்ததென்ன?*

---

*1. முந்து நூல், பக். 70,71.*

மாணிக்கவாசகருடன் பெருந்திரளான அடியார் கூட்டம் இருந்தது. இறைவன் அடியார்களுடன் வந்து ஆட்கொண்டான் என்றும் சிவகணங்களுடன் வந்தான் என்றும் தன் மாணாக்கர்கள் நடுவில் இருந்தான் என்றும் கூறப்படும் செய்திகள் நினையத்தகுவன. மாணிக்கவாசகருடனும் பிற அரசியல் அதிகாரிகள் பலர் வந்தனர் என்ற குறிப்பும் காணப்படுகிறது. அரசன் ஓலை வந்துற்ற போது அவர்கள் யாது செய்வோம் எனத் துணுக்குற்ற செய்தியும் கூறப்படுகிறது.

இறைவன் ஞானாசிரியனாக ஒரு முறை தான் வந்து தோன்றி, உபதேசம் செய்தபின் மறைந்தருளினார் என்பதை மாணிக்கவாசகர் தெளிவாகச் சுட்டுமிடங்கள் பலவுள.

''தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்ன கண் மாயமே''

''காணுமாறு காணேன் உன்னை அந்நாட் கண்டேனும்
பாணேபேசி என்தன்னைப் படுத்தென்ன பரஞ்சோதி''

''பொய்யனேன் அகம்நெகப் புகுந்தமு தூறும்
புதுமலர்க் கழலிணைஅடி பிரிந்தும்
கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்''

யாண்டும் மணிவாசகர் ஞான குருவைத் திரும்ப ஒரு முறை கண்டது பற்றிக் கூறினாரிலர். ஒருமுறை கண்ட அளவில் நேர்ந்த பிரிவிற்கே அவர் வருந்தி உருகுகின்றார்.

எனவே, மணிவாசகர் தம்முடன் இருந்த அடியார்கள் தீப்பிழம்பிற்புக, தாம் மட்டும் எஞ்சியிருந்து, திருவாசகம் பாடினர் எனவும், அரசனாலும் அதிகாரிகளாலும் பல அல்லல் களுக்கு ஆளாகிக் குற்றமற்றவர் என்ற நிலையை இறுதியில் எய்தினபின், தில்லை நோக்கிச் சென்று, புத்தரை வென்று,

இறை அருட்பேரொளியிற் கலந்தனர் எனவும் கருதுமாறு தான் நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. மணிவாசகரின் தன் வரலாற்றுக் குறிப்பும் இதனையே காட்டுகிறது.

மணிவாசகர் பிற்காலத்தே முன்பு நடந்த தம் வாழ்நாள் நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து பாடியன போலவே, அவர் தம் பாடல்கள் காணப்படுகின்றன. அவர் அவ்வப்போது நிகழ்ச்சிகளின் முடிவில் பாடியன எனப் புராணங்கள் கூறும் செய்திகள் பல கற்பனையாகத் தோற்றுகின்றன. திருப் பெருந்துறை விட்டுத் திரும்பி வந்து, பாண்டியனால் மதுரை யில் பல அல்லல்களுக்கு ஆளாகி தாம் குற்றமற்றவர் என மெய்ப்பித்துத் தில்லை சென்றது வரை அவர் இடை யிடையே ஒரு சில பதிகங்கள் பாடினார் என்பது மேலும் ஆராய்ந்து முடிவு கட்டுதற்குரியதாகும். பெரும் பகுதி பிற்படப் பாடியனவாகவே உள்ளன. எனவே தம் வாழ்க்கை நிகழ்வுகளைத் தொடர்புபட அல்லாமல், கலந்தும் வரிசை முறை மாற்றியும் ஆங்காங்கு — நினைவு கூர்வார் போலப் — பாடிச் செல்லுதலை அவர் தம் பாடல்களில் காண் கின்றோம்.

நாயினேனை நலமலி தில்லையுள்
கோலமார்தரு பொதுவினில் வருகஎன
ஏல என்னை ஈங்கொழித்தருளி
அன்று உடன்சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந்திலாதார் எரியிற் பாயவும்

என்னும் போது, இறைவருடன் சிலர் ஒன்றி மறைந்ததும் பிறர் பலர் எரியிற் பாய்ந்ததும் கூறப்படுகின்றன.

விச்சுக்கேடு பொய்க்காகாது என்று இங்கு எனை வைத்தாய்
இச்சைக்கு ஆனார் எல்லாரும் வந்துஉன் தாள் சேர்ந்தார்

என்பதற்குத் தத்துவப் பொருள் — உலகப் பொதுமை நோக்கில் கூறலாமாயினும், முற்கூறிய வரலாற்றுண்மை யும் அதனடியில் உளது.

இறைவனது பிரிவாற்றாது தலையன்பராகிய அடியார் பலர், உயிர் துறந்தனர். அவர்களுக்குச் சிவபெருமான் உமையொரு பாகராய்த் தோன்றிக் காட்சி தந்தார். அத் தகைய அடியவர்களைப் பிரிந்ததால் மாணிக்கவாசகர் கண் கெட்ட ஊரேறாய் உழல நேர்ந்தது.

''போரேறேநின் பொன்னகர் வாய்நீ போந்தருளி இருள்நீக்கி
வாரேறு இளமென் முலையா ளோடு உடன் வந்தருள
அருள் பெற்ற
சீரேறு அடியார் நின்பாதம் சேரக்கண்டும் கண்கெட்ட
ஊரேறாய் இங்கு உழல்வேனோ கொடியேன் உயிர்தான்
உலவாதே''

மற்றுமொரு திருச்சதகப் பாடலில் இறைவன் வேண்டு மென்றே தம்மை உலகில் இருத்திவிட்டு, மற்ற அன்பர் களைத் தம்பால் அழைத்துக் கொண்டார் என்ற செய்தி கூறப்படுகிறது.

பொருத்தம் இன்மையேன் பொய்ம்மை உண்மையேன்
போதஎன்று என்னைப் புரிந்து நோக்கவும்
வருத்தம் இன்மையேன் வஞ்சம் உண்மையேன்
மாண்டிலேன் மலர்க்கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கு எழுந்தருளி இங்கு எனை
இருத்தினாய் முறையோஎன் எம்பிரான்
வம்பனேன் வினைக்கிறுதி இல்லையே

''நான் பொருத்தமற்றவன், பொய்யன் நான் மாண்டி லேன். நீயும் உன் அருள்பெற்ற அடியவரும் வானுலகு

சென்ற பிறகும் என்னை மட்டும் இங்கு இருத்தி' என இவண் விடுத்துப் போயினமை முறையோ'' என வினவு கிறார் மணிவாசகர். இறைவன் அங்ஙனம் இருத்தியதன் காரணம் என்ன என்பதை அவர் யாண்டும் வெளிப்படக் கூறவில்லை.

''முனைவன் பாதநன்மலர் பிரிந்திருந்து நான்
முட்டிலேன் தலைகீறேன்'' (37)

''ஏனை யாவரும் எய்திடலுற்று, மற்றின்னதென்று அறியாத
தேனை ஆன்நெயைக் கரும்பினின் தேறலைச் சிவனை
என் சிவலோகக்
கோனை மான்அன நோக்கிதன் கூறனைக் குறுகிலேன்
நெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின்றேன் கெடுவேன் உயிர்
ஓயாதே (38)

இறைவன் உலகில் இருக்கக் கூறியது அங்கேயே தங்கி விடுவதற்கு அன்று. மீட்டு ஒருகால் மற்றைய அடி யார் போல அரனடி அடைவதற்கேயாம். அங்ஙனம் இறை வன் கூறியவாறு, உலகில் தங்கி விட்ட மணிவாசகர் — பிற அடியார்களோடு ஒன்றிக் கலந்தோ, எரியிற் பாய்ந்தோ செல்லாத மணிவாசகர் — நெடுங்காலமாகியும் தாம் இறை யருள் பெற்றுய்யாமையை எண்ணி ஏங்குகிறார். சில பாடல் களில் அக்கருத்தும் வெளிப்படுகிறது.

''வருக என்று பணித்தனை, வானுளோர்க்கு ஒரு வனே, கிற்றிலேன், கிற்பன் உண்ணவே'' *(41)* என்பதுஅவர் வாக்கு. கிற்றிலேன், கிற்பன் என்ற சுருக்கச் சொல்லாக் கங்கள் கருதத்தக்கன. வருக கிற்றிலேன், உண்ண கிற்பன் என்பது பொருளாகும்.

''யார்க்கும் அரும்பொருள்
எல்லையில் கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வகை மனத்தேன் பட்ட கட்டமே'' 52

என்னும் போதும் பிற இடங்களிலும் இறைவனுடன் அன்றே ஒன்றிக் கலந்து போகாத பிரிவு அவலத்தை மணிவாசகர் மிக உருக்கமாக எடுத்துக் கூறுகிறார்.

செய்வதறியாச் சிறுநாயேன்
செம்பொற்பாத மலர்காணாப்
பொய்யர் பெறும் பேறத்தனையும்
பெறுதற்குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
மேவக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்யனேன்நான் உண்டுடுத்து இங்கு
இருப்பதானேன் போரேறே 52

''தென்தில்லைக்
கோனே உன்றன்திருக்குறிப்புக்
கூடுவார் நின்கழல்கூட
ஊனார் புழுக்கூடு இது காத்திங்கு
இருப்பதானேன்'' 55

உடையார் உடையாய் நின்பாதம்
சேரக் கண்டிங்கு ஊர்நாயிற்
கடையேன்—புழுக்கூடு காத்திங்கு
இருப்பதாக முடித்தாயே 56

மணிவாசகருக்கு இறைவன் கண்காணத் தோன்றி அருளியது போலவே, அவரை உலகில் இருக்கச் செய்து, பிற அடியார்களைத் தம் அருளில் கலக்கச் செய்த இறைச் செயலும் அவர்தம் சொந்த வாழ்வில் நிகழ்ந்தது என மேற்கண்ட சான்றுகள் பலவும் பறைசாற்றுகின்றன. அங்ஙனமாயின் அந் நிகழ்ச்சிக்குக் காரணம் யாது என்பது அரியதற்பாலது.

மேலே காட்டிய திருவாசக அகச் சான்றுகளால் மூன்று செய்திகள் அறியப்படுகின்றன:

1. மாணிக்கவாசகருக்கு இறைவன் திருப்பெருந்துறையில் நேரில் வந்து, ஞானாசிரியனாக உபதேசித்துப் பிரிந்து சென்றான்.
2. பிரிந்து சென்ற போது பல அடியார்களை வானுலகிற்கு அழைத்துக் கொண்டான்; திருத்தம் என்ற திருக்குளத்தில் நெருப்புப் பிழம்பு தோன்றும் போது அதில் புகுந்து, பூதவுடல் நீத்துப் போதவுடல் பெற அருளினான்.
3. மாணிக்கவாசகரை மட்டும்,தனித்து, 'உலகில் இருக்க' என்றும் இறுதியில் 'தில்லை வருக' என்றும் பணித்தான். அவர் பல காலம் உலகிலிருந்து, சோதனைகட்கு ஆளாகித் தில்லை சென்று, இறைவெளியிற் கலந்து இன்புற்றார்.

மாணிக்கவாசகர் காலம் எட்டாம் நூற்றாண்டு, அவரைப் பற்றிய முதல் புராண நூல் திருவாலவாயுடையார் திருவிளையாடல். தோன்றிய காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு. செவிவழிக் கதைகளோடு, முற்காட்டிய திருவாசக அடிகளையும் சான்றாகக் கொண்டே புராணக் கதைகள் கற்பிக்கப்பட்டன. எனவே அவ்வகச் சான்றுகளின் அடிப்படையில் நாம் ஒரு முடிவுக்குவர வாய்ப்புளது.

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகரும் சிவனடியார் திருக்கூட்டமும் சேர்ந்தே, பாண்டியன் கொடுத்த பெரும் நிதியத்தைச் சிவபுண்ணியச் செயல்களில் செலவழித்தனர். பாண்டியனுடைய 'ஓலை' வந்துற்ற போது, அனைவரும் துணுக்குற்றுத் திகைத்தனர். செய்வதறியாத அந்த மெய்யன்பர்கள் இறையருளுக்குப் பாத்திரமாகித் தீப்பிழம்பிற் புகுந்து சிவனுலகு சேர்ந்தனர்.

மாணிக்கவாசகரை அன்று இறைவன் 'இவ்வுலகில் இருத்தியது' கண்ணகியைக் கோவலன் 'இருந்தைக்க' என்பதற்கு நிகராகும்.

மன்னன் தந்த அரசின் பொர்ருளைச் செலவிட்ட தவற்றுக்கு முதற் காரணமான மணிவாசகரும், துணைக் காரணமாக நின்ற பிற அடியவர்களோடு இறையருளிற் கலந்திருப்பராயின் இவர்கள் அனைவரும் செய்தது 'பொய்ம்மையே அன்றோ' என உலகம் எள்ள நேரும். எனவே சோதனைகட்கு ஆட்பட்டு, பொய்ம்மை அன்று என மன்னனே ஏற்கும் வரை சோதனைகளை ஏற்றுப் பிறகு மாணிக்கவாசகர் தில்லை சென்றதே ஏற்புடைய செயலாகும். எங்ஙனம் கண்ணகி தலையாய கற்பு என எண்ணக் கணவனுடன் உடன் உயிர் நீந்து விடாது பின்னும் இருந்து கணவன் குற்றமற்றவன் என மெய்ப்பித்தபின் உயிர் நீத்ததே கற்புடையாள் ஒருத்தியின் பொற்புடைய செயலாகும். மாணிக்கவாசகரும் அன்றே இறையருளில் கலந்து விட்டவர்களைத் தலையாய அன்பினர் என ஓரிடத்தில் குறிக்கின்றார். தாமும் தலையாய அன்பினர் என்பதை அவர் நிலைநாட்டக் கருதி, பிற அனைவருடனும் ஒருசேர மாய்ந்து விடாமல், பல காலம் இருந்து, நலிந்து வருந்தினாரேயாம் — அங்ஙனம் அவர்க்கு ஏற்பட்ட அனுபவமே சிவ அனுபவமாக விளைந்தது — 'உலகம் பொய்யடிமை இல்லாத புலவர்' எனப்போற்ற வாய்ப்பு ஏற்பட்டது.

இங்கு மாணிக்கவாசகரும் உடனிருந்த அடியவர் கூட்டமும் அனைவருமே, குதிரை வாங்க வேண்டிய நிதியத்தை, அரசன் இசைவின்றித் தம் மனநிலைக்கேற்பச் செலவிட நேர்ந்தமை முறையன்று. மீண்டும் அரசனுக்கு ஆவணி மூல நாளில் குதிரை வருமெனக் கூறியது போன்றவையும் அவ்வாறே. அரச நிதியைத் தம் நிதியைப் போல செல

வழித்தது, குதிரை வருமெனக் கற்பித்துக் கூறியது, நரி களைக் குதிரைகளாகக் காட்டியது என இது நீள்கிறது. எனவே இவை பொய்ம்மையல்ல என மெய்ப்பித்தல் கடனாகிறது. மாணிக்கவாசகர் உள்ளிட்ட அடியவர்களின் பிழையின் மையை, அச்செயலின் மூலகாரணமான மாணிக்கவாசகர் தான் மெய்ப்பித்தார். எனினும் இங்கு 'பொய்யடிமை இல்லாத புலவர்' என்பதை, மாணிக்கவாசகரை மட்டுமன்றி, அவ ரோடு துணை நின்ற அனைத்து அடியார்களையும் பொது வாகவும், அவர்க்கெல்லாம் தலைநின்று, தவற்றை முழுவ தும் தன்மேலிட்டுக் கொண்டு, அத்தவற்றுக்குத் தீர்வு கண்ட தலையாய அடியாராம் மாணிக்கவாசகரைச் சிறப்பாகவும் குறிக்கும் என்பதே பொருத்தமாகும். இவ்வகையில் திருவாச கத்தைத் தோய்ந்து கற்ற மறைமலையடிகளார் கருத்தும் அவர்தம் வரலாறுகளனைத்தும் கற்று ஆராய்ந்த க. வெள்ளை வாரணர் கருத்தும் முரண்பட்டன அல்ல என்பது போதரும். எனினும் சிறப்பாக அது மாணிக்கவாசகரையே குறிக்கும் என்பது உளங்கொளத்தக்கதாகும்.

## 10

இங்ஙனம் கூறுவதால் மாணிக்கவாசகரை மாற்றுக் குறைத்து மதிப்பிட்டது ஆகாது. அவர் வாழ்வில் இது அற்புதச் செயலாக நடந்து விட்டது; அதிசய நிகழ்ச்சியாக நடந்து விட்டது. சிந்தனையை வந்துருக்கிய அந்தணரைக் கண்ட தும் அவர் செயல் மாண்டது; நான் என்பதும் கெட்டது; முற்றிலும் ஞானகுருவின் வயமானார் அவர்.

ஞானகுருவால் ஞானம் பெற்றதும் அவருக்கு வைத்த நிதி பெண்டிர் சுற்றம் எதுவுமே பற்றுக் கோடாகத் தோன்ற வில்லை. தம்மைப் பிச்சன் ஆக்கிவிட்டதாக, உன்மத்தன் ஆக்கி விட்டதாக அவர் திரும்பத் திரும்பக் கூறுகிறார்.

பாண்டியனின் பொன்னைத் தம் விருப்பப்படி செல விட்டது தவறு என்பதை வாதவூரரே நன்கு உணர்கிறார். எனவே அதற்காக நாம் சப்பைக்கட்டுக் கட்டவோ, துணை நிற்கவோ வேண்டியதில்லை. உலகம் பழிப்பதை, சிரிப் பதை மனத்திண்மையோடு எதிர் கொள்கிறார். சாதாரண மக்கள் மிகச் சாதாரணமான காரணங்களுக்காகச் செய்யும் பிழைக ளுடன் இதை ஒப்பிடக் கூடாது. தம்மை அறியாமல் செய்த பிழைக்காக மாணிக்கவாசகரளவு வருத்தப்பட்டவர்களும் உலகில் யாரும் இருக்க மாட்டார்கள்.

அதனால்தான் இப்பிழைக்குக் காரணம் இறைவனே என்பதை அவ் இறைவனிடமே முறையிட்டு முறையிட்டு உணர்த்துகிறார். பாண்டியனின் தண்டனைகளை ஏற்று, அற வழியில் போராடி வெற்றி பெறுகிறார். உலகம் அவரைப் பொய்யர் அல்லர் என உணர வைக்கின்றார்; அதன் பின்பே தில்லை செல்கிறார்.

பாண்டியனும் மக்களும் அவரை மதித்துப் போற்றும் காலம் விரைவிலேயே வந்து விடுகிறது. 'தற்காத்து, தற் கொண்டாற் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர் விலாள் பெண்' என்ற வள்ளுவம் கண்ணகி வரலாற்றில் மட்டுமன்று. வாதவூரர் வாழ்விலும் எடுத்துக்காட்டத்தகும் இடத்தைப் பெற்றது.

அன்று, வாதவூரரை 'உலகில் தங்கித் தில்லைக்கு வருக' என ஆண்டவன் பணித்ததும், பிற அடியவர்கள் எல் லாம் தீயில் புகுந்ததும் மயக்கம் எய்தியும் கடலில் புகுந்தும் மறைந்த செய்திகளும் மீட்டும் ஒருமுறை நினையற்பாலன.

நாயினேனை நலம்மலி தில்லையுள்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருகஎன
ஏல என்னை ஈங்கு ஒழித்தருளி

அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந்தருளியும்
எய்தவந்திலாதார் எரியிற் பாயவும்
மாலது ஆகி மயக்கம் எய்தியும்
பூதலம் அதனில் புரண்டுவீழ்ந்தலறியும்
கால்விசைத்து ஓடிக் கடல் புக மண்டி
நாத நாத என்றழுது அரற்றிப்
பாதம் எய்தினர் பாதம் எய்தவும் 2:127-137

புராணங்கள் உண்மைக்குக் கொடுக்கப்பட்ட மாற்று வடிவங்களாகும். அவை பொய்ம்மைகள் அல்ல. புராணம் — தொன்மம் ஒருவகை உண்மை என்பர் ஒப்பியலார் அவை வரலாற்றுண்மைகள் அல்ல. வரலாற்றை அறியும் போதுதான் உண்மையின் ஒளி நேரே புலனாகிறது. மாணிக்கவாசகர் வாழ்வில் ஏற்பட்டுவிட்ட மிகப்பெரிய சோதனையை, உள்ளபடியே நினைந்து பார்ப்பதால், அவர் பாலுள்ள மதிப்புக் கூடுகிறதே தவிரக் குறையவில்லை. அவர் வாழ்விலேற்பட்டுவிட்ட அற்புத நிகழ்ச்சியால் இன்பமும் விளைந்தது; துன்பமும் விளைந்தது.

அத்துன்பத்தை மறைப்பானேன்? அதுதான் அவருடைய வாழ்வில் ஏற்பட்ட, அளவற்ற உருக்கத்திற்குக் காரணம்; அவர் தூய — மிகத் தூய மெய்யடியார் ஆனதற்குக் காரணம்; அவர் உலகத்தாரின் போற்றுதலுக்கு - ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு - புகழோங்கியதற்குக் காரணம்.

எனவே 'பொய்யடிமை இல்லாத புலவர்கள்', முன்னைய கீர்த்தித் திருஅகவலில் கூறப்பட்ட அடியவர்களே, மாணிக்கவாசகர் உள்ளிட்ட மெய்யடியார்களே என்பது தவறாகுமா?

மேலும் அறிஞர்கள் சிந்திப்பார்களாக!



இவர் சங்க இலக்கிய ஆய்வு மாணவர். தமிழ் ஒரு செவ்வியல் மொழி என்பதற்கான ஆதார நூல்களை கிரேக்கம், இலத்தின், சமற்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் இலக்கியக் கொள்கை களுடன் ஒப்பிட்டு 25 ஆண்டுகளுக்கு முன்பே நூல்கள் பல எழுதியவர். 43 ஆண்டு ஆசிரியப் பணியினர். பவளவிழா அகவையினர்.

மழலையர் முதல் ஐந்தாம் வகுப்பு முடிய, அனைத்துப் பள்ளிகளிலும் தமிழே பாடமொழி, பயிற்றுமொழியாதல்' வேண்டும். ஆறாம் வகுப்பு முதல் பல்கலைக்கழக ஆய்வு முடிய, தமிழைப் பயிற்று மொழியாக்கித் தொடர்புமொழியாக ஆங்கிலத்தைச் சிறந்த முறையில் கற்பிக்க வேண்டும். பட்டப்படிப்பு முடிய, தமிழை ஒரு பாடமாகக் கூடப் படிக்காமல் வெளியேற வழிசெய்யும் ஆணைநீக்கப்பட்டு, தமிழ்மொழிப் பாடத்தை, அனைத்துக் கல்வி நிலையிலும் கட்டாயமாக்க வேண்டும். 'தமிழ்வழிக் கல்விக்கென' ஒரு தனிப் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும். திருக்கோயில், உயர்நீதிமன்றம், ஆட்சி அலுவலகம் அனைத்திலும் தமிழை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

உலகெங்குமுள்ள இம் மொழிக் கொள்கை, இங்கே மட்டும்தான், அறவே முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளது.

தொலைநோக்குடன் சிந்தித்தால் தமிழ் இன்று எழுதப்படிக்கத் தெரியாத மொழியாகி வருகிறது. எம்மொழிக்கு மில்லாத இழிவுகள், இங்கே தமிழ்ச் செம்மொழிக்கு இன்னமும் உள்ளன.

'தமிழுக்கு இது இருண்டகாலம்' எனத் தொலைநோக்குப் பார்வையுடன், அழுத்தமாக வழக்காடுவதாலேயே, போற்றவேண்டிய வர்களாலேயே, மாற்றுக் கருத்தினர் எனப் புறக்கணிக்கப்படுபவர். ஆயினும் உலகெங்குமுள்ள பல நூறாயிரத் தமிழ்நெஞ்சங்களில் இடம்பெற்றிருப்பவர், இத் தமிழண்ணல்.